ஈழமும்
தமிழும் (4)

ஈழத்தில் கிடைக்கப்பெறும்
அதிபழைய விலாச நாடகம்

தால விலாசம்

ஞானம் பாலச்சந்திரன்

ஞானம் பதிப்பகம்

ஈழமும் தமிழும் (4)

தால விலாசம்

– ஈழத்தில் கிடைக்கப்பெறும் அதிபழைய விலாச நாடகம்

ஞானம் பாலச்சந்திரன்

ஞானம் பதிப்பகம்

ஞானம் வெளியீடு : 38

SL Rs. 300/-

US $ 3

ஈழமும் தமிழும் (4) – தால விலாசம்

ஞானம் பாலச்சந்திரன்

1ஆம் பதிப்பு. டிசம்பர். 2015

Eelamum Thamilum (4) - Thala Vilasam

Gnanam Balachandran
(balag.lk@gmail.com)

First Edition, Dec. 2015

Designed & Published By: Gnanam Pathippakam, 3B, 46th Lane, Colombo 06, Sri Lanka.
Tel: 0094 11 2586013, Fax: 0094 11 2362862. Email: editor@gnanam.info
Printed by: Kumaran Press (Pvt) Ltd. 39, 36th Lane, Colombo 06, Sri Lanka.

Pages 120 (viii + 112)

ISBN 978-955-8354-61-2

PUBLIC DOMAIN

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

தமிழ்ப் புலவர்களின் சரிதங்களை
முதலில் தொகுத்தவரான

சைமன் காசிச்செட்டி

(1807–1860)
அவர்களுக்கு

இந்நூல் சமர்ப்பணம்

பதிப்புரை

தமிழர்தம் பண்பாட்டுக் கோலங்களைப் பதிவுசெய்வதில் தமிழிலக்கியங்கள் பெரும்பங்காற்றி வந்துள்ளன. கோவலனைப் பிரிந்த கண்ணகி, அறவோர்க்கு அளித்தலும், அந்தணரைப் பேணுதலும், துறவிகளை எதிர்கொள்ளலும், வருவோருக்கு விருந்தளித்தலும் ஆகிய இல்லற தர்மங்களை ஆற்றமுடியவில்லையே என வருந்தியதை சிலப்பதிகாரத்தில் கண்டு நாம் உவகைகொள்கின்றோம். புறாவுக்காகச் சிபிச் சக்கரவர்த்தி தன் தசையை அளித்தமையும் பசுக்கன்றுக்கு ஈடாக மநு தன் மகனைத் தியாகம் செய்ததையும் எண்ணி இறுமாப்புக்கொள்கின்றோம். இவை தமிழர்தம் உன்னதப் பண்பாட்டின் விழுமியங்கள். இத்தகைய விழுமியங்கள் பல எமக்கு இலக்கியங்களுக்கூடாகக் கடத்தப்பட்டுவந்துள்ளன.

பனைமரத்துக்கும் ஈழத்து மக்களுக்குமான நெகிழ்வுதரும் பண்பாட்டுத் தொடர்பானது ஒப்புவமையற்றது. குழந்தையாய் பனையோலைத் தடுக்கில் தவழ்ந்து, கூடிப் பனங்கட்டிக்கூழ் குடித்து, ஓடியல்மா பிட்டு உண்டு, குஞ்சுப் பெட்டியில் சேமித்து, கொட்டைப் பெட்டியில் காசுபணம் புழங்கி, கூரைதனை வேய்ந்து, வேலிச் சண்டையில் பிரிந்து, 'கள்' குடித்த களிப்பிலே கூடி, களைத்தபோது பாயில் உறங்கி, கடைசிவரை ஈழத்தவரின் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பனை மரங்கள் இவர்களோடு உறவாடி வந்துள்ளன. இந்தப் பிணைப்பானது உணர்வு பூர்வமானது. விழியோரங்களைக் கசியவைப்பது; உயிர் சிலிர்க்க வைப்பது.

ஈழத்துக்கும் தாலத்துக்குமான (பனைக்குமான) உணர்வுகலந்த இந்தப் பண்பாட்டுப் பிணைப்பை பல இலக்கியங்கள் ஆவணப்படுத்திவந்துள்ளன. தால புராணம், பனை இராசன் நாடகம், தால புரத்தார் கீதம், பனைமர சோபனம், பனை நூறு, தனிப்பாடல்கள், நவீனங்கள், சிறுகதைகள் என பல இலக்கியப் படைப்புகள் 18ஆம் நூற்றாண்டுதொடங்கி இற்றைவரை எமக்குக் கிடைக்கின்றன. நான்கு நூற்றாண்டுகளாக ஒரு மரத்தைப் பற்றிய இத்தனை எண்ணிக்கையான இலக்கியங்கள் வேறெந்த மொழியிலோ வேறெந்தத் தேசத்திலோ எழுந்திருக்க வாய்ப்பில்லை.

எமக்குக் கிடைக்கப்பெறும் பனைமரங்கள் சார்ந்த இலக்கியப்படைப்புகள் அனைத்திலும் முந்தியதாக அமைவது 18ஆம் நூற்றாண்டில் எழுந்த **தால விலாசம்** ஆகும். எம்மால் தவறவிடப்பட்ட தால விலாசத்தை மீட்டெடுக்கும் முயற்சியாக ஞானம் பாலச்சந்திரனின் இந்நூல் அமைகின்றது. ஈழத்தவரின் பண்பாட்டுக்கோலங்களை ஆவணப்படுத்துவதற்கும் ஈழத்து இலக்கியத்தின் சிறப்பை நிலைநாட்டுவதற்கும் இந்நூல் பங்களிக்கும்.

இந்நூலுக்குப் பெருமைசேர்க்கும் வகையில் அணிந்துரை வழங்கிய பேராசிரியர் துரை மனோகரன் அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம். சஞ்சிகைப் பணிக்கும், நூல் பதிப்புப் பணிக்கும் ஆதரவு நல்கிவரும் வாசக அன்பர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி என்றும் உரியது.

தி. ஞானசேகரன்

'ஞானம்' பதிப்பகம்', 3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு – 06, இலங்கை.
editor@gnanam.info

அணிந்துரை

தமிழ்நாட்டு இலக்கிய வரலாற்றைப் போன்றதொரு நீண்ட வரலாறு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்குக் கிடையாது எனினும், ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறும் தனித்துவமானது. ஈழத்துப் பூதந்தேவனாரோடு அவ்வரலாறு தொடங்குகிறது என்பது பொதுமரபு. ஆயினும், கி.பி.14ஆம் நூற்றாண்டில் இருந்து தொடர்ச்சியான இலக்கிய வரலாற்று வளர்ச்சியை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு கொண்டிருக்கிறது. அதேவேளை, தனக்கெனத் தனித்துவமான இலக் கியப் பண்புகளையும், போக்குகளையும் கொண்டு அது வளர்ந்துவந்துள்ளது. தமிழ்கூறு நல்லுலகம் பெருமைப்படக்கூடிய படைப்பாளிகளையும், அவர்களது குறிப்பிடத்தக்க படைப்புகளையும் ஈழத்துத் தமிழ் இலக்கியம் கொண்டுள்ளது.

ஈழத்தில் தோன்றிய தமிழ்நூல்கள் பல இன்று கிடைக்கின்றன எனினும், கிடைப்பதற்கரிய நூல்களின் பட்டியல் ஒன்றும் இருந்துகொண்டே இருக்கிறது. இன்று கிடைப்பதற்கரிய நூல்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணி என்பது கடினமான ஒன்று. ஆர்வமும், அயராத உழைப்பும், சலிக்காத உள்ளமும், ஆய்வுநோக்கும் அதற்கு அவசியம். இத்தகைய அம்சங்களை இயல்பாகவே கொண்ட ஞானம் பாலச்சந்திரன், அண்மைக் காலமாக ஈழமும் தமிழும் தொடர்பான தேடல் பணியில் தம்மை ஈடுபடுத் திக்கொண்டுள்ளார். தமது மூதாதையர் வழிவந்த தமிழ் ஆர்வமும், தாம் விருப்புடன் பெற்ற அறிவியல் அறிவும், தமக்கே உரித்தான தனி ஆளுமையும் ஒருமித்துச் சங்க மிக்க, பாலச்சந்திரன் இத்தகைய அரும்பணியில் ஈடுபட்டு வருகிறார். இளைஞர் ஒருவர் இவ்வாறான பணியில் துணிந்து இறங்குவது என்பது சாதாரண விடயம் அல்ல. அதற்கு அளவற்ற பொறுமையும், நிதானமும் அவசியம். இவை இயல்பாகவே அவரிடம் உள்ளன. இலங்கை மத்தியவங்கியின் கணினிவழி குற்றத்தடுப்புப் பிரிவு (BankCSIRT - Bank Computer Security Incident Response Team) முகாமையாளராகத் தொழில் புரியும் அவர், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் எமது உயர்பட்ட மாணவராக வும் விளங்குகிறார்.

ஏற்கனவே ஈழமும் தமிழும் என்னும் தொடரில் **யாழ்ப்பாண மன்னர் நிறுவிய தமிழ்ச்சங்கம்**, **சைமன் காசிச்செட்டியின் அகராதி முயற்சிகள்**, ஈழத்தின் முதலாவது வானசாஸ்திர நூல் **கிரகசார எண்ணல்** ஆகிய நூல்களைப் பாலச்சந்திரன் தந்துள் ளார். அவை இத்துறையில் அவரது ஆர்வத்தையும், ஆற்றலையும், ஆளுமையையும் நன்கு புலப்படுத்துகின்றன. அதேவேளை, ஞானம் சஞ்சிகையில் **முந்தையோர் ஈழத்தவரே** என்ற தொடரையும் அவர் எழுதிவருகிறார். அதுவும் எதிர்காலத்தில் நூல் வடிவம் பெறவேண்டும்.

இந்நூல் ஈழமும் தமிழும் என்னும் அவரது தொடர்நூல்களில் நான்காவதாகும். ஈழத்தில் 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய **தாலவிலாசம்** என்னும் நூல் பற்றியதாக இது விளங்குகிறது. பலரால் அறியப்படாதிருந்த இந்நூல் பற்றிய விபரங்களைத் தமது

தணியாத ஆர்வத்தினாலும், உழைப்பினாலும் சேகரித்துத் தமிழ் உலகுக்குப் பாலச் சந்திரன் வழங்கியுள்ளார். தாலவிலாசம் பற்றிய முழுத் தகவல்களையும் சேகரித்தது மாத்திரம் அன்றி, அவற்றை அக்குவேறு ஆணிவேறாக ஆய்வுசெய்து, அந்தநூல் பற்றிய பூரணமான பதிவினைத் தந்துள்ளார்.

பனை பற்றிய விபரங்களை இலக்கிய வடிவில் தரும் புதுவகை நூலாகத் தாலவிலாசம் விளங்குகிறது. இந்நூல் பற்றி முதன்முதலில் அறியத்தந்தவர், சைமன் காசிச்செட்டி. அவர் அந்நூல்பற்றி அறியத்தந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, பேர்குசன் என்பவர், தாலவிலாசம் நூலின் ஆசிரியர் கும்பகோணத்தைச் சேர்ந்த அருணாசலம் என்று தமது ஆங்கில நூலில் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு, தாலவிலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினையும் தமது நூலின் பின்னிணைப்பில் அவர் சேர்த்துள்ளார். 1864இல் மோடி என்பார் பனை பற்றிய தமது ஆங்கில நூலில், ஈழத்தில் மிகவும் உன்னதநிலையில் போற்றப்பட்ட கவிதையாகத் தால விலாசத் தினைக் குறிப்பிட்டுள்ளார். வேறு சில மேலைத்தேய அறிஞர்களும் இந்நூல் பற்றிய பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். தாலவிலாசம் இத்தாலிய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தாலவிலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினை அடியொற்றிச் சோமசுந்தரப்புலவர் தாலவிலாசம் என்ற தமது நூலினை ஆக்கியுள் ளார். 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய தாலவிலாசம் வேறு, 19ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட அச்சுவேலி நீ.காசிநாதப்புலவரின் தாலபுராணம் வேறு. இவை போன்ற பல்வேறு விடயங்களையும் நூலாசிரியர் விரிவாகத் தந்துள்ளார்.

பனை பற்றி வெளிவந்த நூல்களையும், இலக்கியங்களையும், அவை பற்றிய விபரங்களையும் நூலில் தந்துள்ளதோடு, தாலவிலாசம் நூல்பற்றி ஆழமாகவும், அகலமாகவும் தமது நுண்மாண்நுழைபுலம் கொண்டு சிறப்பாக நோக்கியுள்ளார். தமக்குக் கிடைத்த ஆதாரங்களைக்கொண்டு, தமது திட்டவட்டமான முடிவுகளை யும் நூலில் தெரிவித்துள்ளார். எவ்விடயத்தினையும் பாலச்சந்திரன் தெளிவாகவும், ஆழமாகவும் நோக்கவும், விளக்கவும் தெரிந்தவர் என்பதை நூல் முழுவதிலும் பரக்கக் காணலாம். நூலில் தாலவிலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினையும் தந்திருப்பது வரவேற்கத்தக்கது.

இது போன்ற முயற்சிகளை ஞானம் பாலச்சந்திரனிடம் இருந்து தொடர்ந்தும் எதிர்பார்க்கிறேன். அவர் ஈழத்து இலக்கியம் தொடர்பாகத் தொடர்ந்து செய்துவரும் இத்தகைய முயற்சிகளுக்காக இன்றைய பரம்பரையும், எதிர்காலப் பரம்பரையும் அவரை நன்றியுடன் பாராட்டும். ஈழமும் தமிழும் நூல்வரிசையைத் தொடர்ந்து வெளி யிட்டுவரும் ஞானம் பதிப்பகமும் பாராட்டுக்கு உரியது.

பேராசிரியர் **துரை மனோகரன்**
(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

பகுதி – 1

தால விலாசம் –

(18ஆம் நூற்றாண்டு)

1

ஈழமும் தாலமும்

தீலம், புற்பதி, போந்தை எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறும் **பனைமரங்கள்,** ஆசியாக் கண்டத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஈழத்திலே பனைமரங்கள் பண்டையகாலம்தொட்டு இருந்துள்ளன என்பதைப் பதிவுகளின் வாயிலாக அறியமுடிகிறது.

அவற்றிலும் **யாழ்ப்பாணத்திலே** செறிவாகப் பனைமரங்கள் வளர்க்கப் படுகின்றன. இதற்கு, யாழ்ப்பாணத்தவரின் வாழ்க்கையுடன் பனை மரங்கள் பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுவதே காரணமாகும். யாழ்ப்பாணத்தவரின் வாழ்வியலில் உணவு தொடங்கி உறையுள் வரையான அடிப்படைத் தேவைகளுட்பட, களிப்பூட்டும் 'கள்' மதுபானம்வரை பனைகள் பங்குவகிக்கின்றன.

17ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த **ரொபர்ட் நொக்ஸ்** (Robert Knox) அவர்கள், பனைமரங்களிலிருந்து ஈழத்தவர்கள் பயன்பெறும் விபரங்களை வியந்து, பதிவுசெய்துள்ளார். ஈழத்திலே 20 ஆண்டுகள் பணிபுரிந்த ரொபர்ட் நொக்ஸ், 1681ஆம் ஆண்டு An Historical Relation of the Island Ceylon என்னும் நூலை எழுதியுள்ளார். இந் நூலிலே பனைமரங்களைப் பற்றிய பல குறிப்புகளைத் தந்ததுடன் 'மழைபெய்யும் சந்தர்ப்பங்களில் ஒரு பனையோலையானது 15-20 மனிதர்களை நனையாமல் வைத்திருக்கவல்லது' என்று வியந்து குறிப்பிட்டு, அதற்கான ஒரு வரைபடத்தையும் தனது நூலில் இணைத்துள்ளார். மேலைத்தேயவர் ஒருவருக்கு, பனைமரங்களுடன் ஈழத்தவர்கள் கொண்டிருந்த அளவுகடந்த இணைப்பானது வியப்பினை அளித்தமையை இப்பதிவு காட்டுகின்றது.

Robert Knox
(1641-1720)



AN
Hiſtorical Relation
Of the Iſland
CEYLON,
IN THE
EAST-INDIES:
TOGETHER,
With an ACCOUNT of the Detaining in Captivity the AUTHOR and divers other *Engliſhmen* now Living there; and of the AUTHOR's Miraculous ESCAPE.
Illuſtrated with Figures, and a Map of the ISLAND.
By *ROBERT KNOX*, a Captive there near Twenty Years.
LONDON,
Printed by *Richard Chiſwell*, Printer to the ROYAL SOCIETY, at the *Roſe* and *Crown* in St. *Paul's* Church-yard, 1681.

Robert Knox –
1681 இல் இலண்டனில் வெளியிட்ட நூலின் அட்டைப்படம்

Tallipots – பனைமரங்கள்
The Rare use of the leaf – பனை ஓலையின் அபூர்வப் பயன்பாடு

The firſt is the *Tallipot*; It is as big and tall as a Ships Maſt, and very ſtreight, bearing only Leaves: which are of great uſe and benefit to this People; one ſingle Leaf being ſo broad and large, that it will cover ſome fifteen or twenty men, and keep them dry when it rains.

The Tallipot; the rare Uſes of the Leaf.

– Robert Knox, **1681,**
An Historical Relation of the Island Ceylon **(அத்தியாயம் 4, பக். 15)**

The manner of their sheltring themselvs from the Raine by the Tolipat leafe.

– Robert Knox, **1681,**
An Historical Relation of the Island Ceylon **(பக். 14–15)**

யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாணத் தமிழர்களையும் குறி யீட்டினால் அடையாளப்படுத்தும் சின்னமாகப் பனைமரங்கள் விளங்குகின்றன.

'ஈழத்தவரின் தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஏற்பட்ட தவறுகளை' எடுத்துரைக்கும் நூலுக்குக் குறியீடாக **முறிந்த பனை** *(The Broken Palmyra - 1988)* என்று தலைப்பிட்டமையை தமிழுலகம் அறியும்.

Rajani Thiranagama
(1954-1989)
(முறிந்த பனை நூலாசிரியர்களில் ஒருவர்)

தேசிய விடுதலைப் போராட்டத்தினால் ஈழத்தமிழர்கள் உலகெங்கும் விசிறப்பட்டனர். அவர்களால் படைக்கப்பட்ட இலக்கி யங்களைப் **புலம்பெயர் இலக்கியம்** என்று பொதுவழக்கில் அழைப்பர். புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் முதலாவது சிறுகதைத் தொகுதியை **இந்திரா பார்த்தசாரதியும் எஸ். பொன்னுத்துரையும் (எஸ்.பொ.)** இணைந்து 1994ஆம் ஆண்டு தொகுத்தனர். இச்சிறுகதைத் தொகுதிக்கு **பனியும் பனையும்** என்னும் தலைப்பிட்டமையானது பனைமரங்கள் குறியீட்டுச் சின்ன மாக்கப்பட்டதற்குப் பிறிதொரு உதாரணமாகும்.

இத்தலைப்பிலே **பனி** என்பது ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளையும் **பனை** என்பது ஈழத்தையும் குறியீடாகக் காட்டுகின்றன. 'நாடுகளைக் குறிக்கின்றது' என்பதைவிட குறிப்பிட்ட தேசங்களின் பண்பாடுகளையும் கலாசாரங்களையும் குறிக்கின்றன என்பதே பொருத்தம். இதுபற்றி எஸ்.பொ. அவர்கள் தமது நுழைவாயில் குறிப்பிலே விளக்கியுள்ளார்.

எஸ். பொ.
(1932-2014)

‘பனியும் பனையும்’ என்கிற தலைப்பே ஒரு குறியீடு தான். பனைமர மண்ணின் மணத்தையும், பண்பையும், உறவையும், தியானத்தை மறக்காத பரதேசிகள் நாங்கள். பனி பெய்யும் அந்நியச் சூழ்நிலைகளிலே, வாழ ஏர்வைப் பட்டுள்ளோம். புதிய நாடுகளிலே நமக்கு ஒரு தனித்துவ கலாசார Identity ஐத் தக்க வைக்கும் வேள்வியாகவும் நமது வாழ்க்கை அமைந்துள்ளது. எனவே, நமது படைப்புகளிலே பனையின் கலாசார வேர்களும், பனிக்குளிரின் புதிய நிர்ப்பந்தங்களும் சங்கமிக்கின்றன. புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களுடைய, சர்வதேசியப் பாங்கான இந்த முதலாவது தொகுதிக்கு இப்பெயர் நியாயமாகப் பொருந்தும்.

எஸ்.பொ., 1994
பனியும் பனையும், மித்ர வெளியீடு, [நுழைவாயில் – 2], [பக். 5]

பனைமரங்களைப் பாடுபொருளாகக்கொண்டு ஈழத்திலிருந்து பல இலக்கியப் படைப்புக்களும் நூல்களும் எழுந்துள்ளமையைக் காணமுடிகிறது.

*1972*ஆம் ஆண்டு **செங்கை ஆழியான்** எழுதிய **முற்றத்து ஒற்றைப் பனை** என்னும் நவீனமானது பனையை மையமாக வைத்து எழுதப்பட்டதாகும். இந்நாவலானது யாழ்ப்பாணத்தவருக்கு பனையுடன் காணப்படும் ஆத்மார்த்தத் தொடர்பைத் திறம்படப் படம்பிடித்துக்காட்டுகின்றது.

முற்றத்தில் நிற்கும் ஒற்றைப் பனைக்கும் மாரிமுத்தர் அம்மான் என்பவருக்குமான உறவை தத்ரூபமாக இந்நாவல் ஆவணப்படுத்திச் செல்லுகிறது. முத்தர் அம்மான் இல்லாத சந்தர்ப்பத்தில் அந்த வயதான ஒற்றைப் பனையானது தறிக்கப்படுகிறது. 'பனையானது தறிக்கப்பட்டதைக் கண்ட முத்தர் அம்மான், உடைந்துபோய் இறந்து விடுகிறார்' என்பது சுவைக்காக எழுதப்பட்ட நாவலின் முடிவல்ல. 'ஈழத்தவருக்கும் பனைகளுக்குமிடையேயுள்ள ஆத்மார்த்தத் தொடர்பினை இந்நாவலின் முடிவானது கட்டியம் கூறிற்று' எனலாம்.

படலை திறக்கப்படும் ஒலி. கையில் பிடித்த சூட்கேசுடன் முத்தர் அம்மான் நுழைந்தார். நிமிர்ந்த அவர் கண்முன்...

முற்றத்துப் பனை எங்கே? அதில் இருந்த விட்டம் எங்கே?...

நீண்ட நேரம் திகைத்துப்போய் அப்படியே சிலையாக நின்றிருந்தார்; உடல் மெதுவாக நடுங்கியது. விழிகள் கலங்கின.

''இப்போது எல்லாருக்கும் சந்தோஷம்தானே?... பொன்னு, நீயா இப்படிச் செய்தாய்...!''

உண்மையில் முத்தர் அம்மான் பேசியது இவ்வளவுதான். மெதுவாக நடந்துவந்து, தலைவாசல் வாங்கில் அப்படியே சரிந்தார்.

''பாயை விரிச்சிட்டுப் படுங்கோ..'' என்றாள், பொன்னுஆச்சி.

''பாயை ஏன்... பொன்னு! பாடையையே விரி...''

''ஐயோ...'' என்று பொன்னுஆச்சி அழுதாள்.

அலம்பல் காசிநாதர் திடுக்கிட்டுக் கண்விழித்தார். அதிகாலை நேரமாக இருக்கலாம், யாரோ பெருங்குரலில் அழும் ஒலி கேட்டது; படுக்கையை உதறிவிட்டு வெளியே ஓடிவந்தார்;

''ஐயோ... ஐயா... என்னை இப்படித்தவிக்க விட்டுட்டுப் போட்டியளே! என்ரை ராசா... ஐயோ...''

சந்தேகமில்லை; ஒப்பாரி வைப்பது பொன்னுஆச்சிதான்.

வேலிப் பொட்டுக்குள்ளால் புகுந்து ஓடிவந்தார்;

வெட்டிச் சாய்த்த பனை மரமாக வாங்கில் நீட்டி நிமிர்ந்து மாரிமுத்தர் அம்மான் கிடந்தார்.

பொன்னுஆச்சி கதறிக்கதறி, தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு அழுதாள்.

ஊரே முத்தர் அம்மான் வீட்டில் திரண்டது.

—மாரிமுத்தர் அம்மான் என்ற ஒரு பெரும் கலைஞனை வன்னூர் பண்ணை இழந்தது;

முற்றத்தில் இன்று அந்த ஒற்றைப்பனை இல்லை; பொன்னுஆச்சி தான் நிற்கிறாள்!

– செங்கை ஆழியான், 1972, முற்றத்து ஒற்றைப் பனை, நவீனத்தின் இறுதிப்பகுதி சிரித்திரன் பிரசுரம் (பக். 38–39)

இனம், மதம் கடந்து பனைமரங்கள் ஈழத்தவரிடம் உறவாடி யுள்ளன என்பதை இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. **ஞானம்** கலை இலக்கியச் சஞ்சிகையின் 3ஆவது ஆண்டு மலரில் (25ஆம் இதழ்) வெளியான **சுதர்ம மஹாராஜனின் 'வாப்பா வளர்த்த பனை'** என்னும் சிறுகதையை ஓர் உதாரணமாகக் கூறலாம்.

யாழ்ப்பாணத்திலிருந்த இஸ்லாமியர்கள் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டபோது தமது குடும்பத்துடனும் இரண்டு பனம் பழங்களுடன் ஒரு குடும்பஸ்தர் வெளிவருகிறார். தாம், அடைக்கலம் புகுந்த மண்ணில் பனம் விதைகளை நட்டு மிகவும் சிரமப்பட்டு வளர்க்க முற்படுகிறார். இரண்டு பனம் விதைகளில் ஒன்றுமட்டும் தப்பி வளர்கிறது. தாம் வளர்த்த அந்த பனைமரத்துடனே அவரின் ஏக்கங்களை அவர் பரிமாறிக்கொள்கிறார். இறுதியில் அந்தப் பனை மரத்துக்கு அருகிலேயே அவர் உயிர் பிரிகிறது. சிறுகதையில் ஒருசில பகுதிகளை இங்கு தருவது பொருத்தமாகும்.

சிறுகதை

வாப்பா வளர்த்த பனைமரம்

சுதர்மமகாராஜன்

வாப்பாவுக்கு பனைமரம்னா உசுரு. நாம் ஊரில் வாழ்ந்த காலத்தில் எம் வீட்டு வளவு வேலியைச் சுற்றி பத்தடிக்கு, பத்தடி பனைமரங்கள்தான் இருக்கும். வாப்பா அவர் கண் காணிப் பிலேயே வளர்ந்த மரங்கள்.

எங்கள் ஊரு பனை மரங்களுக்குப் பெயர்போன ஊரு. அந்த மண் ணுக் கும் பனைக் குமுள் ள தொடர்பு முடிவில்லாதது. எத்தனையுத்தங்கள், அழிவுகள் வந்தாலும், அந்த மண்ணில் பனைகள் நிமிர்ந்து நிற்கும். வாப்பா சொல்வார்....., அந்த மண்ணின் அழியாத, மாறாத வளத் திற் கு காரணமே இந் த பனைகள் தானென்று.

ஒவ்வொரு காலையும் மாலையும் மெல்லிய சூரிய வெளிச்சத்தில் பனை மரங்களின் கம்பீரம் பார்ப்பதென்றால் வாப்பாவுக்கு கொள்ளைப் பிரியம். பனங்கிழங்கு, பனங்கஞ்சி, பனம் பணியாரம் என் று அவர் தின்னும் சாப்பாடுகள்கூட பனையால் ஆனவையாக இருந்தால், அவருக்கு அந்த ஒன்றேபோதும்.

அவர் சொல்வார்..... பனை நம் ஊரின் தனிச்சொத்து, அதன் கம்பீரமே ஒவ்வொரு பொழுதையும் உற்சாகமாய்க் கழிக்க உதவுமென் பார்.

••••••••••••

"யாழ் ப் பா ணத் தி லுள் ள அனைத்து முஸ்லிம்களும் இன்னும் 24 மணி நேரத்துக்குள், எவரு மிருக்காது வெளியேற வேண்டும்"

என்ற செய்தியோடு வாப்பா, கடைத்தெருவில் இருந்து ஓடோடி வந்தார்.

••••••••••••

அன்று வாப்பா, எம்மோடு அம்மண்ணிலிருந்து கொண்டுவந்த உடமைகள், நம்வளவுப் பனை மரங்களிலிருந்து விழுந்திருந்த இரண்டு பனம் பழங்கள்.

இரண்டு பனம்பழங்களோடு அகதிகளாய் இங்கு கொண்டுவந்து குடியமர்த்தப்பட்டோம். இடையிலே எத்தனை துயரங்கள், எத்தனை அவலங்கள். அவை இன்னும் கண் முன் நிழலாடுகின்றன. அது எம் இருண்ட யுகத்தின் ஆரம்ப நாட்கள்.

••••••••••••

ஒவ்வொரு நாளும் மறக்காது அவற்றுக்கு நீர்வார்த்து, இரண்டு விதைகள் நட்ட இடத்தையும் ஒரு அவதானத்தோடு கவனிக்கத்தொடங்கினார். சரியாக தின்னாது உறங்காது வாப்பாவின் நினைவெல்லாம் பனையில்தான் இருந்தது.

சரியாக நான்கைந்து மாதங்களின் பின் ஒருநாள் காலை, வாப்பா தொழுகைமுடிந்து முற்றத்தைப் பார்த்தபோது இரண்டாவதாய் நாட்டிய விதை சிறிதாய்த் துளிர்விட்டிருந்தது. பனைமீது வாப்பாவின் நம்பிக்கை இருமடங்காகியது.

••••••••••••

வாப்பா விறாந்தைக்கு வந்த முக்கிய காரணமே இந்தப் பனைமரம் தான். விறாந்தையில் இருந்து பார்க்க, பனைமரத்தின் முழுத்தோற்றமும் நன்றாகத் தெரியும். சாக்குக் கட்டிலில் படுத்தபடியே வாப்பா பனை மரத்தைக் கண்ணிமைக்காது பார்த்துக்கொண்டிருப்பார். அந்தப் பார்வையில் இருக்கும் ஏக்கம் வாப்பாவுக்கே தனித்துவமானது. அது பல நினைவுகளை அவருக்கு ஞாபகமூட்டுவதுபோல், அவரது கண்கள் பிரகாசமாகி, மங்கும். பக்க வாட்டில் படுத்தபடியே அவரது கண்கள், பனை மரத்தோடு பழைய கதைகள் பேசுவதாய் அடிக்கடி திறந்துமூடும்.

••••••••••••

வாப்பாவின் கட்டிலைப் பார்த்தேன். மனம் திகீரென்றது. கட்டில் வெறுமையாய் இருந்தது. வாப்பா..... அருகில் போய் கட்டிலைத் தடவினேன். அது வெறுமையாய்க் கிடந்தது.

••••••••••••

ஓடிச் சென்று பனைமரத்தினடியை பார்த்தேன். அல்லாஹ்... வாப்பா உடம்பில் துணியற்று நிர்வாணமாய்ச் சுருண்டு கிடந்தார். அவரது மூச்சு நின்று போயிருந்தது.

– சுதர்மமஹாராஜன், 2002, வாப்பா வளர்த்த பனை [சிறுகதை] ஞானம் – 25, [பக். 38] சிறுகதையின் சில பகுதிகள்

இச்சிறுகதையானது நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூறிநிற்கும் செய்திகள் பல. உடைமைகளின்றி வெளியேற்றப்பட்டதும் இரண்டு பனம்பழங்களுடன் வெளியேறுவதும், அவற்றிலிருந்து முளைகொண்ட பனை மரத்தினை கண்ணிமைக்காது நோக்குவதும், அதனுடன் ஏக்கத்துடன் உறவாடுவதும், அந்தப் பனை மரத்துடன் மானசீகமாகப் பழங்கதைகள் பேசும்போது அவரின் விழிகள் பிரகாசமாவதும், மங்குவதும் போன்ற செய்திகள் ஈழத்தவரின் வாழ்வில் பனைமரங்களானவை மனிதருக்குச் சமமாகவும் அதற்கு மேலாகவும் உறவுகொண்டாடியுள்ளன என்பதை உணர்த்திநிற்கின்றன.

இத்தகைய பல இலக்கியப்படைப்புக்கள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் ஈழத்திலே எழுந்துள்ளமையை அறியமுடிகிறது. **மில்க்வைற்** நிறுவனத்தின் தொழிலதிபர் **க. கனகராசா** அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, நிறுவனத்தின் பொன்விழாவின்போது *(1927-1977)* **க.சி. குலரத்தினம்** அவர்களின் **பனை வளம்** என்னும் நூலானது வெளியிடப்பட்டது. பனைவளம் இந்நூலானது பனைகளின் வளங் களைக் கூறுவதோடு மட்டுமல்லாது ஈழத்தில் எழுதப்பெற்ற பனை சார்ந்த இலக்கிய முயற்சிகளையும் ஆங்காங்கு தொட்டுக் காட்டியுள்ளது.

க. சி. குலரத்தினம்
(1916 - 1993)

ஈழத்துக்கும் தாலத்துக்கும் இடையே ஈழத்து இலக்கியம் ஏற்படுத்திய தொடர்பைக் காட்ட, பனைகளைப் பாடுபொருளாகக் கொண்டு ஈழத்தில் எழுந்த இலக்கியங்களில் **சிலவற்றை** இங்கு தருவது பொருத்தமாகும்.

பனை இராசன் நாடகம் :

*1938*ஆம் ஆண்டு **சாம். டி. தம்பு** அவர்களால் எழுதப்பட்ட **பனை இராசன் நாடகம்** பற்றி **க. சொக்கலிங்கம்** *(*சொக்கன்*)* அவர்கள் *1977*இல் பின்வரும் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

*(*பனை இராசன் நாடகம் பற்றி, சொக்கன் எழுதிய குறிப்புகள் இந்நூலின் பகுதி - *4* இல் இணைக்கப்பட்டுள்ளன*)*

(அ) பனை இராசன் நாடகம் - சாம். டி. தம்பு 1938

அழகேசன் என்னும் பனை நாட்டரசனும் அவன் நாட்டுக் குடிகளும் பனையின் பயன்களைப் புறக்கணித்து நவீன நாகரிகத்திலே திளைத்தமை கண்டு சீற்றங் கொண்ட சந்நியாசி ஒருவரின் சாபத்தினாலே பனை நாட்டிலே பஞ்சமும் நோயும் பசியும் தலையெடுக்கின்றன. பனையரசன் இதனை உணர்ந்து சந்நியாசியை நாடிச் சென்று அவரிடம் மன்னிப்புக் கோரியபொழுது அவர், ''பனைப் பிரயோசனத்தை உணர்ந்து பனையைப் பேணினால் மட்டுமே நாட்டிற்கு உய்தி உண்டு'' என்று கூற அவ்வாறே அவன் நடவடிக்கைகளை மேற் கொண்டு நாடு மீண்டும் வசியும் வளனும் பெறுவதைக் கூறுவது.

– க. சொக்கலிங்கம், 1977, ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சி (பக். 230–231)

பனையின் பயன்

சிந்து

ஐயனே கேட்டருள்வீர் — எங்கள்
ஆதிப் பனையினரும் பலனைச் சொல்வேன்
மெய்யயர் வானவுடன் — ஓலை
விசிறி கொண்டே விசிறிக் கனி தெளிவார்
வீடுகள் வேய்ந்திடுவார் — மற்றும்
வேலியடைக்க மட்டை வரிச்செடுப்பார்
மாடுகளுக் குணவாய் — நல்ல
மழை காலத்தினில் வெட்டிக் கிழித்துவைப்பார்
நுங்கரிந் துண்டிடுவார் — கோனை
நுண்ணிதாய்ச் சீவி யாடு மாட்டுக்கிடுவார்
சங்கையுடன் பனங்காய் — என்றும்
சலிக்காதுண்டு பனுட்டு எதுவுஞ் செய்வார்
பன்னங்கள் செய்திடுவார் — நாரிற்
பரிந்து கயிறீர் வாணி பலவுஞ் செய்வார்
இன்னமு மெத்தனையோ — பனையால்
இருக்கு தெடுத்துரைக்கில் இன்றெழியாதே.

— பனை இராசன் நாடகம்

– க.சி. குலரத்தினம் தொகுத்த 'பனைவளம்' என்னும் நூலிலிருந்து 1977, (பக். 28)

தால விலாசம் :

(இது சோமசுந்தரப் புலவரால் 1940ஆம் ஆண்டு பாடப்பெற்ற நூல்)

பனை மரங்களின் மேன்மையை **தால விலாசம்** என்னும் பெயருடைய நூலாக நவாலியூர் க. **சோமசுந்தரப் புலவர்** பாடியுள்ளார். (இக்கட்டுரையில் சோமசுந்தரப் புலவருக்கு முன்னர் **18ஆம் நூற்றாண்டில்** பாடப்பெற்ற தால விலாசம் பற்றியே ஆராயப்படுகின்றது.)

வன்னக் குருத்தில் வடிவாகச் செய்கின்ற
பன்னவகை இன்னவெனப் பன்னரிதால் - அன்னவை
புத்தகப் பெட்டி, புகல்கட்டுப் பெட்டி பல
வித்தகப் பெட்டி மிகு குட்டான் - வைத்த
கடகம் பத்தாயம் கதிர்ப்பாய் கிடைபாய்
திடமாம் உமலளவு சேர்கள் – கடவுட்டிரு
நீறிடுங் குட்டான்கள் நீரிறைக்கும் பட்டைவகை
கூறுபல வுஞ்செய்து கொள்ளலாம் - ஆறங்க
வேதநூ லாகமநூல் வேறுமுள மெய்க்கலைகள்
போதமிகுந்த புராணநூல் - ஓதுகின்ற
மந்திரநூல் சிற்பநூல் வாகடநூல் வாய்மைமிகு
செந்தமிழ்நூல் பற்பலவும் தீட்டலாம் - சுந்தரஞ்சேர்
மங்கல நாளோலை மங்கையர்க்குக் காதோலை
துங்கமிகு நண்பருக்குத் தூதோலை - தங்குபல
பற்று வரவு பதியுங் கணக்கோலை
மற்று முறுதி வரையோலை - கற்றவர்கள்
எந்திரங்கள் கீறி எழுத்தடைத்துக் கட்டுகின்ற
மந்திர வோலைகட்கு வாய்ப்பாகும் – பைந்தொடியே
சிராங் குருத்தைத் திகழ்வட்ட மாயிரந்து
நாராசங் கோத்திறுக்க நற்பொல்லாஞ் - சேரும்
வியர்வைகளை நீக்கும் விசிறியாம் வெய்யிற்
புயன்மழையும் போக்கும் குடையாம் - வயன்மேவு
மன்னர் தலைக்கணியும் வள்ளத் தலைப்பாவாம்
பிள்ளைவிளை யாடுபொருட் பேதமாங் - கொள்ளுஞ்
சுரையுண் பிழாவுமாஞ் சோறுண் கலமாம்
நிரையூணு மாகவே நேர்வ - ருரையோலை
ஈர்க்கினுறி யீர்வாணி யேற்றசட்டி பானைகளைச்
சேர்கும்மை தட்டு முறஞ் செய்யலாம்.''

– க.சி. குலரத்தினம் தொகுத்த 'பனைவளம்' என்னும் நூலிலிருந்து
1977, (பக். 121 – 122)

பனை நூறு :

ச.சு. பொன்னம்பலம் என்பவர் 1979ஆம் ஆண்டு பனைகளின் சிறப்புக்களை 100 பாடல்களில் உள்ளடக்கி **பனை நூறு** *என்னும் நூலைப் பாடியுள்ளார்.*

நீண்ட வுடலும் நேரிய கோடும் கார்நிறமும்
பூண்டா யன்னே பூவுலகத்தில் நின்னேப்போல்
யாண்டு மிலாதால் வைரமுடைநற் ருருவெனில்
தூண்டும் மன்பே தூயதலாது தோற்றம்மோ. 2

தோப்புத் தோப்பாய்த் தொல்லிசை பெற்ற யாழ்நாட்டில்
மூப்புற் றேர்நூருண்டுகள் மேலே முறையாக
வாய்ப்புத் தீன்கள் தந்துவளர்க்கும் மாதாவைக்
கூப்பிக் கூப்பிக் கைகளிரண்டாற் கும்பிடலே; 6

– ச. சு. பொன்னம்பலம், 1979, பனை நூறு, முதற்பதிப்பு – 1981 (பக். 2 – 3)

நாட்டார் பாடல்கள் :

பனைகளுக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பை சில நாட்டார் பாடல்களும் பதிவுசெய்துள்ளன. நாட்டார் பாடல்களின் ஆசிரியர்களின் பெயர்களை அடையாளம் காண்பது சிரமமெனினும் அவற்றுள் காணப்படும் சொற்களின் வாயிலாக அவை ஈழத்துக்குரியவை என்பதை உய்த்தறியமுடிகிறது.

உதாரணமாக இளம் பனையினைக் குறிக்கும் **வடலி** என்னும் சொல்லானது ஈழத்திலேயே வழங்கப்படுவதாக பனை பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பதிந்துள்ளனர். வடலி என்னும் சொற்பதம் பாடலில் காணப்படுவதைக்கொண்டு இது ஈழத்தில் வழங்கிய பாடல் என்பதை உய்த்தறியலாம்.

Tala, Tal, Trinrajan	Sanscrit.—Sir W. Jones, &c.
Tal-gaha.....	Singhalese.
Panay-maram—The Palmyra Tree	Tamil, as spoken at Jaffna.
Arn-Panay—The Male.....	
Purn-Panay—The Female	
Vadaly—The Young Tree	
Oly—The Leaf	
Panang-kai—The Fruit	
Nonku—The Kernel.....	

– William Ferguson **1850,** Description of the Palmyra Palm in Ceylon **(பக். 9)**

பனங்கள்ளுப் பருகி வெறியேறிய குடிகாரன் ஒருவன் வழியில் நின்ற பெண்பனையை வினவிய வினவையும், அவனுக்குப் பெண்பனை கூறிய விடையையும் நாட்டார் பாடல் ஒன்று வாய்மொழி இலக்கியமாகக் கூறுகிறது.

"வழிக்கரையே நிற்கு மந்த
வடலி மரப் பெண் பனையே!
வாறவர்க்கும் போறவர்க்கும்
என் செய்வாய் பெண் பனையே?
இருக்கத் தடுக்காவேன்
இட்டிருக்கப் பாயாவேன்
கொழிக்க நல்ல தங்கையர்க்கு
கொழி சுளகு நானுவேன்
புடைக்க நல்ல நங்கையர்க்கு
புடை சுளகு நானுவேன்
படிக்க நல்ல தம்பியர்க்கு
பட்டோலை நானுவேன்
எழுத நல்ல தம்பியர்க்கு
எழுத்தோலை நானுவேன்
தூரத்து வன்னிமைக்கு
தூதோலை நானுவேன்
வாசலில் வன்னிமைக்கு
வழக்கோலை நானுவேன்"

வன்னிமை - தலைமைக்காரன்

— வாய்மொழி இலக்கியம்

– க.சி. குலரத்தினம் தொகுத்த 'பனைவளம்' என்னும் நூலிலிருந்து 1977, (பக். 27)

தால புரத்தார் கீதம், பனைமர சோபனம், தனிப்பாடல்கள் :

பொன்னாலைக் **க. கிருஷ்ணபிள்ளை**யவர்கள் *(கி.பி. 1898 - 1956)* **தால புரத்தார் கீதம்**, **பனைமர சோபனம்** உட்பட பல தனிப்பாடல்களையும் பனைமரங்கள் சார்ந்து பாடியுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

பனைமர சோபனம்

பனைமரமே பனைமரமே யேன் வளர்ந்தாய் பனைமரமே
நான்வளர்ந்த காரியத்தை நாட்டாரே சொல்லுகிறேன்

ஓலை

படுக்கப்பாய் நானுவேன் பாய்முடையத் தோப்பாவேன்
ஏழைநல்ல சுமங்கலிக்கு ஏற்றகா தோலையாவேன்
மங்கலியப் பெண்களுக்கு மஞ்சட்பெட்டி நானுவேன்
பாக்கியமுள்ள பெண்களுக்கு பாக்குப்பெட்டி நானுவேன்
விருத்தாப்பியப் பெண்களுக்கு வெற்றிலைப்பெட்டி நானுவேன்
குணமுள்ள பெண்களுக்குக் குங்குமப்பெட்டி நானுவேன்
பெரியோர்கள் தோள்மேலே திருப்பக்கூடை நானுவேன்
திருப்பக்கூடைக் குள்ளிருக்கும் திருமண்பெட்டி நானுவேன்
எழுதுகின்ற பிள்ளைகட்கு எழுத்தாணிக் கூண்டாவேன்
வாசிக்கின்ற பிள்ளைகட்கு வண்ணநல்ல தடுக்காவேன்
ஓதுகின்ற பிள்ளைகட்கு ஓலைத் தடுக்காவேன்
நனைந்துவரு வோர்களுக்கு ஐம்பங்குடை நானுவேன்
காளையர்க்கும் கன்னியர்க்கும் களைதீர்க்கும் விசிறியாவேன்
வருடத்திற் கோர்தினத்தில் சரஸ்வதியம்மன் பூசைசெய்து
மஞ்சள் படிந்துவர மங்கலங்கள் பாடிவர
அட்சதையும் மலரெடுத்து அர்ச்சிப்பார் உலகமெலாம்
என்னைத் திருத்தியவர் எழுத்தாணி கைப்பிடித்து
ஆசிரியரும் வேதியரும் ஹரிநமோ என்றெழுதி
ஹரிஹரி என்றெழுதி அர்ச்சிப்பார் என்னையவர்
அரிச்சுவடி என்னுலே வரிக்காய்ப் பாடம்என்னுலே
தர்க்கங்கள் என்னுலே சாஸ்திரங்கள் என்னுலே
இராமாயணம் என்னுலே பாரதமும் என்னுலே
பாகவதம் என்னுலே பலசாத்திரங்கள் என்னுலே
திருவாய்மொழி என்னுலே திருமுறைகள் என்னுலே
நாலுவேதம் என்னுலே ஆறங்கமும் என்னுலே
மங்கையர்க்கும் மன்னவர்க்கும் மணமறிவ தென்னுலே
வர்த்தகருஞ் செட்டிகளும் கணக்கறிவ தென்னுலே

பட்சமுள்ள வாசலுக்கு பட்டோலை நானுவேன்
காதத்துப் பெண்களுக்குக் காதோலை நானுவேன்
தூரத்துப் பெண்களுக்குத் தூதோலை நானுவேன்
கலியாண வாசலுக்குக் கட்டோலை நானுவேன்
சீமந்த வாசலுக்குச் சீருடனே நான்போவேன்
பிள்ளை பிறந்ததென்றுல் பெருமையுடன் நான்போவேன்
மைந்தன் பிறந்தானென்றுல் மகிழ்ச்சியுடன் நான்போவேன்
அரண்மனையில் நானிருப்பேன் ஆஸ்தானத்தில் நானிருப்பேன்
மச்சுக்குள்ளே நானிருப்பேன் மாளிகையில் நானிருப்பேன்
குச்சுக்குள்ளே நானிருப்பேன் குடிசைக்குள்ளே நானிருப்பேன்
காளையர்க்கும் கன்னியர்க்கும் கனிதீர்க்கும் விசிறியாவேன்
ஏரிக்கரை மேலே எந்நாளும் வீற்றிருப்பேன்
எமலோகம் போனலும் எல்லார்க்கும் தெரியவைப்பேன்
சிவலோகம் போனவர்க்குச் சீட்டோலை யாயிருப்பேன்
கற்பக விருட்சமெனக் கயிலையிலும் நானிருப்பேன்
திருப்பாளை யூர்தனிலே சிவன்புனைந்தார் என்நாமம்

நார்

கட்டநல்ல கயிருவேன் கன்றுகட்டத் தும்பாவேன்
மட்டமுள்ள வுறியாவேன் மாடுகட்டத் தும்பாவேன்
பசுவணைக்கும் கயிருவேன் பால்தயிருக் குறியாவேன்
தொட்டிலுக்குக் கயிருவேன் துள்ளியாட வூஞ்சலாவேன்
கிணற்றுநீரை அள்ளிவரக் கைத்தாம்புக் கயிருவேன்
வேலிகட்டக் கயிருவேன் விறகுகட்ட நாராவேன்.

உணவு

பாலர்பெரி யோர்களுக்குப் பனம்பதநீர் நானுவேன்
சித்திரைக் கோடையிலே சிறந்தநல்ல நுங்காவேன்
பசித்துவரு வோர்களுக்குப் பனம்பழமு நானுவேன்
கண்ட பிள்ளை தாய்மார்க்குக் கற்பகக்கட்டி நான்தருவேன்.
இத்தனைக்கும் உதவியென என்னையன் சிருட்டிசெய்தான்
ஊழியூழிகாலம் உலகந்தனி லேயிருந்து
வாழிவாழி யென்றுசொல்லி வரமளித்தா ரீஸ்வரனுர்.

– க.சி. குலரத்தினம் தொகுத்த 'பனைவளம்' என்னும் நூலிலிருந்து
1977, (பக். 140–141)

புலவர் போற்றும் பனங்கட்டி

கன்னியர்க்கும் ஆடவர்க்கும் கைத்தொழிலைக் கொடுக்கும் கண்ணீயப் பனங்கட்டியின் பெருமையைப் பொன்னுலக் கிருஷ்ணபிள்ளை அவர்கள் தாலபுரத்தார் கீதத்தில் புகழ்ந்துள்ளார்.

"தாலமெனும் பனையாற் பிறந்த வென்னைத்
தம்பி தங்கச்சி பனங்கட்டி யென்பார்
தானியம் யாவுக்கும் மாவுக்குமே யெனைத்
தாங்கியருங் கரத்தில் வாங்கியுண்பார்."

"கஞ்சியோடு கூழ்பிட்டுக் களிவகைக்
குதவுவேன் கனத்த பலகார மெல்லாம்
தஞ்சமொடு என்தனைச் சேர்த்துண்ண
மிகவுருசி சமிபாடு மதிகமுண்டு
பஞ்சமது என்கிறீர் பனை தென்னை
யுங்களுடை பக்கத்திலே யிருக்க
வஞ்சமதை விட்டு வழி தேடிடும்
விதேசியுண் வாய்க்குமோ எந்தநாளும்."

சீனியிலும் வெகு மானிய தாகவே
திகழ்ந்து திரிவதல்லாற் சேதமின்றி
ஹானிதரும் சலரோகம் போலும் பிணி
யானதற் கிடங்கொடேன் நானேயறி.

கடித்துக் குடிக்கவும் கரைத்துப் பருகவும் கண்ட கண்ட
படிக்குப் பலகார பட்சணம் பற்பல பண்ணுதற்கும்
இடித்துத் துவைத்து எவ்விதத் தீனுடன் உண்ணுதற்கும்
''டிக்குட் சிறந்தது பலநோய் தவிர்க்கும் பனங்கட்டியே.

"பதநீரைச் சேரும் பனங்கட்டியுண்டாக்கும்"

– க.சி. குலரத்தினம் தொகுத்த 'பனைவளம்' என்னும் நூலிலிருந்து
1977, (பக். 72)

தனிப்பாடல்கள் :

ஈழத்து இலக்கியப் பரப்பிலே பனைமரங்களுடன் தொடர் புடைய பல தனிப்பாடல்கள் எமக்குக் கிடைக்கின்றன. 19ஆம் நூற்றாண்டில் ஆறுமுக நாவலரின் காலத்தில் வாழ்ந்த **இராமலிங்க முதலியாரின்** வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் தமது **யாழ்ப்பாண வைபவ கௌமுதி** நூலிலே பதிவுசெய்துள்ளார்.

புகழ்பெற்ற புலவர் ஒருவர் இராமலிங்க முதலியாரை நோக்கி **'என்பு'** என்பதில் தொடங்கி **'ஒடியல்மா'** என்பதில் முடியுமாறு ஒரு பாடல் கூறுமாறு கேட்டவுடன், அவர் பாடியதாக அறியமுடிகிறது. ஈழத்தவரின் நாளாந்த வாழ்வில் பனைமரங்கள் (ஒடியல்மா) ஏற்படுத்தும் அன்னியோன்யத்தை இது காட்டுகின்றது.



ஒருபோதில் கீர்த்திபெற்ற புலவரொருவர் இ
வர்மனைக்குவந்து இவரைச் சந்தித்தபோது இவரைநோக்கிப்
பரிகாசபான்மையாய் கல்லதும் "என்பு என்றெடுத்து புழுக்
கொடியல்மா எனமுடிய ஓர் வெண்பாக்கூறு"மென அரைக்க
ணப்போதுந் தரியாது உடனே இவர்கூறிய வெண்பாவை இத
ன்கீழ்த் தருகின்றோம்;

என்பில் லதுவு மெளிற்கொம்பி லேறுவது
மன்புறுபெண் ணணைணைய வாக்குவதும—முன்புவலி
தன்னுரு ரன்சாபஞ் சூழ்ந்ததுவு மிக்நான்கும்
மன்னு புழுக்கொடியல் மா.

பாடல் : இராமலிங்க முதலியார்
– க. வேலுப்பிள்ளை, 1918, யாழ்ப்பாண வைபவ கௌமுதி, (பக். 212)

இதேபோன்று **கல்லடி வேலுப்பிள்ளை** அவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவமொன்றினை **கொண்டாடினான் ஒடியற்கூழ்** என்னும் பதிவின் வாயிலாக பலர் வாசித்திருப்பர். இப்பதிவானது இலங்கைப் பாடப் புத்தகங்களில் ஒருகாலத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

கொண்டாடினான் ஒடியற்கூழ்

கல்லடி வேலுப்பிள்ளையின் வீட்டுக்குப் பக்கத்தில் பெரிய கல் ஒன்று இருந்தது. அதனால் எல்லோரும் அவரைக் கல்லடி வேலன் என்று செல்லமாக அழைத்தனர்.

சுப்பையா என்பவர் புலவரின் அருமை நண்பர். அவர் நிவிற்றிக்கொல்லை என்னும் ஊரிலுள்ள மருத்துவசாலையில் வைத்தியராகப் பணிபுரிந்தார். நிவிற்றிக்கொல்லை இரத்தினபுரிக்கு அண்மையில் உள்ளது. ஒரு நாள் புலவர் தம் நண்பரைப் பார்க்கப் புறப்பட்டார் பல அல்லைதொல்லைப்பட்டு இரத்தினபுரியை அடைந்தார். அப்பால், நிவிற்றிக்கொல்லைக்குக் கால் நடையாகவே போனார். நேரமோ பட்டப்பகல். வெயில் நெருப்பாக எறித்தது. புலவர் மிகவும் களைத்துவிட்டார். பசி வயிற்றைக் கிள்ளியது. அவர் இடை வழியிலே தங்காது நடந்தார் அவ்வாறு நடந்து நண்பரின் வீட்டை அடைந்தார்.

புலவரை எதிர்பாராது கண்ட நண்பரும் மனவியாரும் அவரை வரவேற்று உபசரித்தனர். புலவரின் சுகநலங்களை விசாரித்தனர். வைத்தியரின் மனைவியார் புலவர் களைப்பாக இருந்ததை உணர்ந்தார். எனவே, அவர் புலவருடைய களைப்பைப் போக்க எண்ணினார். உடம்பு அலுப்புக்கு உவப்பான உணவு ஒடியற் கூழ் என்பது அவருக்குத் தெரியும். மேலும் புலவருக்கு ஒடியற் கூழில் மிக்க பிரியம் உண்டு என்பதும் அவருக்குத் தெரியும்.

வைத்தியரின் மனைவியார் கூழ் காய்ச்சத் தொடங்கினார். அவர் பானையில் நீரைக்கொதிக்க வைத்தார் அதனுள் ஒரு சிறங்கை அளவு அரிசியைப் போட்டு வேக வைத்தார். பின்பு மரவள்ளிக்கிழங்கு, பயற்றங்காய், பயறு, பலாச்சுளை, பலாக்கொட்டை, முதலியவற்றையும் போட்டார். உப்பையும், புளியையும், அரைத்த மிளகாய்க்கூட்டையும், அளவாய்ப் போட்டார் ஒடியல் மாவைக் கரைத்து அதனுள் சேர்த்தார். இவ்வாறாகக் கூழ் காய்ச்சினார் பதமாய் இறக்கிய கூழுக்குள் வாழைக்காய்ப் பொரியலையும் இட்டுக் கலக்கினார்.

புலவரும் நண்பரும் கூழ் குடிக்க அமர்ந்தனர். பலா இலையை மடித்துக் கோலினர் கூழை அள்ளி ஊதி ஊதிக்குடித்தனர். அந்தக்கூழ் மிகவும் சுவையாக இருந்தது. "என்ன அருமையான கூழ்" என்று வியந்தார் புலவர். புலவரின் பசியும் பறந்தது களைப்பும் நீங்கியது. அப்போது புலவரால் பாடாமல் இருக்கமுடியவில்லை.

ஆசுகவி பாடினார் இப்படி.

“அல்லையுற்று இரத்தினபுரி அண்டி
அப்பாலே நிவிற்றிக்கொல்லை
அடைந்த அலுப்புக் கொண்டதற்கு
கல்லடியான், வண்டாரும் மாலை அணி
மற்புயற் சுப்பையனுடன்
கொண்டாடினான் ஒடியற் கூழ்”



கல்லடி வேலுப்பிள்ளை
(1860 - 1944)

இவ்வாறாக பனைமரங்களுடன் தொடர்புடைய ஈழத்தவரின் பண்பாடுகளையும் கலாசார வழக்குகளையும் காட்டும் பல தனிப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

இந்த வகையில் சிறுவர்கள், ஆடிமாதப் பிறப்பன்று, **கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்** என்று எதிர்பார்த்துக் காத்திருப்பதை ஆவணப்படுத்திய **க. சோமசுந்தரப் புலவரின்** பாடலும் புகழ்பெற்ற தனிப்பாடல்களில் ஒன்று.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

சிறுகதைகள் :

இங்கு குறிப்பிடப்பெற்ற இலக்கிய வடிவங்களுடன் பனைகளுடன் தொடர்புடைய சிறுகதைகளும் காலந்தோறும் ஈழத்தில் வெளிவந்தவண்ணம் உள்ளன. **ஈழநாடு** பத்திரிகையானது தனது 25ஆவது ஆண்டினையொட்டி நடத்திய சிறுகதைப்போட்டியில் செங்கை ஆழியானின் **கங்குமட்டை** என்று குறியீடாகத் தலைப்பிடப்பட்ட சிறுகதையானது முதற்பரிசு பெற்றமை இங்கு நினைவுகூரத்தக்கது.

மேலும் வதிரி. **இ. இராஜேஸ்கண்ணன்** எழுதிய **தொலையும் பொக்கிஷங்கள்** என்னும் சிறுகதையானது **ஞானம்** கலை இலக்கியச் சஞ்சிகையில் 2002ஆம் ஆண்டு (ஞானம் - 29) பிரசுரமாகியது. இச்சிறுகதையானது 10ஆம் ஆண்டு மாணவர்களுக்கு தமிழ் கற்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட **ஆசிரியர் வழிகாட்டி** நூலில் உள்ளடக்கப்பட்டமையானது சிறுகதையின் சிறப்புடன் அதன் உள்ளடக்கத்தின் கருப்பொருளும் காரணங்கள் எனலாம்.

ஞானம் 29ஆவது இதழில் வெளியான இ. இராஜேஸ்கண்ணன் எழுதிய 'தொலையும் பொக்கிசங்கள்' என்ற சிறுகதை பத்தாம் ஆண்டு தமிழ் கற்பித்தல் ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

– தி.ஞானசேகரன், 2008,
ஞானம் – 100, ஆசிரியர் தலையங்கம் (பக். 3)

வதிரி.இ.இராஜேஸ்கண்ணன்

தொலையும் பொக்கிசங்கள்

நாங்கள் ஓரளவு பருவமடைந்த சிறுவர்களாக இருந்த காலத்தில் பனாட்டு பினைவது' அப்புவின் வீட்டில் ஒரு சடங்காகவே நடைபெறும். பனம் பழங்களை பவ்வியமாகச் சேர்த்துவைத்து பெரிய அண்டா போன்ற பாத்திரத்தில் ஆளும் பேருமாகச் சேர்ந்து 'பினாட்டு பினைவதில்' ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு உயிர்ப்பு. ஆச்சி தன்னுடைய பனையிலேயே சார்வோலை வெட்டுவித்து "பெரும் பனை ஓலைப் பினாட்டுப்பாய்" இழைப்பாள். பினைந்த பனங்கழியை பனாட்டுப் பாயிலே தடிப்பாக வார்த்து வெயிலிலே காய வைத்து 'கண் டோஸ்' போன்ற துண்டுகளாய் வெட்டி, மண்பானையில் 'கருப்பணி' பாணிகாய்ச்சி வார்த்து அரிசிப்பொரியோடு பனாட்டுத் துண்டுகளைப் போட்டு, பல நாட்கள் ஊறவிட்டு 'பனாட்டு காடி' போட்டு வைப்பார்கள். பாகிலே தோய்ந்த அந்தப் பனாட்டுத் துண்டுகளை வாயிலே போட்டு 'ரொபியாக' உவிந்த காலம் - இப்போது யாரிதைச் செய்கிறார்கள்?...

பனாட்டு பிழிவதற்கு சேகரித்த பனம் பழங்களில் மிக உயர்ந்த தரமானவற்றைத் தெரிந்து கல்லடுப்பு முட்டி, அடுப்பு வாயில் பனம் பழத்தை வைத்து தோல் கருகும்வரை எரித்து, சுட்டபின்னர் மூன்று முன்றாக 'கொட்டைகளை' பிரித்துவைத்து, தோலுரித்து 'பழப் புளியை' கழியாக கரைத்து பனம் பழத்தில் வார்த்து, கைகளினால் தும்பையும், கழியையும் பிசைந்து இறுக கைகளினால் அழுத்தி பெரு வீரலையும் ஆட்காட்டி வீரலையும் வளையமாக ஒன்று சேர்த்து பிசைந்த பனங்கழி, வளையமான வீரலிடுக்கு வழியே பொங்கிவர வாயை வைத்து அந்தக் கழியை உறிஞ்சிக் குடிப்பதில் உள்ள சுகம். 'சொத்தலிக் கொட்டையை' தோந்தெடுத்து முழுதாக வாயிலே தள்ளி 'பபிள்கம்' சப்புவது போல நாள் முழுக்க வாய் குதப்பித் திரிந்த சுகம்.

பாத்திகிண்டி படையல் வைத்தல், நெட்டி வெட்டி சீர் செய்து கிழங்கு அவித்தல், மொட்டு வெட்டி பூரான் தின்னுதல், புழுக்கொடியல் காயவிட்டு காவல் காத்தல் - இந்த சுகங்களையெல்லாம் வாழ்க்கையாக தந்தவை அந்த மூன்று பனை மரங்களும்தான். வாழ்வில் ஒவ்வொரு கணங்களும் கூடி வாழ்தல், கொடுத்து உண்ணுதல் போன்றவற்றின் வாளிப்புகள் - வசீகரங்களைத் - தந்தவை இவை. இவை எல்லாம் மனக்கடலின் அடியிலிருந்து மிதப்படுக்கும்போது, இப்போதைய எங்கள் வாழ்வுகள் அர்த்தங்கள் பொய்த்து அந்தரிப்பது போன்ற ஓர் உணர்வு.

இந்தச் சுகங்களை எல்லாம் வாழ்க்கையாகத் தந்தவை அந்த மூன்று பனைமரங்களும்தான்.

– இ. இராஜேஸ்கண்ணன், 2002, தொலையும் பொக்கிஷங்கள் (சிறுகதை)
ஞானம் – 29, , (பக். 25) சிறுகதையின் ஒரு பகுதி

தொலைந்த தால விலாசம் :

இத்தகைய பனை சார்ந்த சிறந்த இலக்கியங்கள் ஈழத்தில் எழுந்திருந்தபோதும் இவையாவற்றிலும் முந்தியது 18ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற **தால விலாசம்** என்னும் படைப்பேயாகும். இது ஈழத்துக்குரிய இலக்கியப் படைப்புகளில் ஒன்று. ஆனால் இன்று நாம் இந்தத் தால விலாசத்தைத் தொலைத்துவிட்டோம்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் தவறவிடப்பட்ட, **தால விலாசம்** என்னும் இலக்கியப் படைப்பை மீட்டெடுக்கும் ஆரம்பப் பணியாக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. 'பனை மரங்களின் சிறப்பைக் கூறும்' தொனிப்பொருளில் தால விலாசம் அமையப் பெற்றாலும் ஈழத்தவர்களுக்கும் பனைமரங்களுக்கும் இடையே நீண்டகாலமாகக் காணப்படும் நெகிழ்வுப் பிணைப்பை, ஆழமாகப் பிரதிநிதித்துவப் படுத்தும் இலக்கியப் படைப்பாக இது அமைகின்றது எனலாம்.

மேலும், நூலினது தலைப்பு, நூல் எழுந்த காலம், அதன் பாடுபொருள், படைப்பின் கட்டமைப்பு என்பவற்றின் வாயிலாகத் தால விலாசமானது ஒரு **விலாச நாடகம்** என்னும் கருத்தானது இக்கட்டுரையின் வாயிலாக முன்மொழியப்பட்டுள்ளது. நூலினது மூலவடிவம் கிடைக்கப்பெறாமையால் இந்த முயற்சியினைச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தால விலாசம் சார்ந்த விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இவ்விலக்கியப் படைப்பானது தமிழ் வரலாற்றில் உள்வாங்கப்பட வேண்டிய தேவை எம்முன்நிற்கின்றது.

❍ ❍ ❍

2

‘தால விலாசம்’ ஓர் அறிமுகம்

பனையின் கற்பக தருவான பனைமரத்திற்கு **தாலம்** என்னும் பெயரும் வழக்கத்தில் இருக்கின்றது. தாலம் என்னும் சொல்லினைப் பெயரடியாகக்கொண்டு இலக்கிய நூல்கள் எழுந்துள்ளமையைப் பதிவுகளிலிருந்து பெறமுடிகிறது. இவ்விலக்கியங்கள், தமிழர்களின் வாழ்க்கையில் பனைமரங்கள் வகிக்கும் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுகின்றன. குறிப்பாக ஈழத்து மக்களின் வாழ்க்கையுடன் பண்டையகாலம்தொட்டு பனைமரங்கள் பின்னிப்பிணைந்துள்ளன என்பதைப் பல இலக்கியங்கள் எமக்கு அறியத்தருகின்றன.

தால விலாசம் :

சைமன் காசிச்செட்டியவர்கள் **தால விலாசம்** என்னும் நூல்பற்றி 1834ஆம் ஆண்டு தமது **சிலோன் கசெற்றர்** நூலிலே குறிப்பிட்டுள்ளார். ‘தால விலாசம் என்னும் தமிழ்க் கவிதையில் பனைமரங்களின் 801 பயன்பாடுகள்பற்றிக் குறிப்பிடப்படுவதாக’ சைமன் காசிச்செட்டி பதிவு செய்துள்ளார்.

> The palmyra, which flourishes in great perfection, particularly in the province of Jaffna, is equally as profitable as the cocoanut, and is the subject of a poem in Tamul, entitled "*Tala Vilasam*;" from which it appears, that it may be applied to eight hundred and one different purposes; but the limits prescribed to this work, will not permit of their detail.

– சைமன் காசிச்செட்டி, 1834, Ceylon Gazetteer
மீள்பதிப்பு (பக். 39)

சைமன் காசிச்செட்டி
(1807-1860)

தமிழுக்கு அளப்பரிய தொண்டாற்றிய காசிச்செட்டியின் தால விலாசம் பற்றிய இந்தக் குறிப்பானது இலக்கியம் சார்ந்த பல புதிய திறப்புகளுக்கு தற்பொழுது வழிவகுக்கின்றது.

இலங்கையில் பணியாற்றிய **வில்லியம் ஃபேர்குசன்** (William Ferguson) என்பவர் 1850ஆம் ஆண்டு எழுதிய Description of the Palmyra Palm in Ceylon என்னும் நூலிலே இலங்கைக்கும் பனைமரங்களுக்குமான தொடர்பினை விரிவாக ஆவணப்படுத்தியுள்ளார். தால விலாசம் பற்றி சைமன் காசிச்செட்டியின் வாயிலாகத் தெரிந்துகொண்ட ஃபேர்குசன் (Ferguson) அவர்கள், தால விலாசத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் வகைசெய்துள்ளார். அத்துடன் அந்த ஆங்கில மொழிபெயர்ப்பை தமது நூலின் அனுபந்தத்தில் (Appendix-1) இணைத்துக்கொண்டுள்ளார். தால விலாசமானது **கலிவெண்பா** அமைப்பில் அமைந்திருந்தமையை அதனுடைய பாயிரத்தின் மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

(*Translated expressly for this work.*)

TALA VILASAM.—ON THE PALMYRA TREE.

INVOCATION TO GANESA.

I invoke Genesa to help in my composition of the work on the Palmira-tree, in the species of poetry called Kali Venpa, and in presenting the same to the people on the sea-girt earth.

– William Ferguson **1850,** Description of the Palmyra Palm in Ceylon Appendix-1 **(பக். 1)**

இதனைத் தொடர்ந்து 1859ஆம் ஆண்டு Sir James Emerson Tennent அவர்களும் தமது Ceylon என்னும் நூலிலே தால விலாசம் பற்றிய பதிவினைத் தந்துள்ளார். Ceylon என்னும் நூலின் இரண்டாம் பாகத்திலே **தெனண்ட்** (Tennent) அவர்கள், 'பனை மரத் தினைப் பற்றிய நூல் ஒன்று தமிழில் உள்ளதாகவும் அதனை Ferguson என்பவர் தமது நூலிலே மொழிபெயர்த்து உள்ளடக்கி யுள்ளதாகவும்' குறிப்பிட்டுள்ளார். ஆனால் தெனண்ட் அவர்கள் தால விலாசம் என்னும் நூலின் பெயரினை வெளிப்படையாகத் தமது நூலிலே பதியவில்லை. இருப்பினும் தெனண்ட் அவர்களின் குறிப்பில் காணப்படும் 'நூல்கூறும் பனைமரத்தின் 801 பயன்கள்' என்னும் குறிப்பானது, காசிச்செட்டி மற்றும் ∴பேர்குசன் குறிப்பிட்ட தால விலாசத்தையே தெனண்ட் அவர்களும் குறிப்பிட்டுள்ளார் என்பதைச் சந்தேகமின்றி தெரியப்படுத்துகின்றது.

தமிழ் இலக்கிய ஆய்வாளர்களைப் பொறுத்தமட்டில் தெனண்ட் அவர்களின் இந்தப் பதிவானது முக்கியமானது. புலவர் மற்றும் இலக்கிய வரலாற்றுக் குறிப்புகள் எழுதிய **ந.சி.கந்தையாப்பிள்ளை** உட்பட தமிழறிஞர்களில் ஒருசிலர் தெனண்ட் அவர்களின் இந்தக் குறிப்பை ஆதாரமாகக்கொண்டார்களே ஒழிய ∴பேர்குசனின் மூலப் பதிவினைப் பார்க்கத் தவறிவிட்டார்கள். இதனால் தகவல்களில் சில மயக்கங்களும் தவறுகளும் பிற்காலத்தில் ஏற்படத்தொடங்கின.

இதனால் தால விலாசம் பற்றிய ஆய்வில் தெனண்ட் அவர்களின் பதிவு முக்கியத்துவம் வாய்ந்தது.

James Emerson Tennent
(1804 - 1869)

> So multifarious are the uses of the palmyra and its products to the natives of the countries favoured by its growth, that the Hindus have dedicated it to Ganesa, and celebrate it as the "Kalpa tree," or "tree of life," of their Paradise. A Tamil poem, of which a translation is given by Mr. FERGUSON[1], professes to describe the creation of the palmyra, and the "eight hundred and one" uses to which the tree is applied.

– Sir James Emerson Tennent, **1859**
Ceylon - Vol - II , **(பக். 520–521)**

∴பேர்குசனின் குறிப்பு *(1850)* மற்றும் தெனண்ட் அவர்களின் *(1859)* குறிப்பு ஆகியவற்றை அடுத்து தொடர்ச்சியாக மேலைத்தேய அறிஞர்களில் பலர் தால விலாசம் பற்றிய பதிவினை மேற்கொண்டு வந்துள்ளனர்.

*1864*ஆம் ஆண்டு *S. Moody* என்பவரால் எழுதப்பட்ட *The Palm Tree* என்னும் நூலானது வெளிவந்துள்ளது. இந்நூலிலே **தால விலாசமானது ஈழத்திலே மிகவும் உன்னத நிலையில் போற்றப்படுகின்ற கவிதையாகக்** குறிப்பிடப்பட்டுள்ளது.

*1868*ஆம் ஆண்டு *J. H. Nelson* அவர்களால் தொகுக்கப்பட்டு மதுரை அரசாங்கத்தினால் *The Madura Country - A Manual* என்னும் நூலானது வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலிலே **தால விலாசமானது ஈழத்தில் எழுந்த பாடலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை** *(Tamil Poem of Ceylon)*, கவனத்தில் கொள்ளத்தக்கது.

*1820*ஆம் ஆண்டு பிறந்த **∴பேர்குசன்** *1839*ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து பணிபுரிந்தவர். *1850*ஆம் ஆண்டு தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை தமது நூலில் ∴பேர்குசன் உள்ளடக்கியிருந்தார். இவர் *1887*ஆம் ஆண்டு இறக்கும்வரை இலங்கையில் பணிபுரிந்துள்ளார். ∴பேர்குசன் வாழும் காலத்திலேதான், இங்கு குறிப்பிட்ட ஏனைய மூன்று நூல்களும் வெளிவந்துள்ளன.

1850 – Description of the Palmyra Palm in Ceylon - ∴பேர்குசன்
1859 – Ceylon - தெனண்ட்
1864 – The Palm Tree - மோடி
1868 – The Madura Country - A Manual - நெல்சன்



1850இல் வெளியான ஃபேர்குசனின்
Description Of the Palmyra Palm of Ceylon –
எனும் நூல் கொழும்பில் அச்சேறியுள்ளது



THE

PALM TREE.

By

S. MOODY,

Author of "What is your Name?" "The Fairy Tree," &c.

In Ceylon, where it is most especially loved and honoured, an ancient Tamil poem, "*Tala Vilasam*," composed in honour of it, is still preserved. Its eight hundred and one uses are there enumerated, and an account given of its supposed creation separately from all other trees, or rather of its being transplanted from heaven to earth, as an especial gift of their gods.

– S. Moody, **1864,** The The Palm Tree.
(பக். 95)



THE MADURA COUNTRY

A MANUAL

COMPILED BY ORDER OF

THE MADRAS GOVERNMENT,

BY

J. H. NELSON, M.A.,

OF THE MADRAS CIVIL SERVICE, AND LATE FELLOW OF KING'S COLLEGE, CAMBRIDGE.



பனைமரம் . Panci-maram	This is the well-known Palmyra. The wood of old trees is, near the circumference, very hard, black, heavy, and durable. A cubic foot weighs 65 lbs. and is said to last 80 years. It is said that the "Tala Vilâsam," a Tamil poem of Ceylon, enumerates 801 purposes to which the Palmyra may be applied.

– J.H. Nelson, **1868,**
The Madura Country - A Manual
(பக். 134)

தால விலாசத்தின் பெருமையைக் கண்டுகொண்ட நவாலியைச் சேர்ந்த **தங்கத் தாத்தா (க. சோமசுந்தரப் புலவர்)** அவர்கள் தால விலாச இலக்கியத்தை மீட்டெடுக்கும் பணியில் 1940ஆம் ஆண்டு ஈடுபட்டுள்ளார். தால விலாச மூலநூலின் சில பாடல்களைச் செவிவழியாக இவரின் தந்தையாரான கதிர்காமரின்மூலம் புலவர் தெரிந்துகொண்டுள்ளார். தமது தந்தையின் வாயிலாகத் தெரிந்துகொண்ட பாடல் மற்றும் விபரங்களையும், ∴பேர்குசன் இணைத்திருந்த ஆங்கில மொழிபெயர்ப்பையும், உலக வழக்கத் தையும் தழுவி 1940ஆம் ஆண்டு **தால விலாசம்** என்னும் மூலநூலின் பெயரிலேயே ஒரு நூலை சோமசுந்தரப் புலவர் செய்துள்ளார்.

மேலும் தமது பாடலிலே, தாலவிலாசம் என்னும் ஒரு நூல் முன்னர் இருந்துள்ளதைப் பதிவுசெய்துள்ளார்.

– இப்பனையின்

மெய்ப்புகழை ஆதியிலே தாலவிலாசமெனச்

செப்பினார் நற்றமிழ்ச்செந் நாப்புலவர்



அம்மொழி
பெயர்ப்பையும், தந்தையார் வாய்க்கேட்டு மனதில் இருந்த சில
குறிப்புக்களையும், உலக வழக்கத்தையும் தழுவி இந்நூலை யான்
தால விலாசம் என்னும் முதற் பெயரிட்டுக் கலி வெண்பாவினற்
பாடினேன்.

– க. சோமசுந்தரப் புலவர், 1940,
தால விலாசம், தொல்புரம் பனைத்தொழில்விருத்தி ஐக்கிய சங்கம் (முகவுரை)

க. சோமசுந்தரப் புலவர்
(1878-1953)



தாலவிலாசம்

(Copy right)

1940

1940ஆம் ஆண்டு வெளியான க. சோமசுந்தரப் புலவரின் தால விலாசம்
(பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நூலகத்திலிருக்கும் இந்நூலினை, எமது வேண்டுகோளுக்கு இணங்க பிரதிசெய்து உதவியவர் விரிவுரையாளர் செ. சுதர்சன் அவர்கள். 14 பக்கங்களினாலான இந்நூலின் பதிப்புரிமை காரணமாக 'முழுமை வடிவம்' இங்கு இணைக்கப்படாது தவிர்க்கப்பட்டுள்ளது)

1850இல் வெளியான தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை 1940இல் சோமசுந்தரப் புலவர் தமிழில் மீளுருவாக்கம் செய்துள்ளார்

கார்த்திகை மார்கழியில்

மாசி மதியில் வைத்த திரவியம் போல்

The principle of the blossom (of the Palmira-tree) developes itself during the months of November, and December; the blossom shoots forth as hoarded treasure for time of exigency in the months of January and February; and then the tender fruits are formed; and of these tender fruits, some do fall from the trees out of season. People collect and cut them to pieces, and give them to the cows to eat. Sins may thus be removed, and the cows will give plenty of milk.

ஆவின் பசிதீர பாவம் போம் குரும்பை சில வீழும்

ஆவினமும் பால் சுரக்கும்

— தண்பணைகள்

கார்த்திகை மார்கழியிற் காகதண்டம் போற்பாளை
சேர்த்தொதுக்கி வைத்த திரவியம் போல் — வாய்த்த
மகாமதி மாசி மதியில் வெளியாப்
பகரு மிளங் குரும்பை பற்றும் — புகுதினீனை
பம்பு மவமிருத்தால் பைங்குழவி சாவதுபோல்
வெம்பு குரும்பைசில வீழுமெடுத் — தம்புவியில்
ஆவின் பசிதீர வன்பா யரிந்துலவத்தால்
பாவம்போ மாவினமும் பால்சுரக்கும்

தால விலாச நூலானது ∴பேர்குசன் உள்ளடக்கிய ஆங்கில மொழிபெயர்ப்புக்குப் பின்னர் தமிழ் மொழியுட்பட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *Gianfranco De Micheli* மற்றும் *Francesco De Santis* ஆகிய இத்தாலிய அறிஞர்கள் பனைமரம் சார்ந்த *Palma Palmae (2001)* என்னும் நூலை இத்தாலிய மொழியில் வெளியிட்டுள்ளார்கள். இதிலே தால விலாசத்தின் இத்தாலிய மொழிபெயர்ப்பு காணப்படுகின்றது. மேலும் 'தால விலாசத்துக்கும் ஈழத்தவருக்குமான நெருக்கமான உறவு' அறிமுகக் குறிப்பாகத் தரப்பட்டுள்ளது.

Tala Vilasam è il titolo di un poema Tamil di Arunachalam. Il poeta descrive gli 801 scopi per i quali può essere utilizzata la palma Borasso che è presente in quantità a Ceylon	Tala Vilasam is the title of a poem Tamil Arunachalam . The poet describes the purposes for which 801 can be used palmyra palm that is present in amounts in Ceylon
....	....
Oltre alle dettagliate descrizioni dei procedimenti da seguire per l'ottenimento dei differenti prodotti sia medicinali che alimentari, appare in questo poema uno spaccato della vita contadina a Ceylon, dal quale emerge con forza il legame dell'uomo con le divinità tutelari e con la cultura della esperienza della natura...	In addition to detailed descriptions of the procedures to be followed for obtaining different products both medicinal and food , it appears in this poem a glimpse of farm life in Ceylon , which shows strongly the bond between man and the tutelary deities and culture the experience of nature ...

– Gianfranco De Micheli, Francesco De Santis, **2001,** Palma Palmae, **இத்தாலி மொழியில் அமைந்த நூல் (தால விலாச அறிமுகம்) இடதுபக்கம் – இத்தாலி மொழி, வலது பக்கம் – ஆங்கில மொழிபெயர்ப்பு**

Invocazione a Ganesha

Invoco Ganesha di aiutarmi nella composizione dell'opera sulla palma Borasso, poema chiamato Kali Venpa, e nella sua presentazione a tutte le genti delle terre cinte dal mare.

– Gianfranco De Micheli, Francesco De Santis, **2001,** Palma Palmae, **இத்தாலி மொழியில் அமைந்த நூல் (காப்புச் செய்யுளின் மொழிபெயர்ப்பு)**

தால விலாச காப்புச் செய்யுள்



இத்தாலிய நூலில் தால விலாசப் பகுதியின்
அட்டைப்படம் – விநாயகரும் பனையும்

INVOCATION TO GANESA.

I invoke Genesa to help in my composition of the work on the Palmira-tree, in the species of poetry called Kali Venpa, and in presenting the same to the people on the sea-girt earth.

– William Ferguson **1850,** Description of the Palmyra Palm in Ceylon
Appendix-1 **(பக். 1) காப்புச் செய்யுளின் ஆங்கில மொழிபெயர்ப்பு**

காப்பு

மன்னு நீர் ஞாலத்து வான் பனையின் மேன்மையெலாம்
பன்னுகலி வெண்பாவாற் பாடவே — முன்னர்வரு
போதனே விக்கினங்கள் போக்குகின்ற பூதகண
நாதனே முன்னே வா

நூல்

ஓங்கார மூலத் தொருவனிரு தாடொழுது
பாங்கார் தமிழ்க்கலி வெண்பாட்டினால — வீங்குபுகழ்த்
தால விலாசத் தனிநூலைப்பேன் தெண்டிரைசூழ்
ஞால மினிதுணர வே.

– க. சோமசுந்தரப் புலவர், 1940,
தால விலாசம், தொல்புரம் பனைத்தொழில்விருத்தி ஐக்கிய சங்கம் (காப்பு)

மேலைத்தேயத்தவர்கள், தாலவிலாச இலக்கியப் படைப் புக்குக் காட்டியளவு அக்கறையை சோமசுந்தரப் புலவரை விடுத்து ஏனைய தமிழறிஞர்கள் காட்டியிருக்கவில்லை. தற்காலத் தமிழ் வரலாற்றிலே சோமசுந்தரப் புலவர்தான் தால விலாசம் எழுதியுள்ளார் என்ற முழுமையற்ற பதிவையே காணமுடிகிறது.



சோமசுந்தரப் புலவர்

1878 — 1953

இவரது ஊர் நவாலி. தந்தையார் வன்னியசேகரன் மரபினராகிய கதிர்காமர் என்பவர். இவர் வட்டுக் கோட்டை — இந்து ஆங்கில வித்தியாசாலையிற் பல வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றியவர். இயற்கையாகப் பாடும் ஆற்றல் படைத்த இவர் பதினாயிரம் பாடல்களுக்குமேற் பாடினர் என்ப. 'தங்கத் தாத்தா' என அழைக்கப்பட்ட இவர் யாழ்ப்பாணப் பண்பாட்டின் உயர்வு குறித்துப் பல பாடல்கள் பாடினர்.

இவரியற்றிய நூல்கள் : நவாலியூர் வன்னியசேகரன் பள்ளு, ஐம்புலவேடக் கும்மி, கந்தவனக்கடவை நான்மணிமாலை, மருதடி விநாயகர் பாமாலை, கல்லுண்டாய் வைரவர் பதிகம், கதிரைமலை வேலவர் பதிகம், அட்டகிரிப் பதிகம், கந்தவனநாதர் திருப்பள்ளி எழுச்சி, சிறுவர் செந்தமிழ், கதிரைச் சிலேடை வெண்பா, நாமகள் புகழ் மாலை, தாலவிலாசம் முதலியன.

– தொகுப்பாசிரியர் ஆ. சதாசிவம், 1966,
ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (பக். 454)

தமிழ் இலக்கிய வரலாற்றிலே, 1834ஆம் ஆண்டு காசிச்செட்டி குறிப்பிட்ட தால விலாசம் என்னும் நூல் இடம்பெறாமலே மறைந்து போய்விட்டது. சோமசுந்தரப்புலவரின் மீட்டெடுப்புப் பணியும் முறையாக அடையாளங்கண்டு ஆவணப்படுத்தப்படவில்லை என்றே கூறவேண்டும்.

❍ ❍ ❍

3

தால விலாசத்தின் ஆசிரியர்

டச்மன் காசிச்செட்டியவர்கள் 1834ஆம் ஆண்டு சிலோன் கசெற்றரில் குறிப்பிட்டுள்ள குறிப்பினைத் தொடர்ந்து 2001ஆம் ஆண்டு வெளிவந்த இத்தாலிய மொழிபெயர்ப்புவரை தால விலாசம் சார்ந்த பல குறிப்புகள் கிடைக்கப்பெறுவது மகிழ்ச்சி தருகின்ற ஆரோக்கியமான விடயமாகும். அத்துடன் இக்குறிப்புகள் ஈழத்துக்கும் தால விலாசத்துக்கும் இடையில் காணப்படுகின்ற பிணைப்பைத் தெளிவாகக் காட்டிநிற்கின்றன.

தால விலாசம் நூலின் ஆசிரியர் :

தால விலாசம் மூலநூலின் ஆசிரியர்பற்றி 1850 ஆம் ஆண்டு ∴பேர்குசன் (Ferguson) எழுதிய குறிப்பே இன்று எமக்குக் கிடைக்கும் அதிபழைய குறிப்பாக உள்ளது. இதன்படி ∴பேர்குசன் அவர்கள், 'காசிச்செட்டியின் வாயிலாக இந்நூலானது **அருணாசலம்** என்னும் **கும்பகோணத்**தைச் சேர்ந்த புலவரால் எழுதப்பட்டுள்ளது' என்பதைத் தெரிந்துகொண்டுள்ளார் என அறியமுடிகிறது. இருப்பினும் தால விலாச நூலின் ஆசிரியர்பற்றி சில தெளிவின்மைகளும் குழப்பங்களும் காணப்படுகின்றன.

I have seen an abstract of the Poem by Simon Cassie Chitty, Esq., which differs in some respects from the one here printed. To Mr. Cassie Chitty am I indebted for the information, that the Poem was written by "Arunachalam, a Poet of Terrukkudantei, the same with Combaconam in the Province of Tanjore."

– William Ferguson **1850,** Description of the Palmyra Palm in Ceylon Appendix-1 **(பக். 1)**

(1) காசிச்செட்டியின் மௌனம் :

1834ஆம் ஆண்டே *சிலோன் கலெக்டர்* நூலில் தால விலாசம் பற்றிக் குறிப்பிட்டிருந்த சைமன் காசிச்செட்டி, அந்நூலின் சாராம்சக் குறிப்பொன்றை தம்மிடம் வைத்திருந்துள்ளார். அந்தக் குறிப்பினை 1850ஆம் ஆண்டு ∴பேர்குசனின் ஆராய்ச்சிக்குக் கொடுத்தும் உதவியுள்ளார். ∴பேர்குசனும் தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் காசிச்செட்டியின் முயற்சிகள் பற்றியும் தமது நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

தால விலாசத்தின்மீது இத்தகைய ஈடுபாடு கொண்டிருந்த காசிச்செட்டியவர்கள் தாமாக, தமது எந்தப் பதிவிலும் அருணாசலம் பற்றிப் பதியவில்லை. அத்துடன் 1834ஆம் ஆண்டுக்குப் பின்னர் தால விலாசம் பற்றிய எந்தவொரு பதிவையும் காசிச்செட்டி குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. ஆனால், பல்வேறு தகவல்களின் அடிப்படையில் தால விலாசமானது மிகவும் புகழ்பெற்ற ஓர் இலக்கியமாக ஈழத்தில் இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

1. **1840–1841 காலப்பகுதியில் 'சீலோன் மகசீன்' பத்திரிகையில் 32 தமிழ் அறிஞர்களின் குறிப்புகளைத் தந்த காசிச்செட்டி அவர்கள் அருணாசலம் பற்றியோ அல்லது தால விலாசம் பற்றியோ குறிப்பிடவில்லை. இந்த 32 அறிஞர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.**



CEYLON MAGAZINE

No 1. SEPTEMBER, 1840. VOL. I.

THE READER.

No. 1.

BRIEF NOTICE OF THE PHILOSOPHERS, POETS, ETC.

BOTH ANCIENT AND MODERN, WHO HAVE FLOURISHED AMONGST THE TAMILS IN THE SOUTH OF INDIA AND CEYLON.

BY SIMON CASIE CHITTY, ESQ.

2. 1848–1849 காலப்பகுதியில், ROYAL ASIATIC SOCIETY என்னும் சஞ்சிகையில் 311 தமிழ் நூல்களின் விபரங்களை உள்ளடக்கிய நூற்பட்டியலைத் தொகுத்த காசிச்செட்டி அவர்கள் அருணாசலம் பற்றியோ அல்லது தால விலாசம் பற்றியோ குறிப்பிடவில்லை.



A CATALOGUE OF BOOKS IN THE TAMIL LANGUAGE, WITH THE NAMES OF THE AUTHORS, THE SUBJECTS, AND THE DATES, AS FAR AS THEY CAN BE ASCERTAINED.

By Simon Casie Chetty, Esq., c.m.r.a.s.

(Read June 3, 1848, and February 24, 1849.)

CATALOGUE OF BOOKS IN THE TAMIL LANGUAGE, WITH NAMES OF THE AUTHORS, THE SUBJECTS, AND DATES, AS FAR AS THEY CAN BE ASCERTAINED.

By Simon Casie Chitty, Esq., c.m.r.a.s.

(Read December 1, 1849.)

3. 1859ஆம் ஆண்டு 'தமிழ் புளூராக்' நூலில் 197 தமிழறிஞர்களின் சரிதங்களை வரலாற்றில் முதன்முறையாகத் தொகுத்த காசிச்செட்டி அவர்கள் அருணாசலம் பற்றியோ அல்லது தால விலாசம் பற்றியோ குறிப்பிடவில்லை. இப்புலவர் வரிசையில் 12 பேர்களைத் தவிர ஏனையோர் அனைவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ∴பேர்குசனின் நூலுக்குப் பின்னரே இந்நூல் வெளிவந்தமையும் கவனத்தில்கொள்ளத்தக்கது.

காசிச்செட்டியின் இந்த மௌனத்தை விளங்கிக்கொள்வது சற்று சிரமமாக உள்ளது.

காசிச்செட்டியின் காலப்பகுதியில் தமிழ் அச்சுத்துறை முனைப்புப் பெற்றிருக்கவில்லை. அக்காலத்தில் நூல்களில் ஒரு சிலவே அச்சாகியிருந்தன. நூல்களைப் பரவலாக்கம் செய்யவல்ல விளம்பரத்துறையோ அல்லது போக்குவரத்துத் துறையோ விருத்தியடைந்து இருக்கவில்லை. இந்தப்பின்னணியில் கிடைத்த தகவல்களை வைத்துக்கொண்டு, காசிச்செட்டி தமது தகவல்களைத் தந்துள்ளார். இதனால், அவர் கட்டுரைகளில் விடுபட்ட தகவல்கள், தவறான தகவல்கள் எனப் பல குறைபாடுகள் உள்ளன. இவைபற்றி



THE

TAMIL PLUTARCH,

CONTAINING

A SUMMARY ACCOUNT

OF

THE LIVES OF THE POETS AND POETESSES

OF SOUTHERN INDIA AND CEYLON.

FROM THE EARLIEST TO THE PRESENT TIMES, WITH SELECT SPECIMENS OF THEIR COMPOSITIONS.

Aut prodesse volunt aut delectare poetæ.—HORACE.

BY

SIMON CASIE CHITTY, ESQUIRE.

AUTHOR OF THE CEYLON GAZETTEER.

Jaffna:

RIPLEY & STRONG—PRINTERS.

1859.

1859இல் அச்சேறிய காசிச்செட்டியின்
தமிழ் புளூராக்

தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள் என்னும் பேராசிரியர் **பொ. பூலோகசிங்கத்தின்** நூலிலே கண்டுகொள்ளலாம். இவை விரிவஞ்சி இங்கு தவிர்க்கப்பட்டுள்ளன.

இக்காரணங்களில் எவையும் அருணாசலப் புலவரையோ அல்லது தால விலாசத்தையோ காசிச்செட்டி பதியாமல் விட்டதற் கான சமாதானமாகக் கூறமுடியவில்லை. ஏனெனில் தால விலாசத்தின் சாராம்சக் குறிப்பினைத் தயாரித்து காசிச்செட்டி தம்மிடத்து வைத்திருந்திருக்கின்றார்.

ஆகவே, தால விலாசம்பற்றி காசிச்செட்டி ஏன் பதியாமல் விட்டார்? என்பதற்கு கீழ்க்கண்ட மூன்று காரணங்களை நாம் முன்வைக்கலாம்.

1 **காசிச்செட்டியின் தனிப்பட்ட அரசியல் காரணமாக தவிர்த்திருக்கலாம்**

2 **கவனக்குறைவால் தவறவிட்டிருக்கலாம்**

3 **காசிச்செட்டியிடம் கிடைத்திருந்த தகவல்களில் குறைபாடுகளும் முரண் பாடுகளும் காணப்பட்டிருக்கலாம். இக்குறைபாடுகளைக் கண்டுகொண்ட காசிச்செட்டி பதியாமல் பிற்போட்டிருக்கலாம்.**

'தனிப்பட்ட அரசியல் காரணமாக காசிச்செட்டியவர்கள் அருணாலப் புலவரின் பதிவினைத் தவிர்த்துள்ளார்' என்னும் காரணமானது காசிச்செட்டியை ஆராய்பவர்களுக்கு பொருந்தி வராமை புலனாகும். மிகவும் விரிந்த தளங்களில் இயங்கிய தமிழறிஞராக காசிச்செட்டி இருந்துள்ளார். தமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தமிழ்நாட்டுப் புலவர்களையும் ஈழநாட்டுப் புலவர்களையும் ஆவணப்படுத்தியுள்ளார். கிறிஸ்த்தவச் செயற்பாடுகளைத் தமது கட்டுரைகளில் எழுதிய காசிச்செட்டி, சீறாப்புராணத்தையும் திருவாதவூரடிகள் புராணத்தையும் இலக்கிய மாக ஆராய்ந்தது கவனிக்கத்தக்கது. தமிழ், சமஸ்கிருதம், சிங்களம், ஜாவா மொழி, மாலைத்தீவு மக்கள் பேசும்மொழி போன்ற மொழிகள் சார்ந்த கட்டுரைகளையும் எழுதியுள்ளார். நாடு, மதம், இனம், மொழி கடந்த விரிந்த நோக்கினைச் சைமன் காசிச்செட்டி கொண்டிருந்தார். ஆகவே 'காசிச்செட்டியவர்கள் தால விலாசத்தைப் பிற்காலங்களில் ஏன் பதியவில்லை?' என்பதற்கு 'கவனக்குறைவு' அல்லது 'தகவல்களிலிருந்த திருப்தியின்மை' ஆகிய இரு காரணங்களில் ஒன்றைத்தான் நாம் முன்வைக்கவேண்டியுள்ளது.

(2) முரண்பாடான தகவல்கள் :

'கும்பகோணத்தைச் சேர்ந்த அருணாசலம் தால விலாசத்தைப் பாடினார்' என்று .ஃபேர்குசன் 1850இல் பதிந்திருந்தபோதும் அதற்குப் பின்னர்வந்த அறிஞர்களில் சிலர் இதற்கு மாறுபாடான தகவல் களைப் பதிந்துள்ளதை முன்னர் காட்டிய ஆதாரங்களில் காணலாம். தெளிவுகருதி சில பகுதிகள் மீளவும் இங்கு தரப்படுகின்றன.

1864ஆம் ஆண்டு S. Moody என்பவரால் எழுதப்பட்ட The Palm Tree என்னும் நூலிலே **தால விலாசமானது ஈழத்திலே மிகவும் உன்னத நிலையில் போற்றப்படுகின்ற கவிதையாக** குறிப்பிடப்பட்டுள்ளது.

Moody அவர்கள் தால விலாசம் பற்றி .ஃபேர்குசனின் நூலின் வாயிலாகவே அறிந்துள்ளார். மேலதிக தகவல்களுக்கு .ஃபேர்குசனின் நூலைப் பார்வையிடும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார். ஆனால், அருணாசலம் பற்றியோ கும்பகோணம் பற்றியோ தமது நூலில் பதியாமல்விடுகின்றார். இதற்கு ஒருபடிமேலாக 'தாலவிலாசமானது ஈழத்திலே அதிகம் விரும்பிப் போற்றப்படுகின்ற இலக்கியம்' என்ற முரண்பாடான கருத்தை முன்வைக்கின்றார். இக்காலப் பகுதியிலே (1864) .ஃபேர்குசன் ஈழத்திலே தொழில் புரிந்துகொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

In Ceylon, where it is most especially loved and honoured, an ancient Tamil poem, "*Tala Vilasam*," composed in honour of it, is still preserved. Its eight hundred and one uses are there enumerated, and an account given of its supposed creation separately from all other trees, or rather of its being transplanted from heaven to earth, as an especial gift of their gods.

According to this tradition,* the world, as

* See a complete history of the Palmyra, by William Ferguson, Colombo.

– S. Moody, **1864,** The The Palm Tree.
(பக். 95)

அடுத்து, 1868ஆம் ஆண்டு J. H. Nelson அவர்களால் தொகுக்கப்பட்டு மதுரை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட The Madura Country - A Manual என்னும் நூலிலே தால விலாசமானது **ஈழத்தில் எழுந்த பாடலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை** (Tamil Poem of Ceylon) இவ்விடத்திலே கவனத்தில் கொள்ளத்தக்கது. Nelson அவர்களும் அருணாசலம் பற்றியோ கும்பகோணம் பற்றியோ தமது நூலில் பதியாமல், தாலவிலாசத்தை ஈழத்தின் இலக்கியமாகவே பதிவு செய்திருப்பது நோக்கத்தக்கது. இக்காலப் பகுதியிலும் (1868) ∴பேர்குசன் ஈழத்திலே தொழில் புரிந்துகொண்டிருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

பனைமரம் . Panei-maram	This is the well-known Palmyra. The wood of old trees is, near the circumference, very hard, black, heavy, and durable. A cubic foot weighs 65 lbs. and is said to last 80 years. It is said that the "Tala Vilâsam," a Tamil poem of Ceylon, enumerates 801 purposes to which the Palmyra may be applied.

– J.H. Nelson, **1868,**
The Madura Country - A Manual **(பக். 134)**

இவற்றின் அடிப்படையில் சில கருத்துக்களை நாம் இவ்விடத்தில் முன்வைப்பது பொருத்தமாகும்.

- **சைமன் காசிச்செட்டி, 1834ஆம் ஆண்டு தால விலாசம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அருணாசலம் பற்றிக் குறிப்பிடவில்லை.**
- **1834 இற்குப் பின்னர் தால விலாசத்தையோ அருணாசலத்தையோ காசிச்செட்டியவர்கள் குறிப்பிட்டதான பதிவுகள் கிடைக்கவில்லை. ஆனால் தாம் எழுதியிருந்த தால விலாசத்தின் சாராம்சக் குறிப்பை ∴பேர்குசனுக்குப் பார்வையிடக் கொடுத்துள்ளார்.**
- **1850ஆம் ஆண்டு காசிச்செட்டியின் வாயிலாக தால விலாசத்தின் ஆசிரியர் கும்பகோணத்தைச் சேர்ந்த அருணாசலம் என்று அறிந்துகொண்ட ∴பேர்குசன், அத்தகவலை தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.**

- **1864 ஆம் ஆண்டு ∴பேர்குசனின் நூலை ஆதாரமாகக்கொண்டு தால விலாசத்தின் குறிப்பை எழுதிய Moody கும்பகோணம் அருணாசலத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அக்காலத்திலும் ∴பேர்குசன் இலங்கையில் தொடர்ந்து பணிபுரிந்துள்ளார். ∴பேர்குசனின் மூலமாகவோ அல்லது வேறு மூலங்களின் வாயிலாகவோ தால விலாசத்தின் ஆசிரியர் பற்றிய முரண்பாடுகளான கருத்தை Moody அறிந்துகொண்டிருக்கலாம் என்பதை உய்த்தறியமுடிகிறது. இவர். 'தால விலாசத்தை ஈழத்தவர் விரும்பி போற்றுகின்றனர்' என்றுதான் குறிப்பிட்டுள்ளார்.**

- **1868ஆம் ஆண்டு Nelson அவர்கள் கும்பகோணம் அருணாசலத்தைப் பற்றி தமது நூலில் குறிப்பிடாமல். 'தால விலாசமானது ஈழத்துக்குரிய இலக்கியம்' என்றுதான் பதிவுசெய்துள்ளார்.**

- **1868 காலப்பகுதியிலும் ∴பேர்குசன் இலங்கையில் தொடர்ந்து பணிபுரிந்துள்ளார். ∴பேர்குசனின் மூலமாகவோ அல்லது வேறு மூலங்களின் வாயிலாகவோ தால விலாசத்தின் ஆசிரியர் பற்றிய முரண்பாடுகளான கருத்துக்களை Nelson அறிந்துகொண்டிருக்கலாம் என்பதை உய்த்தறியமுடிகிறது.**

- **இவற்றின்மூலமாக 'தால விலாசமானது ஈழத்துக்குரிய இலக்கியப் படைப்பாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது' என்பது தெளிவாகிறது.**

- **தால விலாசம் பற்றியோ அல்லது அருணாசலம் பற்றியோ தமிழ்நாட்டு இலக் கியங்களும் பதியவில்லை என்பதுவும் இவ்விடத்தில் நோக்குதற்குரியது.**

- **அத்துடன் கும்பகோணம் அருணாசலத்தை தால விலாசத்துடன் தொடர்புபடுத்துவதை பின்வந்த நூலாசிரியர்கள் தவிர்த்துள்ளார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.**

- **இவற்றின் வாயிலாக. கும்பகோணத்தைச் சேர்ந்த அருணாசலம் தால விலாசத்தை எழுதினார் என்னும் செய்தியில் உண்மைத் தன்மை முழுமையாக இல்லை என்கின்ற கருத்துநிலை ஏற்படுவதை அவதானிக்கலாம்.**

இக்கருத்துக்கள் 'தால விலாசமானது ஈழத்துக்குரிய இலக்கியம் அல்லது ஈழத்தில் எழுந்த இலக்கியம்' என்ற கருத்தினை முன்வைத்தாலும் ஆய்வு என்னும் நிலையில் 'அருணாசலம் கும்பகோணத்தைச் சார்ந்தவர்' என்னும் தகவலை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளோம்.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் 17-18ஆம் நூற்றாண்டுகளில் ஈழமானது, **ஈழமண்டலம்** என்னும் தமிழ்நாட்டின் ஒரு பிரிவாகவே கருதப்பட்டது. இக்காலகட்டத்தில் தமிழகத்துக்கும் ஈழமண்டலத்துக்கும் மிகுந்த இலக்கியப் பரிமாற்றம் இருந்தது என்பதும் எமக்கு இலக்கியப் பதிவுகளின்மூலம் தெரியவருகின்றன. இக்காலப்பகுதியிலேதான் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த **கூழங்கைத் தம்பிரான்** ஈழத்துக்கு வந்து, தங்கி, இலக்கியம் செய்தமையையும் சோழநாட்டவரான **முத்துராசர்** என்பவர் ஈழத்துக்கு வந்து குடியேறி, **கைலாயமாலை** செய்தமையையும் நாம் வரலாற்றில் காண்கின்றோம். இவர்களைப் போன்று அருணாசலமும் கும்பகோணத்திலிருந்து ஈழத்துக்குவந்து, ஈழத்துக்குரிய தால விலாசத்தைப் பாடியிருக்கலாம் என்னும் கருத்தானது பொருந்தி வருவதைக் காணலாம்.

அல்லது அருணாசலப் புலவர் கும்பகோணத்திலேயே தால விலாசத்தைப் பாடியிருக்கலாம். **சிலப்பதிகாரத்தை** எவ்வாறு ஈழத்தவர்கள் **கண்ணகி வழக்குரை** என்று ஈழத்துக்குரியதாக மாற்றி உள்வாங்கினார்களோ அதேபோன்று தால விலாசத்தில் மாற்றங் களைச் செய்து ஈழத்து இலக்கியத்துக்குள் உள்வாங்கியிருக்கலாம்.

18ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற **தால விலாசம்** என்கின்ற இலக்கியப் படைப்பானது **ஈழத்துக்குரிய இலக்கியமாகும்**. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஈழத்தவர்களால் விரும்பிப் போற்றப்பட்ட தால விலாசமானது இன்று எமக்குக் கிடைக்காமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இந்நிலையில் தால விலாசம்பற்றி கிடைக்கப்பெறும் செய்திகளை ஈழத்து இலக்கிய வரலாற்றில் பதிந்து ஈழத்து இலக்கிய வரலாற்றைச் செப்பனிடவேண்டிய தேவை முன்நிற்கின்றது.

❍ ❍ ❍

4 தால விலாசத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த எழுத்தவர்

இலங்கைத்துக்கும் பனைமரங்களுக்கும் இடையேயான நெருக்கமான தொடர்புகளை 1850ஆம் ஆண்டு ஃபேர்குசன் அவர்கள் Description Of the Palmyra Palm of Ceylon என்னும் நூலில் எழுதியுள்ளார் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலிலே தால விலாசம் நூலுக்கு மிகவும் முக்கியமான இடம் அளிக்கப்பட்டுள்ளது. தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை இவர், தனது நூலின் அனுபந்தத்தில் இணைத்துக் கொண்டுள்ளார் (Appendix 1). William Ferguson அவர்களை 1940ஆம் ஆண்டு க. சோமசுந்தரப் புலவர் **ஜேம்ஸ் ஃபேர்குசன்** என்று குறிப்பிட்டுள்ளார். **வில்லியம்** ஃபேர்குசன் என்பதற்கு பதிலாக **ஜேம்ஸ்** ஃபேர்குசன் என்று குறிப்பிட்டதன் காரணம் தெரியுமாறில்லை. அக்காலப்பகுதியில் **கு. சபாநாதன்** என்பவர் கொழும்பு நூதனசாலையிலிருந்த ஆங்கில மொழிபெயர்ப்பைப் படிசெய்து சோமசுந்தரப் புலவருக்குத் தந்ததாகப் பதிவுள்ளது. இப்படியெடுப்பின்போது **வில்லியம் ஃபேர்குசனின்** பெயரில் தவறு இடம்பெற்றதாகவே நாம் கருதவேண்டியுள்ளது.


மூலநூல் இருந்த காலத்திலே அதனை ஆங்கிலத்தில் "யேம்ஸ்பேக்குசன்" என்னும் ஓர் அறிஞர் மொழி பெயர்த்திருந்தார். அதுகொழும்பு நூதன சாலையிலிருந்தது. அதனை அறிந்து கொழும்பில் உத்தியோகத்தில் அமர்ந்திருப்பவரும், செந்தமிழ்த் தொண்டு செய்து வருபவருமாகிய திரு. கு. சபாநாதன் அவர்களை அதனைப்படி செய்து தரும்படி வேண்டினேன். அவர்கள் அதனை அவ்வாறு அன்புடன் படிசெய்து அனுப்பினார்கள்.

– க. சோமசுந்தரப் புலவர், 1940,
தால விலாசம், தொல்புரம் பனைத்தொழில்விருத்தி ஐக்கிய சங்கம் [முகவுரை]

தால விலாசம் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பின் ஆசிரியர் :

காசிச்செட்டியின் வாயிலாக தால விலாசத்தின் ஆசிரியர் அருணாசலம் என்று தெரிந்துகொண்ட ∴பேர்குசன் (Ferguson) அவர்கள், அதனை தமது நூலில் குறிப்பிட்டுமுள்ளார். இந்தச் செய்தியானது சோமசுந்தரப் புலவருக்குக் கடத்தப்பட்டிருக்கவில்லை. தமிழாசிரியரின் பெயரை புலவர் குறிப்பிடவில்லை. ஆனால், 'தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பின் ஆசிரியர் ∴பேர்குசன்' என்று தமக்குக் கிடைத்த விபரங்களுக்கு அமையப் புலவர் பதிவுசெய்துள்ளார்.

ஆனால் **தால விலாச நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பின் ஆசிரியர் ∴பேர்குசன் அல்லர்** என்பதை ∴பேர்குசனின் நூலை ஆராய்பவர்கள் தெரிந்துகொள்வர்.

∴பேர்குசனின் வேண்டுதலுக்கு அமைய இம்மொழிபெயர்ப்பு நடைபெற்றுள்ளதே ஒழிய, இம்மொழி பெயர்ப்பினைச் செய்தவர் ∴பேர்குசன் அல்லர். இத்தகவலானது தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு அருகில் குறிப்பிடப்படாமல் பிறிதொரு இடத்திலே ∴பேர்குசனால் குறிப்பிடப்பட்டுள்ளதால் இத்தகவலை அனைவரும் தவறவிட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை **அமெரிக்க மிசெனரியில் கல்விகற்ற ஈழத்தவர் ஒருவரினாலேயே** ∴பேர்குசனின் வேண்டுதலுக்கமைய **தால விலாச நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.** தமிழில் கலிவெண்பா வடிவில் அமைந்திருந்த தால விலாசத்தினை அந்த ஈழத்தவர் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்துள்ளார். ஆனால், அவரின் பெயரானது குறிப்பிடப் படவில்லை.

1823ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற வட்டுக்கோட்டை செமினரியில், ஆரம்பகாலங்களில் வெளியான நூல்கள் சிலவற்றில் சுதேசிகளின் (ஈழத்தவரின்) பெயரானது குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களை நாம் காணக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக எமக்குக் கிடைக்கும் பதிவுகளிலிருந்து **இலக்கிய சங்கிரகம்** என்னும் நூலை **வில்லியம் நெவின்ஸ்** தொகுத்துள்ளார் என்று தெரிகிறது. 1847ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்ற இந்நூலின் அட்டையில் வில்லியம் நெவின்ஸின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

படிப்பவர்பொருட்டுப் பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியங்களிலிருந்து சில கவிகளைத் திரட்டி இலக்கியசங்கிரகம் என ஒரு நூலும், இலக்கணவிதிகள் சிலவற்றைச் சேர்த்துத் தமிழ்வியாகரணம் என ஒரு நூலும், அங்கிலதர்க்கவிதிகள் சிலவற்றைத் தமிழிற் பெயர்த்துப் பாட்டும் உரையுமாக நியாயலக்கணம் என ஒரு நூலும் இயற்றி அச்சிட்டவர்.

அ. குமாரசுவாமிப்புலவர், 1916,
தமிழ்ப் புலவர் சரித்திரம் (பக். 81–82)


செந்தமிழ்

ஆசிரியரின் சில நூல்களிலே

தேர்ந்துகொண்ட

இலக்கிய சங்கிரகம்.

THE

CLASSICAL READER,

OR

SELECTIONS

FROM

STANDARD TAMIL AUTHORS.

JAFFNA:

AMERICAN MISSION PRESS:

1847.


நியாய இலக்கணம்.

ELEMENTS OF LOGIC.

இந்நூல்

தமிழிலும் இங்கிலிசிலுமுள்ள

நியாய தெறிகளின் அரிய விதிகளை

ஒருசார் விளக்குகின்றது:

இதனை

மூலமும் உரையுமாகச் செய்தவர்

யாட்டுக்கோட்டைச் சாத்தீசசாலையில் உபாத்தியாயர்

வட்டுக்கோட்டை வேளாளன்,

முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை

ALIAS

WILLIAM NEVINS.

JAFFNA

AMERICAN MISSION PRESS

1850

இடது – 1847இல் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் அச்சாகிய இலக்கிய சங்கிரகம் – நெவின்ஸின் பெயர் குறிப்பிடப்படவில்லை

வலது – 1850இல் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் அச்சாகிய நியாய இலக்கணம் – நெவின்ஸின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது

வில்லியம் நெவின்ஸ்
(மு. சிதம்பரப்பிள்ளை)
(1820 - 1899)

பல நூல்களின் மூலங்களிலிருந்து திரட்டிச்செய்யப்பட்ட தொகுப்பாய் இருப்பதால் நெவின்ஸின் பெயர் தவிர்க்கப் பட்டிருக்கலாம், அல்லது மிசெனரிக்குரிய பாடநூலாகச் செய்யப் பட்டுள்ளதால் ஆசிரியரின் பெயர் தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால், மிசெனரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த நெவின்ஸ் அவர்களுக்குத் தொகுப்பாசிரியர் என்னும் தகுதியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் பிற்காலங்களில் வெளியான நூல்களில் அவற்றின் ஆசிரியர்கள் ஈழத்தவராக இருந்தாலும் அவர்களின் பெயர்கள் குறிப்பிடும் வழக்கம் இருந்துள்ளதைக் காணமுடிகிறது. **வில்லியம் நெவின்ஸ்** அவர்கள் *1850*ஆம் ஆண்டு எழுதிய **நியாய இலக்கணம்** *(Elements of Logic)* மற்றும் **கரோல் விஸ்வநாதப்பிள்ளை** அவர்கள் *1855*ஆம் ஆண்டில் எழுதிய **வீசகணிதம்** போன்ற தமிழ் நூல்களின் அட்டையில் நூலாசிரியர்களின் பெயர்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

தகவல்கள் தருவதில் நேர்மைகொண்டிருந்த ∴பேர்குசன் அவர்கள், ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடாதபோதும் இணைக்கப் பட்டுள்ள தால விலாசத்தின் மொழிபெயர்ப்பானது ஈழத்தவர் ஒருவரால் மொழிபெயர்க்கப்பட்டதென்பதை குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தால விலாசமானது முதற்தடவையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் பதிவு செய்துள்ளார்.


It opens with a very curious and truly oriental production, now translated and published I believe for the first time. The translation has been made expressly for this work, by a Tamil Native educated under the American Missionaries at Jaffna.

– William Ferguson **1850,** Description of the Palmyra Palm in Ceylon **(பக். 50)**

தமிழ் வரலாற்றில் முன்னோடி முயற்சி :

தால விலாசத்தின் இம்மொழிபெயர்ப்பு முயற்சியானது தமிழ் இலக்கியப் பரப்பில் வரலாற்று நோக்கில் முக்கியமான இடத்தினைப் பெறுகிறது.

ஆங்கில நூல் ஒன்றினை முதன்முதலில் எழுதிய இலங்கை அறிஞராக **சைமன் காசிச்செட்டி** கணிக்கப்பெறுகிறார் என்பது பலர் அறிந்ததே.

"He was the author of The *Ceylon Gazetteer*, 1834, the first book written in English by a Ceylonese"

- Uragoda (2011), Authors of Books on Sri Lanka, 1796-1948. Sridevi Publication. **(பக். 39–40)**

*1834*ஆம் ஆண்டு நூலுருவம்பெற்ற சைமன் காசிச்செட்டியின் **சிலோன் கசெற்றர்** என்னும் இந்நூலானது 'இலங்கையரால் மட்டுமல்ல, தமிழரால் எழுதப்பெற்ற முதலாவது ஆங்கில நூல்' என்னும் பெருமையையும் தனதாக்கியுள்ளதெனலாம் (பிற ஆதாரங்கள் கிடைக்கும்வரை). *1834*ஆம் ஆண்டு தொடங்கி *1850* வரையிலான இடைப்பட்ட *16* வருடங்களிலேயே தால விலாசமானது ஈழத்தவர் ஒருவரால் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழில் எழுந்த **இலக்கியப் படைப்பொன்றானது தமிழர் ஒருவரால் (ஈழத்தவர்) முழுமையாகப் பிற மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட** முதலாவது சந்தர்ப்பம் இதுவாகவே காணப்படுகின்றது.

சைமன் காசிச்செட்டியின் சிலோன் கசெற்றர் என்னும் கட்டுரை நூலினது மூலவடிவமே ஆங்கிலத்தில் அமைந்திருந்தமை இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது. அத்துடன் அவர் பல தமிழ் நூல்களின் சாராம்சக் குறிப்புகள் செய்திருந்தார். ஆனால், ஓர் இலக்கியப் படைப்பை **முழுமையாக** மொழிபெயர்த்ததாகத் தெரியவில்லை.

இச்சந்தர்ப்பத்துக்கு முன்னர் **வீரமாமுனிவர்** திருக்குறளினை இலத்தீன் மொழிக்கு மொழிபெயர்த்தமை நாம் அறிந்ததே.

வீரமாமுனிவர்
(1680 - 1742)

இருப்பினும் பிறமொழி அறிஞரொருவர் தமிழ் இலக்கியத்தை மொழிபெயர்ப்பதற்கும் தமிழர் ஒருவர் அதனை மொழிபெயர்ப்பதற்கும் அதிக வேறுபாடுகள் உள்ளன. தமிழர் ஒருவர் கலாசாரப் பண்பாட்டுப் பின்புலங்களை உள்வாங்கி மொழிபெயர்ப்பினை வெளிக் கொணர்வார். வீரமாமுனிவர், திருக்குறளில் காமத்துப்பாலை மொழிபெயர்க்காமைக்கு இதுவும் காரணமெனலாம். அதுமட்டுமன்றி மொழிபெயர்ப்பவர்க்கு இலக்கியப் பாடுபொருள்சார்ந்து காணப் பெறும் அனுபவப் பின்னணியிலும் மொழிபெயர்ப்பின் செழுமையும் திருத்தமும் தங்கியிருக்கும். இதற்குத் தால விலாச மொழிபெயர்ப்பு முயற்சியையே உதாரணமாகக் கூறலாம்.

தால விலாசம் நூல் பற்றிய சாராம்சக் குறிப்பொன்றை காசிச்செட்டி பதிவுசெய்து வைத்திருந்துள்ளார். ∴பேர்குசன் தனது நூலினை வெளியிட முன்பாக அந்த சாராம்சக் குறிப்பைப் பார்வையிட்டுள்ளார். புத்தளப் பகுதியில் பிறந்த தமிழ்ப் பேரறிஞரான காசிச்செட்டிக்கு பனைமரங்கள் சார்ந்த அனுபவப் பின்னணியும் விலாச இலக்கியம் சார்ந்த அனுபவப் பின்னணியும் குறைவாக இருந்திருக்கவேண்டும்.

இக்காரணத்தால், 'தால விலாசத்தின் மையப்பொருளை காசிச்செட்டியைவிட துல்லியமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வட்டுக் கோட்டை மிசெனரியில் கல்விகற்ற ஈழத்தவர் அடையாளம்கண்டு மொழிபெயர்த்துள்ளார்', என்று ∴பேர்குசன் குறிப்பிட்டுள்ளார்.

The translation has been made expressly for this work, by a Tamil Native educated under the American Missionaries at Jaffna. I have seen an abstract of the Poem by Simon Cassie Chitty, Esq., which differs in some respects from the one here printed. To Mr. Cassie Chitty am I indebted for the information, that the Poem was written by "Arunàchalam, a Poet of Terrukkudantei, the same with Combaconam in the Province of Tanjore." While the Translation made for me represents the Poem as addressed to a Female who resembles Lacshimi, Mr. Cassie Chitty understands it as addressed to the goddess of Prosperity herself. While Mr. C. Chitty also literally understands the Poem as descriptive of the 801 uses of the Palmyra, the Jaffna Translator has probably seized the true intention of the author, who, in the spirit of eastern hyperbole, represents his long and laboured production as setting forth only the 800th part of the uses to which the theme of his verses, "the Kalpa-tree of the earth", can be applied. Some of the poetical imagery is very beautiful.

– William Ferguson **1850,** Description of the Palmyra Palm in Ceylon **(பக். 50)**

அம்மொழிபெயர்ப்பாளரை **யாழ்ப்பாணத்து மொழிபெயர்ப்பாளர்** (Jaffna Translator) என்று ∴பேர்குசன் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. தால விலாசத்தின் அழகியல்கூறுகள் சிதையாமல் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை 'தால விலாசத்தில் காணப்படும் சில கற்பனைகள் மிகவும் அழகாகவுள்ளன' என்று கூறுவதால் அறியமுடிகிறது. இக்கூற்றுக்களை 1850ஆம் ஆண்டு காசிச்செட்டி வாழும் காலத்திலேயே ∴பேர்குசன் எழுதி கொழும்பில் அச்சிட்டுள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது.

தால விலாசத்தை தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்த யாழ்ப்பாணத்தவரின் பெயர் தெரியாவிடினும் அம்மொழி பெயர்ப்பானது முழுமையாக இன்று கிடைக்கப்பெறுவது ஆறுதலளிக்கின்றது. இந்த மொழிபெயர்ப்பை மூலமாக வைத்துக் கொண்டே 1940ஆம் ஆண்டு சோமசுந்தரப் புலவர் தமது தால விலாசத்தை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத்தவர் செய்த ஆங்கில மொழிபெயர்ப்பானது ஒரு முன்னோடி முயற்சி என்னும் தகவலுக்கு அப்பால் இப்புலமைத்துவ நிகழ்வை நாம் ஆராயவேண்டிய நிலையிலுள்ளோம். தமிழ் இலக்கியங்களை பிறமொழிக்கு **உயிர்த்துவத்துடன்** மொழிபெயர்ப்பு செய்வது தமிழிலக்கியத்தை உலகமட்டத்தில் எடுத்துச்செல்லும் முயற்சியாகும். இதுபோன்ற பிற மொழிபெயர்ப்பு முயற்சிகளும் ஈழத்தில் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

ஆங்கிலேயர்களால் வழங்கப்பெறும் Knight எனும் பதவியை முதன்முதலில் ஆசியாக் கண்டத்தில் பெற்றவர், சேர் முத்துகுமாரசுவாமி என்பதை நாம் அறிவோம். **முத்துக்குமாரசுவாமி** தமிழையும் சைவத்தையும் ஆங்கிலேயர் மத்தியில் எடுத்துச்செல்வதற்கு அரும்பாடுபட்டுள்ளார்.

சேர். முத்துக்குமாரசுவாமி இங்கிலாந்தில் இருந்தபோது **அரிச்சந்திர புராணத்தை** ஆங்கிலத்தில் நாடகமாக இயற்றி 8-12-1863 அன்று பிரித்தானிய மகாராணிக்குக் கையளித்துள்ளார். அதுமட்டுமல்லாது அந்தப் படைப்பினை மகாராணிக்கே சமர்ப்பித்திருந்தார். ஆங்கிலத்தில் அமைந்த அரிச்சந்திர நூலானது மகாராணியின் பெரும் பாராட்டினைப் பெற்றதோடு அவர் விரும்பிப்படிக்கும் மூன்று நூல்களில் ஒன்றாக (விவிலியம், திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு, அரிச்சந்திர புராணம்) இந்நூலையும் சேர்த்துக்கொண்டாராம்.

முத்துகுமாரசுவாமி
(1834 - 1879)

மேலும் இந்த அரிச்சந்திர நாடகம்பற்றி ஒரு மேலதிக தகவலையும் காணமுடிகின்றது.

> **"…. அதனை ஆங்கிலக் கலைஞர்களின் ஒத்துழைப்புடன் விக்டோரியா மகாராணியார் முன்னிலையில் திறம்பட நடித்தபோது மயானகாண்டத்தில் விஸ்வாமித்திரரின் கோபாவேசத்துக்கு அரிச்சந்திரன் ஆளாகி எற்றுண்டபோது, வீழ்ந்த முத்துவை மகாராணியார் தமது கைகளால் தூக்கிவிட்டார் என்று பேசப்படுகிறது."**
>
> **– சின்னத்துரை குமாரசாமி, 23–01–1990**
> **சேர் முத்துகுமாரசுவாமி வாழ்க்கை வரலாறு, பக்கம் – 7**

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பாளர் 1850ஆம் ஆண்டு செய்த தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு மற்றும் 1863ஆம் ஆண்டு சேர். முத்துக்குமாரசுவாமி செய்த அரிச்சந்திர நாடகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு போன்ற புலமைத்துவ முயற்சிகளை நாம் தொகுத்து பதிவுசெய்து அவற்றை ஆய்வுசெய்யவேண்டிய நிலையிலுள்ளோம்.

❍ ❍ ❍

தால விலாசம் பற்றிய சில வரலாற்றுப் பதிவுகள்

18ஆம் நூற்றாண்டு – அருணாசலம் (கும்பகோணம்)

தால விலாசம் பாடப்பெற்றுள்ளது.
கலிவெண்பாவில் அமைந்தது.
மூலநூல் கிடைக்கவில்லை.

1834 – சைமன் காசிச்செட்டி

தால விலாசம் பற்றி சிலோன் கசெற்றர் நூலில் காசிச் செட்டி பதிவுசெய்துள்ளார்.
அருணாசலத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

1850 – யாழ்ப்பாணத்து மொழிபெயர்ப்பாளர்

ஃபேர்குசனின் வேண்டுகோளுக்கு இணங்க ஈழத்தவரொருவர் தால விலாசத்தினை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்துள்ளார்.
இவர் வட்டுக்கோட்டை செமினரியில் கற்றவர்.

1850 – ∴பேர்குசன் (William Ferguson)

தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினை Description Of the Palmyra Palm of Ceylon நூலில், ஃபேர்குசன் உள்ளடக்கியுள்ளார். நூலின் தமிழ் ஆசிரியர் அருணாசலம் என்ற குறிப்பு உள்ளது.

1859 – தெனண்ட் (Sir James Emerson Tennent)

பனைமரம் சார்ந்த இலக்கியம்பற்றியும் (தால விலாசம் பற்றியும்) ஃபேர்குசன் உள்ளடக்கிய ஆங்கில மொழிபெயர்ப்பு பற்றியும் தெனண்ட் அவர்கள் தமது Ceylon நூலில் குறிப்பிட்டுள்ளார்.



1864 – மோடி (S. Moody)

தால விலாசமானது ஈழத்தவரால் விரும்பி மதிக்கும் இலக்கியமாக Palm Tree என்னும் நூலில் Moody குறிப்பிட்டுள்ளார்.



1868 – நெல்சன் (J. H. Nelson)

தால விலாசமானது ஈழத்துக்குரிய இலக்கியமாக The Madura Country - A Manual என்னும் நூலில் நெல்சன் பதிந்துள்ளார்.

1940 – க. சோமசுந்தரப் புலவர் (தங்கத் தாத்தா)

ஃபேர்குசன் உள்ளடக்கிய யாழ்ப்பாணத்தவரின் ஆங்கில மொழிபெயர்ப்பையும், வாய்மொழியில் கேள்வியுற்ற மூலநூலின் வரிகளையும் உலக வழக்கையும் கொண்டு தால விலாசம் பாடியுள்ளார்.

2001 – இத்தாலிய மொழிபெயர்ப்பு (Gianfranco De Micheli, Francesco De Santis)

1850ஆம் ஆண்டு வெளிவந்த ஆங்கில மொழி பெயர்ப்பை, இத்தாலிய மொழிக்கு மொழிபெயர்த்து Palma Palmae நூலில் உள்ளடக்கியுள்ளனர்.

2015 – ஞானம் பதிப்பகம்

ஈழமும் தமிழும் என்னும் தொடரில் நான்காவது நூலாக தால விலாசம் பற்றிய அறிமுகக் கட்டுரை எழுதப்பட்டு (இந்நூல்) வெளியிடப்பட்டுள்ளது.

5

விலாச நாடகமான தால விலாசம்

தால விலாச இலக்கியமானது ஈழத்துக்குரிய இலக்கியம் என்பதும், இதனை யாழ்ப்பாணத்தவர் ஒருவர் 1850ஆம் ஆண்டு ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்துள்ளார் என்பதும், 19ஆம் நூற்றாண்டில் ஈழத்திலே இப்படைப்பானது மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது என்பதும் ஆதாரங்களின் வாயிலாக எமக்குத் தெரியவருகின்றன.

இந்நிலையில் தால விலாசப் படைப்பின் இலக்கிய வகைமையையும், பாடுபொருளையும் ஆராயும்போது அவை மேலும் பல புதிய செய்திகளுக்கு எம்மை இட்டுச்செல்கின்றன.

தால விலாசம் என்ற சொற்தொடரில் 'விலாசம்' குறிக்கும் பொருள் :

1940ஆம் ஆண்டு சோமசுந்தரப் புலவர், தாம் செய்த தால விலாச நூலிலே **விலாசமென்பதற்கு அற்புதம்** என்னும் பொருளைத் தந்துள்ளார்.


தாலம் என்பது பனை. விலாசம் என்பது: அழகு, விநோதம், விளையாட்டு முதலாகப் பலபொருள் தரும். இங்கே அவற்றுள் அற்புதமான பயன்களைக் குறித்து நிற்கும். ஆகவே தாலவிலாசம் என்னும் சொற்றொடர் பனையினது அற்புதமான பயன்கள் எனப்பொருள் தந்து, பின்அப்பயன்களை உணர்த்தும் நூலிற்குப் பெயராயிற்று.

– க. சோமசுந்தரப் புலவர், 1940,
தால விலாசம், தொல்புரம் பனைத்தொழில்விருத்தி ஐக்கிய சங்கம் (முகவுரை)

மேலோட்டமாக நோக்குகையில் 'அற்புதம்' என்னும் பொருளானது பொருந்தி வந்தாலும் தால விலாசத்தின் உள்ளடக்கத் தையும் அது எழுந்த காலத்தையும் வைத்து நோக்கும்போது மேலும் சில விளக்கங்களை நாம் முன்வைக்கலாம்.

'விலாசம்' என்னும் சொல்லுக்கு 1732ஆம் ஆண்டு வீரமா முனிவர், தமது சதுரகராதியில் **ஆடவர் மகளிர் விளையாட்டு** என்னும் பொருளைத் தந்துள்ளார். அதேபோன்று 1842ஆம் ஆண்டு வெளிவந்த யாழ்ப்பாண அகராதியிலும் (மானிப்பாய் அகராதியில்) **ஆடவர் மகளிர் விளையாட்டு** என்றும் **லீலா அபிநயம்** என்றும் பொருள்களைத் தந்துள்ளமையைக் காணமுடிகிறது.


விலாங்கு - ஓர் மீன். [இ.
விலாசம் - ஆடவர்மகளிர்கீ ளையாட்
விலாசனை - மகளிர்விளையாட்டு.

– வீரமாமுனிவர், 1732, சதுரகராதி
1872ஆம் ஆண்டு மீள்பதிப்பு (பக். 109)


விலாசம் - அழகு, ஆடவர் மகளிர் விளையாட்டு, இலீலாபிநயம், பத்திரிகையின் புறவெழுத்து, பொழுது போக்கு, விளையாட்டு, வினோதம், வேடிக்கை.
விலாசனை - மகளிர் விளையாட்டு.

– யாழ்ப்பாண அகராதி, 1842,
2006ஆம் ஆண்டு மீள்பதிப்பு (பக். 459)

18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் 'விலாசம்' என்பதற்கு 'அபிநயத்துடன்கூடிய விளையாட்டு' என்னும் பொருள் வழங்கப் பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இதனைப் பேராசிரியர் **சி. மௌனகுரு** அவர்கள் மேலும் தெளிவுபடுத்துகின்றார்.

இதுவரை விரிவாக ஆராயப்படாததும் பெயர்க்காரணம் தெரியாத துமான விலாசம் என்ற நாடக வடிவத்தின் ஊற்றுக்கண் யாது? விலாசம் என்பது சமஸ்கிருதச் சொல்லாகும். வடமொழியில் அமைந்த சில நாடகங்கள் விலாசம் என்ற பெயர் பெற்றிருந்தன. 9ஆம் நூற்றாண்டில் மகேந்திர பல்லவன் வடமொழியில் இயற்றிய மத்தவிலாச பிரகசனம் என்ற நாடகம் விலாசம் என்ற பெயரையே பெற்றுள்ளது. எனவே விலாசம் என்பது வடமொழி மரபினடியாக எழுந்த ஒரு நாடக வடிவம் எனலாம்.

– சி. மௌனகுரு, 1993,
ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு, மீள்பதிப்பு 2008, (பக். 87)

விலாசம் என்பது ஒருவகை நாடகத்துக்கு வழங்கப்பட்ட பெயர் என்பதை மனதில்நிறுத்தி இலக்கிய வரலாற்றை நோக்குகையில் பல நாடக ஆசிரியர்கள் தமது நூல்களுக்கு விலாசம் என்று பெயரிட்டிருப்பதைக் காணலாம். 18ஆம் - 20ஆம் நூற்றாண்டுகளில் ஈழத்தில் எழுந்த விலாச நாடகங்கள் பலவற்றின் பெயர்களை F.X.C. நடராசா அவர்கள் தமது நூலிலே தொகுத்துக் குறிப்பிட்டுள்ளார்.

விலாசம்

மாணிக்கவாசகர் விலாசம், இராமலிங்கபிள்ளை.

நளச் சக்கரவர்த்தி விலாசம், இராமலிங்கபிள்ளை.

பதிவிரதை விலாசம், குமாரகுலசிங்க முதலியார்.

மிருகாவதி விலாசம், ஏரம்பையர்.

மதனவல்லி விலாசம், தா. சின்னத்தம்பி.

இராம விலாசம், தா.சின்னத்தம்பி.

எஸ்தர் விலாசம், கரையூர் என்றி மாட்டின் அப்புக்குட்டி.

அரிச்சந்திர விலாசம், கொடிகாமம் ஆ. முத்துத்தம்பிள்ளை.

சத்திய வந்தன் விலாசம், மாதகல் தோமாசுப்பிள்ளை.

தமயந்தி விலாசம், ஆனைக்கோட்டை வை. இராமலிங்கம்.

மதனகாம விலாசம், அளவெட்டி கணபதிப்பிள்ளை.

திரை மடந்தை விலாசம், சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்.

பத்திராசு விலாசம், சண்டிருப்பாய் பரநிருபர்.

அழகேந்திரன் விலாசம்.

இரத்தினசூடவிலாசம்,வட்டுக்கோட்டைநா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்.

நல்லதங்காள் விலாசம், மானிப்பாய் கே. சொர்ணலிங்கம்.

புரூரவச்சக்கரவர்த்தி விலாசம்.

உருவாக்குமாங்கத விலாசம்.

பூதத்தம்பி விலாசம், அளவெட்டி கணபதிப்பிள்ளை.

மதனகாம விலாசம், அளவெட்டி கணபதிப்பிள்ளை.

பத்திராச விலாசம், சண்டிருப்பாய் பரநிருபர்.

சுவாண விலாசம், சுவாமி விபுலானந்தர்

– F.X.C. நடராசா, 1957, ஈழம் வளர்த்த நூல், குமரன் புத்தக இல்லம், மீளச்சு – 2012 (பக். 23–24)



F.X.C நடராசா
(1911-1997)

விலாசம் என்னும் பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு தால விலாசமானது பழைய மரபு நாடகங்களில் ஒன்று என்கின்ற முடிவுக்கு வர இயலாது. தால விலாசத்தின் உள்ளடக்கத்திலும் நாம் கவனம் செலுத்துதல்வேண்டும். 'விலாச நாடக வகைமைக்குரிய கூறுகள் தால விலாசத்திலுள்ளனவா?' என அகச்சான்றுகள்கொண்டு ஆராய்வது இவ்விடத்தில் பொருத்தமாகும்.

யாப்பமைதி :

விலாசம் என்பது பழையமுறை நாடகங்களிலிருந்து சற்றே வளர்ச்சியடைந்த ஒரு நாடக வகையாக **க.சொக்கலிங்கம் (சொக்கன்)** கூறுகின்றார். அத்துடன் விலாச நாடகமானது கொட்டகைக் கூத்து களுக்கு முன்னர் காணப்பட்ட ஒரு நாடக வகைமையாக அவர் கருதுகின்றார்.

மேலும் அகவல், வெண்பா, **கலி வெண்பா** ஆகிய பாக்களையும் கலித்துறை, கட்டளைக் கலிப்பா, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கொச்சகம் முதலிய பாவினங்களையும் கையாண்டு **யாப்பமைதியை** கருத்திற்கொண்டு பழையமுறை நாடகங்களும் விலாசங்களும் அமைந்திருந்ததாக சொக்கன் பதிவுசெய்துள்ளார்.

இத்தருணத்தில் தால விலாசமானது **கலிவெண்பா**வினால் பாடப்பட்டமையை நாம் கருத்தில்கொள்வது பொருத்தமாகும்.

விலாச நாடகம் கதகளி போன்றதென்றும் இதற்கான மேடையமைப்பு வட்ட வடிவமானது என்றும் ஆட்ட முறையிற் பாத்திரங்கள் சுற்றி ஆடுகின்ற வழக்கம் இதில் உண்டு என்றும் அணியும் உடை கரப்புப் போன்றிருக்கும் என்றும் விலாச நாடகத் திற்கும் பழைய முறை நாடகத்திற்கும் (ஈழத்து நாட்டுக் கூத்திற்கும்) சிலர் வேறுபாடுகள் கற்பிப்பர். ஆனல், இவ்வேறுபாடுகளிலும் அழுத்தமான யாப்பமைதி வேறு பாடே விலாச நாடகங்களுக்கும் பழையமுறை நாடகங் களுக்கும் உண்டு எனக் கொள்ளலாம். எனினும், இவை யிரண்டிற்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டினை அறிவ தற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை.

விலாசங்களை அடுத்துக் கொட்டகைக் கூத்துக்கள் தோன்றின.

– க. சொக்கலிங்கம், 1977, ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சி (பக். 12)

அகவல், வெண்பா, கலிவெண்பா ஆகிய பாக்களையும் கலித்துறை, கட்டளைக் கலிப்பா, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கொச்சகம் முதலாம் பாவினங்களையும் இவர்கள் கையாண் டுள்ளனர். நாட்டுக் கூத்துக்களுக்குகந்த தரு, சிந்து, தோட யம், பரணி, இன்னிசை, தாழிசை, உலா, கீர்த்தனம், வண்ணம், தேவாரம், திருவாசகம் ஆகிய பாவகைகளும் இவர்களாற் கையாளப்பட்டுள்ளன. கவி என்ற தலைப்பில் அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம் வருகின்றது.

– க. சொக்கலிங்கம், 1977, ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சி (பக். 32–33)

தால விலாசத்தில் நாடகக் கூறுகள் :

தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை வாசிப்ப வர்கள், அதன் ஆரம்பமே ஒரு நாடக வடிவில் அமைந்திருப்பதைக் கண்டுகொள்வர்.

ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழ் வசனங்களாக மொழிபெயர்க்கும்போது பின்வருமாறு உள்ளடக்கம் அமைவதைக் காணலாம். தால விலாசத்தின் மூலவடிவம் கலிவெண்பாவில் அமைந்துள்ளது. ஆனால் இதில் காணப்படுகின்ற நாடகக்கூறுகளைக் காட்டுவதற்காக பின்வரும் அமைப்பில் இங்கு தரப்பட்டுள்ளது.

தால விலாசம்

பிரம்மாவின் படைப்பிலே ஏதோ குறை காணப்படுகின்றது. உலகத்து மக்களின் பசியைத் தீர்க்கவல்ல. நோய்களைத் தீர்க்கவல்ல. விலங்குகளுக்கு உணவளிக்கவல்ல. மனிதர்களின் இல்லங்களைச் சிறப்பிக்கவல்ல ஒரு பொருளை பிரம்மா படைக்கத் தவறிவிட்டான். இதனால் உலகத்து மக்கள் துன்பப்படுபவர்களாகக் காணப்பட்டனர்.

விஷ்ணுவும் பிரம்மாவும் சிவனை நோக்கி பிரார்த்தித்தனர். அவர்களின் பிரார்த்தனையை செவியுற்ற சிவன்.

சிவன் : விஷ்ணுவே. ஏன் மக்கள் சிரமப்படுகின்றார்கள்? நீ உன்னுடைய நாளாந்த காத்தல் பணிகளை ஏன் கிரமமாகச் செய்யவில்லை?

என்று விஷ்ணுவிடம் வினவினார். சிவனின் கூற்றைக்கேட்ட விஷ்ணு மிகுந்த மரியாதையுடன் ஒரு கையை மடித்துக்கொண்டு மற்ற கையின் விரல்களை தனது கீழுதட்டில் வைத்தபடி மறுமொழி கூறினான்.

விஷ்ணு: இது என்னுடைய பிழையில்லை... பிரம்மாவினால் தற்பொழுது புவியிலே படைக்கப்பட்ட பொருட்களில் குறைபாடுள்ளமையே இதற்குக் காரணம்.

இதனைக் கேட்ட சிவன் மிகுந்த கோபமடைந்தார். மிகுந்த கோபத்துடன் பிரம்மாவிடம் வினவினார்.

சிவன் : பிரம்மாவே....., உலக மக்களின் அனைத்து தேவைகளையும் நிவர்த்திசெய்யும் வகையிலான பொருட்களை ஏன் படைக்கவில்லை?

இதனைக் கேட்ட பிரம்மா நடுங்கினான். பிரம்மாவுக்கு பயத்தினால் உடல் முழுவதும் வியர்த்தது. கையின் விரல்களை தனது கீழுதட்டில் வைத்து. வாய்புதைத்து. நடுங்கிய குரலில் மறுமொழி கூறினான்.

பிரம்மா : பிரபோ..... இயக்கங்களின் காரணகர்த்தாவே. தூயவரே. எனக்குத் தெரிந்த அனைத்தையும் ஏலவே படைத்துவிட்டேன்.

பார்வதி : உலக மக்கள் நிறைவில்லாமல் துன்பப்படுவதன் காரணம் விஷ்ணுவோ, பிரம்மாவோ அல்லர்.

பார்வதியின் இச்சொற்களைக் கேட்ட சிவனின் கோபம் தணிந்தது. மக்கள் நிறைவில்லாமல் துன்பப்படுவதன் காரணமறிய கண்களைமூடி சிவன் தியானத்திலமர்ந்தார். சிவனுக்கு காரணம் புலப்பட்டது.

சிவன் : பிரம்மா.... நான் சொல்வதைக் கேள். பூமியிலிருக்கும் மக்களின் தேவைகளை நிவர்த்திசெய்வதற்கு பூமியிலும் கற்பக தருவினை படைப்பாயாக.

இவ்வாறு தொடங்கும் தால விலாசமானது பின்னர் பனை மரங்களின் தோற்றம்பற்றியும் அவை தரும் பயன்கள் பற்றியும் விபரித்துச் செல்கிறது.

The various productions of earth created by Brahma came short of men's wants; and there was wanting one substance, which had an entire power of assuaging hunger, removing disease, feeding the illiterate and enriching the house; and therefore the people of the earth were as unfixed (in all their worldly prospects) as the water on the leaf of a lotus, made Poojas and prayed to Sivan for assistance; Sivan heard their prayers and asked of Vishnu with displeasure the reason of his not having daily attended to his duty of preservation? To which Vishnu, in great obeisance, with one arm folded and the fingers of the other put upon his under-lip—replied, there is no fault in my course of duty, but the present amount of things created on the earth by Brahma is insufficient. Upon which, Sivan, in great displeasure and anger, looked at Brahma and asked of him the reason of his not having created things to satisfy all the wants of the people of the earth. Brahma trembled and perspired (through fear) and putting his fingers under his underlip (as a sign of great respect to a superior) and in faltering language, replied, My Lord, who is the operative cause and immaculate? What I have already created is all that I knew. Parvathi (Sivan's consort) then said to Sivan, there is fault neither in Vishnu nor in Brahma, and thus appeased his anger. Sivan, upon this, after meditating in his own mind, said to Brahma, hear me tell you something to supply the wants of the people of the Earth. Create the Kalpa tree upon the earth also.

தால விலாசத்தின் ஆரம்பத்தை அடுத்து,

"நான் சொல்வதைக் கேட்பாயாக, பெண்ணே"

என்று பல தடவைகள் விளித்து பனைகளின் பயன்கள்பற்றிக் கூறப்பட்டுள்ளன.

Hear me, O Lady, the process of dried pulp which a rich man would use.
Hear me now tell you the use of the Palmira stone shell.

– William Ferguson **1850,**
Description of the Palmyra Palm in Ceylon, Appendix-1 **(அனுபந்தம்)**

தால விலாசத்தின் தொடக்கத்தில் நாடக இலக்கியத்தின் கூறுகள் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. மேலும் பிரம்மா கைகட்டி வாய்புதைத்து நிற்பதான வர்ணனை, நாடகப்பாங்கான நகைச்சுவைக்கூறை இலக்கியத்துக்குச் சேர்க்கின்றது. பிரம்மா குழந்தைபோல் நிற்கும் வர்ணிப்பை மேலைத்தேய அறிஞர்களும் தொட்டுக்காட்டியுள்ளனர்.

> In their great need the human race besought the assistance of Vishnu, who angrily summoned Brahma to account for his neglect. Brahma, described in the poem standing like a chidden child, "his finger below his under lip," declares himself unequal to supply this want, having already exerted his powers to the utmost in perfecting the earth.

– S. Moody, **1864,** The The Palm Tree.
(பக். 96)

நீண்ட வசனங்கள் :

தால விலாசத்தின் ஆரம்பப் பகுதிக்குப் பின்னர், அடுத்துவரும் பகுதிகள் முன்நிற்பவரை விளித்து பனையின் பயன்களைக் கூறுவதாக அமைந்துள்ளது. விளிக்கும் சந்தர்ப்பங்களை ஆங்கில மொழிபெயர்ப்பில் பின்வருமாறு ஈழத்து மொழிபெயர்ப்பாளர் தந்துள்ளார்.

Here me tell you....

Let me now tell you....

Hear me, O Lady.....

Hear me again....

I shall now tell you, Lady....

Hear me now tell you....

இவற்றை நோக்கும்போது தால விலாசமானது உரையாடல் தொனியில் அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

விளித்தபின்னர் மிகநீண்ட கூற்றுக்களை தால விலாசம் கொண்டிருப்பதைக் காணலாம். சில கூற்றுக்கள் ஒரு பக்கத்தின் அளவுக்கு நீளமானவையாக உள்ளன. இவ்விடத்தில் விலாச நாடகங்களின் கூறுகள்பற்றி பேராசிரியர் சி.மௌனகுரு கூறுவதை நாம் கவனத்தில்கொள்ளல்வேண்டும்.

> இவ்விலாசங்கள் நடிப்பதற்கன்றி படிப்பதற்கென்றே எழுதப்பட்டன போலக் காணப்படுகின்றன. உதாரணமாக மங்களவல்லி விலாசத்தில் (1893) பாத்திரங்கள் பேசும் பெரும்பாலான வசனங்கள் 2பக்கங்களில் வருகின்றன. 5 பக்கம் வரை ஒரே பாத்திரம் பேசும் வசனமுண்டு. கிட்டத்தட்ட இவ்விலாசம் ஒரு நாவலின் சாயலில் எழுதப்பட்டுள்ளது.

– சி. மௌனகுரு, 1993, ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு, மீள்பதிப்பு 2008, (பக். 105)

சி.மௌனகுருவின் கருத்தானது தால விலாசத்துக்கு பொருந்தி வருவதைக் காணலாம். தால விலாசமானது நடிப்பதற்கன்றி பனைகளின் மேன்மைகளைப் படிப்பதற்காக எழுதப்பட்டதாக, நீண்ட வசனங்கள்கொண்டு அமைந்துள்ளமையைக் காணலாம்.

விளித்தல்

I shall now tell you, Lady, of the different kinds of gruel made of the Odial flour: in the boiling water in which fish, chillies, lobsters, acid, grits of rice, have previously been put, in proportion, by little quantities, the Odial flour; stir it, and when it gets boiled and reaches a proper consistency, take the vessel out of the hearth and use it; if certain healthful (i. e, that contributes to the improvement of one's health) fruits be added to the above, any body may use it. If in water, salt and grits of rice and small fish be put first, and when they get boiled, if Odial flour, mixed with acid and powdered chillies, be poured in and properly stirred,—the gruel infused, will be a very healthful one; if herbs and certain fruits be added to the above, the gruel will be a very good one. The people, when they dig the edible Palmira roots, take some of them and roast in the fire, remove the outer covering and then eat the roots by mastication. If the roasted roots be exposed to the dew and be eaten on the following morning, it will be very nice indeed. The edible Palmira roots are boiled by steam in water and eaten; also such boiled roots are like the Odial mentioned before, dried in the sun and preserved for future use. The accompaniments that are to be taken with roasted and boiled edible Palmira roots, are, Cocoanut, salt, and pungent substances.

People may eat the sprout that just shoots forth out of the Palmira stone; the stone, in a certain stage, may be roasted in the fire, then be broken and the kernel be

கூற்று நீண்டு செல்வதைக் காணலாம்

– William Ferguson **1850,** Description of the Palmyra Palm in Ceylon Appendix-1 **(பக். 1)**

பிறிதொரு கோணத்தில் நோக்கும்போது தால விலாசமானது பனைகள் பற்றிய **பிரசாரம்** செய்வதற்கு எழுந்த ஒரு படைப்பாக அமைகின்றது எனலாம். இக்கருத்தியலுடன் நாம் ஈழத்து நாடக வரலாற்றை நோக்கும்போது தால விலாசமானது பிரசார நோக்கத்துடன் எழுதப்பட்டிருக்கலாம் எனும் வாதத்துக்குச் சான்று கிடைப்பதைக் காணமுடிகிறது. 1938ஆம் ஆண்டு ஈழத்தில் பாடப்பெற்ற **பனை இராசன் நாடகமானது** இவ்வாதத்துக்கு துணைசெய்கின்றது.

> **இற்றைக்கு நாற்பதாண்டுகளின் முன்னரே யாழ்ப்பாணத்தின் கற்பகத் தருவான பனையின் சிறப்புக்களை உணர்ந்து, அதன் பயனை மக்கள் இழந்து வருவதற்காய் வருந்தி அவ்வருத்தத்திற்கு நாடகக்கலை வடிவு தந்ததோடு அந்நாடகத்தை நூல்வடிவிலும் வெளியிட்டுள்ள பிரபல அப்புக்காத்து சாம். டி. தம்பு பாராட்டிற்கு உரியவரே. இவரின் நாடகம் முற்றிலும் பிரசாரநோக்கிலேயே எழுதப்பட்டுள்ளது. ஈழத்திலே எழுதப்பட்ட முழுநீளப் பிரசார நாடகம் இஃது ஒன்றேயாகும்.**
>
> **– க. சொக்கலிங்கம், 1977, ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சி (பக். 232)**

முற்றிலும் பிரசார நோக்கிலே ஈழத்திலே எழுதப்பட்ட ஒரேயொரு நாடகமாக பனை இராசன் நாடகத்தை க. சொக்கலிங்கம் கணித்துள்ளார். இதன் பாடுபொருள் பனையின் சிறப்பைக் கூறுவதாகும். சாம். டி. தம்புவுக்கு **இந்த அருட்டுணர்வானது** தால விலாசத்தினால் ஏற்பட்டிருக்கலாம் எனத் தொடர்புபடுத்தியும் நோக்கலாம். தால விலாசத்தை வாசிப்பவர்களுக்கு அதில் பிரசாரத் தொனி மறைந்துள்ளதைக் கண்டுகொள்ளலாம்.

அகச்சான்றுகளின் வாயிலாக நாம் பின்வரும் கருத்துக்களை முன்வைக்கலாம்.

- **தால விலாச இலக்கியமானது 'விலாச நாடகம்' என்னும் வகைமையைக் குறிக்க 'விலாசம்' என்னும் சொல்லை அதன் பெயரில் கொண்டுள்ளது.**
- **யாப்பமைதியை நோக்கி தால விலாசமானது கலிவெண்பாவில் இயற்றப்பட்டுள்ளது.**

- **தால விலாசத்தின் தொடக்கத்தில் நாடக இலக்கியத்துக்குரிய கூறுகள் காணப்படுகின்றன.**

- **பனை மரங்களின் பெருமைகளை 'விளித்துக்கூறுவதாக' தால விலாசம் அமைந்துள்ளது. இவ்வாறு விளிக்கும் தருணங்கள் பல தால விலாசத்தில் காணப்படுகின்றன. விளித்துக்கூறும் கூற்றுக்களாவன. விலாச நாடகங் களுக்கேற்ப நீண்ட வசனங்களாக அமைந்துள்ளன.**

- **தால விலாசத்தின் நோக்கமாக, பனை மரங்கள் பற்றிய பிரசாரம், வெளிப்படுவதைக் காணமுடிகிறது.**

இவ்வகச் சான்றுகளைக் காணும்போது **தால விலாசமானது விலாச நாடகமாகும்** என்னும் கருத்தை நாம் தெளிவாக முன்வைக்க முடிகிறது. ஈழத்திலே 19ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே விலாச நாடகங்கள் எழுதப்பட்டதான தகவல்களை அறியமுடிகிறது.

> *1865 இல் காங்கேசன் துறையில் தமிழ்நாட்டுக் கலைஞர்களால் நடத்தப்பட்ட விலாசம் பற்றிய தகவல் கிடைப்பினும் 1816, 1824, 1842 ஆம் ஆண்டுகளில் ஈழத்தில் வாழ்ந்த புலவர்களால் விலாசம் பாடப் பட்டிருப்பதைப் பார்க்கையில் அதற்கு (1865க்கு) முன்னரேயே விலாசம் ஈழத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனா கின்றது.*

– சி. மௌனகுரு, 1993,
ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு, மீள்பதிப்பு 2008, (பக். 90)

*1834*ஆம் ஆண்டு காசிச்செட்டியவர்கள் தமது 27ஆவது வயதில் கொழும்பு-புத்தளப் பகுதிகளில் இருந்து தால விலாசம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். *1834*ஆம் ஆண்டு அச்சு வசதிகளோ அல்லது ஊடக வசதிகளோ அதிகம் இல்லாத காலம். காசிச்செட்டியவர்கள் தால விலாசத்தின் பிரதியைச் சேகரித்து, அதனை வாசித்து, அதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார் என்கின்றபோது தால விலாசமானது ஈழத்திலே மிகவும் பிரபல்யம் பெற்றதாக இருந்திருக்கவேண்டும்.

இதனடிப்படையில் தால விலாசமானது ***18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்*** எழுந்த விலாச நாடகப் பிரதியாக நாம் கருதலாம். அச்சுவசதி, போக்குவரத்து வசதி, ஊடகவசதி அற்ற காலத்தில் தால விலாசம் பிரபல்யத்தைப் பெறுவதற்கு *30-40* ஆண்டுகளாவது தேவைப்பட்டிருக்கும்.

பாடுபொருளில் புதுமைசெய்த தால விலாசம் :

குறிப்பிட்ட ஒரு தலைவன் அல்லது தலைவியின் புகழைச் சிறப்பித்துப் பேசும் பாடுபொருளை விலாச நாடகங்கள் கொண்டிருந்ததைக் காணலாம். அரிச்சந்திர விலாசம், மோகனாங்கி விலாசம் என்பன அவ்வாறு பெயர் பெற்றவை. இந்த மரபினை மாற்றி பனைகளின் புகழைச் சிறப்பித்துப் பாடும் விலாசமாக தால விலாசம் அமைந்துள்ளமையை இவ்விடத்தில் கூறுவது பொருத்தமானதாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றைத் திருப்பிப் பார்க்கும்போது 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்திலும் பார்க்க ஈழத்திலே நாடகம்சார்ந்த பல முன்னோடி முயற்சிகள் இடம்பெற்றுள்ளமையைப் பதிவுகளின் வாயிலாகவும் வரலாற்று ஆசிரியர்களின் வாயிலாகவும் அறிந்துகொள்ளமுடிகின்றது. அதேதருணம் நாடக அரங்கியலில் தமிழகமானது முன்னணியில் இருந்ததாக நாடக வரலாற்று ஆசிரியர்கள் பதிவதைக் காணமுடிகிறது.

ஆங்கிலத்தில் தமிழ் வரலாறு எழுதிய **மு.சி.பூர்ணலிங்கம்பிள்ளை** யவர்கள் 'யாழ்ப்பாணத்தவர்கள் நாடகத்துறையில் முன்னணியில் இருந்தார்கள்' என்று குறிப்பிட்டது இங்கு கவனிக்கத்தக்கது.

Shakespeare derived the materials of his dramas chiefly from such works as Holinshed's *Chronicle* and Plutarch's *Lives*. Our playwrights find their plots ready to hand from Bharatham and Ramayanam. Jaffna has taken the lead in the production of Tamil dramas.

– மு. சி. பூர்ணலிங்கம்பிள்ளை, 1929ஆம் ஆண்டுப் பதிப்பு, Tamil Literature, **(பக். 363)**

பூர்ணலிங்கத்தின் இக்கூற்றினைப் பேராசிரியர் **க. கைலாசபதி** உள்வாங்கி தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கிடைக்கப்பெறும் தகவல்களின்படி தமிழகத்தைவிட ஈழத்திலேயே 18ஆம் நூற்றாண்டில் **நாடக இலக்கியம்** முன்னணியில் இருந்தது என்பது தெரியவருகிறது. இதன்படி தலைவனின் (உதாரணமாக, இராம விலாசம்) அல்லது தலைவியின் (உதாரணமாக, மோகனாங்கி விலாசம்) புகழைச் சிறப்பித்துப் பேசாது பனைகளின் புகழைச் சிறப்பித்துப் பாடி, விலாச மரபினை மாற்றியமைத்த

தால விலாசமானது ஈழத்தில் எழுந்திருக்கக்கூடியதே. அத்துடன் தமிழகத்தைவிட ஈழத்தில் (யாழ்ப்பாணத்தில்) பனை மரங்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் அனைவரும் அறிந்ததே. இந்தப் பின்னணியில் தால விலாசமானது ஈழத்திலேதான் பாடப் பெற்றிருக்கவேண்டும் என்பதை மீண்டுமொருமுறை வலியுறுத்தலாம்.

விலாச நாடக மரபினை மாற்றியமைக்கும் முயற்சியாக தால விலாசம் அமைந்ததை தமிழ் இலக்கிய வரலாறுகளுடன் பொருத்தி ஆராயவேண்டிய தேவை காணப்படுகிறது.

பூரணலிங்கம் பிள்ளை தமது ஆங்கில நூலிலே **'நாடகம்'** என்னும் அத்தியாயத்தில் மேல்வருமாறு கூறியிருக்கிறார்.

> நமது நாடகாசிரியர்கள் தமது கதைகளை மகா பாரதம், இராமாயணம் ஆகியவற்றிலிருந்து அப் படியே பெற்றுக் கொள்கின்றனர். தமிழ் நாடகங் களை உருவாக்குவதில் யாழ்ப்பாணம் முன்னணி யில் நிற்கிறது.

அதற்குச் சான்று காட்டுவதுபோல பல நாடகங்களை யும் நாடகாசிரியர்களையும் குறிப்பிட்டுச் செல்கிறார். யாழ்ப்பாணத்து நாடகாசிரியர்கள் வட்டுக்கோட்டை இராமசாமி ஐயர், கணபதி ஐயர், கணபதிப் புலவர், கந்தப்பிள்ளை, சின்னத்தம்பி (1830–1878), நாகேச ஐயர், முருகேச ஐயர், மாப்பாண முதலியார், முத்துக்குமாரப் புலவர் முதலியோரை அவர் குறிப்பிட்டிருக்கிறார். வேறு சிலரும் எழுதியவற்றைக் கணக்கிட்டால் சுமார் முப்பது நாடகங்களுக்கு மேல் இலங்கைப் புலவர்கள் எழுதியன வாகக் காணப்படும்.

– க. கைலாசபதி, ஈழத்து இலக்கிய முன்னோடிகள்
குமரன் மீள்பதிப்பு, 2001 (பக். 60–61)

மு. சி. பூர்ணலிங்கம்பிள்ளை
(1866 - 1947)



க. கைலாசபதி
(1933 - 1982)

❍ ❍ ❍

6 அதிபழைய விலாச நாடகம் : தால விலாசம்

ஈழத்திலே 17-18ஆம் நூற்றாண்டில் எழுந்த நாடகங்களில் இன்று கிடைக்கப்பெறும் நாடகங்களின் பட்டியலை பேராசிரியர் **சி.மௌனகுரு** தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நாடகங்களை சி. மௌனகுரு அவர்கள் **கூத்து** என்னும் வகைமையில் வகைப்படுத்துவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

வாளபிமன் நாடகம்	**கணபதி ஐயர்**	**(கி.பி.1709–1794)**
இரத்தினவல்லி நாடகம்	**மயில்வாகனப் புலவர்**	**(கி.பி.1799–1816)**
எண்டிக்கு எம்பரதோர் நாடகம்		
இராம நாடகம்		
ஏரோது நாடகம்		
ஞானசவுந்தரி நாடகம்		
மூவிராசாக்கள் நாடகம்		

– சி. மௌனகுரு, 1993,
ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு, மீள்பதிப்பு 2008, (பக். 44–45)

இதேபோன்று ஈழத்தில் பல **விலாச நாடகங்கள்** எழுதப்பட்டிருந்த போதும் 1859ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட **பதிவிரதை விலாசமே** இன்று எமக்குக் கிடைத்திருக்கும் அதிபழைய விலாச இலக்கியமாகும். தெல்லிப்பழையைச் சேர்ந்த **சோடன்** என்பவரின் மகனான **குமார குலசிங்க முதலியார்** என்பவர் **பதிவிரதை விலாசம்** என்னும் நூலினை எழுதி அரங்கேற்றியுள்ளார். **க. சொக்கலிங்கத்தின்** பதிவின்படி இதுவே ஈழத்தில் மேடையேறிய முதலாவது நாடகமாகும்.

எமக்கு இன்று ஆதாரபூர்வமாகக் கிடைக்கும் நாடகங்களுள் முதலில் மேடை ஏறிய நாடகம் தெல்லிப்பழை வாசியான பார். குமாரகுலசிங்க முதலியார் எழுதி 1859ஆம் ஆண்டளவிலே மேடை ஏற்றிய பதிவிரதை விலாசம் என்பதாகும். இது 1909ஆம் ஆண்டிற் சுதேச நாட்டியப் பத்திரிகாசிரியர் திரு. க. வேலுப்பிள்ளையால் அச்சிற் பதிப்பித்து வெளியாயிற்று.

– க. சொக்கலிங்கம், ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி, 1977, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், (பக். 55)

எமக்குக் கிடைக்கும் ஆதாரங்களின் வாயிலாக 1834ஆம் ஆண்டு காசிச்செட்டி தால விலாசத்தைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் 1850இல் செய்யப்பட்ட தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு இன்று எமக்கு முழுமையாகக் கிடைக்கின்றது. ஆகையால் தெல்லிப்பழை குமாரகுலசிங்கப் புலவரின் பதிவிரதை விலாசத்துக்கும் முன்னதாகவே தால விலாசம் எழுதப்பட்டது என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.

இதன்படி கிடைக்கப்பெறும் ஈழத்தின் விலாச நாடகங்களில் அதிபழையதாக தால விலாசம் அமைகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தால விலாசமானது தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ் நாடக வரலாற்றிலும் பதியப்பெற்று அவற்றின் பரப்புகள் விரிவாக்கப்படல்வேண்டும்.

❍ ❍ ❍

7 தால விலாசத்தின் மூல நூலிலிருந்து கிடைக்கப்பெறும் கவிதை வரிகள்

தூல விலாச நாடகத்தின் மூலநூல் இன்று எமக்கு கிடைக்குமாறில்லை. இருப்பினும் 1940ஆம் ஆண்டு க.சோமசுந்தரப் புலவர் செய்த தால விலாசத்திலிருந்து மூலநூலின் சில பகுதிகளைப் பிரித்து, தனியாக எடுக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது.

வட்டுக்கோட்டை செமினரியில் கல்விகற்ற யாழ்ப்பாணத்தவர் செய்த ஆங்கில மொழிபெயர்ப்பை வைத்து தனது நூலினை செய்திருந்தாலும் செவிவழியாக கையளிக்கப்பட்டுவந்த மூல நூலின் சில வெண்பா அடிகளை இரட்டை மேற்கோள் குறிக்குள் (அனுவாதக் குறியிட்டு) உள்ளடக்கி தமது கலிவெண்பாவை புலவர் இயற்றியுள்ளார். தங்கத் தாத்தா செய்த இப்பெருங் காரியம் காரணமாக 18ஆம் நூற்றாண்டுக்குரிய தால விலாசத்தின் சில பகுதிகளை தற்போது நாம் தனியாக பிரித்தெடுக்கும் வழிகிடைத்துள்ளது.



அம்மொழி
பெயர்ப்பையும், தந்தையார் வாய்க்கேட்டு மனதில் இருந்த சில
குறிப்புக்களையும், உலக வழக்கத்தையும் தழுவி இந்நூலை யான்
தால விலாசம் என்னும் முதற் பெயரிட்டுக் கலி வெண்பாவினாற்
பாடினேன். மூலநூலிலுள்ள சில கலி வெண்பாட்டடிகளை அனு
வாதக்குறியிட்டு வேண்டு மிடங்களிற் சேர்த்துள்ளேன். பின்
யின் பயன்களை உலகமறிந்து நன்மை யடைதல் வேண்டு
மென்றே இதனைச் செய்தேன்.

– க. சோமசுந்தரப் புலவர், 1940,
தால விலாசம், தொல்புரம் பனைத்தொழில்விருத்தி ஐக்கிய சங்கம் (முகவுரை)

தால விலாசம்

(18ஆம் நூற்றாண்டு)

கிடைக்கப்பெறும் கவிதை வரிகள்

“கொத்தி வெட்டி வேலி கட்டிக்
கொட்டை யெழுசாணுக் கொன்றாய்ப்
பத்தி பத்தியாகப் பதித்திடுகில்”

“தங்கு மட்டாய் நீண்டு சருகாயதிற் செறிந்த
கங்குமட்டை தானே கழன்று தீரும்”

“பெண்பிள்ளையும் தண்பனையும் பேணி வளர்த்தால் வருடம்
பண்பிலொரு பத்திற் பயன் கொடுக்கும்”

“செந்தழலி லப்பழத்தைத் திட்டமுடன் சுட்டெடுத்துச்”

“கொல்லருக்கு நூராக் குணக்கரியாம்”

“வாரிவிளையா வயற் கெருவாய்ப் போட்டு விட்டால்
வீரியமாய்ச் செந்நெல் விளையுங்காண்”

“நட்டாயிரவருடம் நானிலத்திற் காய்த்து நிற்கும்
பட்டாயிரவருடம் பாழ்போகா”

❍ ❍ ❍

8

நிறைவாக

ஈழத்து தமிழ் வரலாற்றில் இதுவரை கவனத்தில் கொள்ளப்படாத தால விலாசம் என்னும் நூலினை உயிர்ப்பித் தெடுக்கும் நோக்குடன் எழுதப்பட்ட அறிமுகக் கட்டுரையாக இது அமைகின்றது. இக்கட்டுரையின் வாயிலாகக் கீழ்க்கண்ட முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன.

முதல்நிலை முடிவுகள் :

- **புவியின் கற்பகதருவான பனையின் சிறப்புகளைக் கூறும் தால விலாசம் என்னும் நூல்பற்றிய பதிவை காசிச்செட்டியவர்கள் கி.பி. 1834ஆம் ஆண்டு மேற்கொண்டுள்ளார். மிகவும் பிரபல்யமடைந்திருந்த தால விலாசமானது 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இலக்கியமாகத் துணியலாம்.**
- **தால விலாசமானது கும்பகோணத்தைச் சேர்ந்த அருணாசலம் என்பவரால் பாடப்பட்டதாகக் கூறப்படினும் இது ஈழத்துக்குரிய தனித்துவமான நூல் என்பது கிடைக்கப்பெறும் பதிவுகளினால் தெரியவருகின்றது. தால விலாசம் பற்றி தமிழகத்தின் இலக்கியப் பதிவுகளில் காணமுடியவில்லை.**
- **மூலநூலின் சில வரிகள் முதன்முறையாக இக்கட்டுரையில் பிரசுரமாக்கப் பட்டுள்ளன.**
- **கி.பி. 1850ஆம் ஆண்டு ∴பேர்குசன் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரால் தால விலாசமானது ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆங்கில மொழிபெயர்ப்பானது முழுமையான வடிவத்தில் இன்று எமக்குக் கிடைக்கின்றது. இந்நூலில் ஆங்கில மொழிபெயர்ப்பானது இணைக்கப்பெற்றுள்ளது.**

- **ஆங்கில மொழிபெயர்ப்பை அடிப்படையாக வைத்துக்கொண்டு 1940இல் சோமசுந்தரப்புலவர், தால விலாசத்தை மீண்டும் தமிழில் பாடியுள்ளார்.**
- **அகச் சான்றுகளின் அடிப்படையில் தால விலாசமானது ஒரு 'விலாச நாடகம்' என்பதை உய்த்தறியமுடிகின்றது.**
- **தலைவன், தலைவியின் பெருமைகளைக் கூறாது பனைகளின் பெருமைகளைப் பாடி விலாச நாடகத்து பாடுபொருளின் மரபினை தால விலாசம் மாற்றியமைத்துள்ளது.**
- **இன்று எமக்குக்கிடைக்கும் ஈழத்தின் அதிபழைய விலாச நாடகம் என்ற பெருமையை தாலவிலாசம் பெறுகின்றது.**

துணைநிலை முடிவுகள் :

- **கி.பி. 1850ஆம் ஆண்டு ஈழத்தவர் செய்த தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. கிடைக்கப்பெறும் தகவலின் அடிப்படையில் தமிழ் இலக்கியமொன்றை தமிழரொருவர் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்த முன்னோடி முயற்சியாக இது அமைகின்றது.**
- **தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு இத்தாலிய மொழியுட்பட வேறு மொழிகளிலும் தால விலாசம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.**

1834ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டுவரை ஈழத்து இலக்கியமான தால விலாசம் பற்றிய தொடர்ச்சியான பதிவுகள் கிடைக்கப்பெறினும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ் நாடக வரலாற்றிலும் இந்நூல்பற்றிய பதிவுகள் தவறவிடப்பட்டுள்ளன. 220ஆண்டுகளுக்கு முற்பட்டதும் பழைமையானதுமான ஒல்லாந்தர் காலத்து தால விலாச நூலினை தமிழறிஞர்கள் உள்வாங்குதல் வேண்டும்.

இக்கட்டுரையின் வாயிலாக மூன்று தொகுப்பு நூல்கள் செய்யப்படவேண்டிய தேவை வெளிப்படுகின்றது.

மூலநூலில் கிடைக்கப்பெறும் கவிதைவரிகள், 1850ஆம் ஆண்டுக்குரிய ஆங்கில மொழிபெயர்ப்பு, ஆங்கில மொழிபெயர்ப்புக் குரிய தமிழ் வசன மொழிபெயர்ப்பு, 1940ஆம் ஆண்டு வெளிவந்த சோமசுந்தரப் புலவரின் தாலவிலாசம் ஆகிய அனைத்தையும் ஒருசேர உள்ளடக்கிய ஒரு நூல் வெளிக்கொணரப்படல்வேண்டும். அதன் வாயிலாக எமது தமிழ் இலக்கிய நாடக வரலாற்றின் பரப்புகள் விரிவுபடுத்தப்படல்வேண்டும்.

தால விலாசம், அச்சுவேலி காசிநாதப் புலவரின் தால பாரதம் (தால புராணம்), பனை இராசன் நாடகம், சோமசுந்தரப் புலவரின் தால விலாசம், தால புரத்தார் கீதம், பனைமர சோபனம், பனை நூறு, பனை பற்றிய வாய்மொழிப் பாடல்கள், பனை பற்றிய தனிப்பாடல்கள், 'முற்றத்து ஒற்றைப் பனை' உள்ளடங்கலான நவீனங்கள், 'தொலையும் பொக்கிஷங்கள்', 'வாப்பா வளர்த்த பனை' உள்ளடங்கலான சிறுகதைகள் போன்ற ஈழத்துக்குரிய பனைபற்றிய இலக்கியப் படைப்புகள் அனைத்தும் ஒருசேரத் தொகுக்கப்படல்வேண்டும். பனைகள் சார்ந்த இலக்கியப் படைப்புக்கள் வெளிப்படுத்தும் ஈழத்தவரின் வாழ்வியலும் பண்பாடுகளும் இவற்றினால் நோக்கப் படல்வேண்டும்.

1681 ஆண்டு ரொபர்ட் நொக்ஸ் தொடக்கம் *2001*ஆம் ஆண்டு இத்தாலிய மொழி அறிஞர்கள்வரை ஈழத்தவர்களுக்கும் பனைகளுக்குமான தொடர்பை குறிப்பிட்டுள்ளார்கள். இவை அனைத்தையும் ஒருசேரத் தொகுத்தல்வேண்டும். அத்தொகுப்பில் 'பனைவளம்', 'பனையியல்', 'பனைச் செல்வம்', 'பனையின் பொருளாதார வளம் - வினாவிடைத் தொகுப்பு', 'பனைமரங்களின் மூலம் கிராம முன்னேற்றம்' போன்ற நூல்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

இத்தொகுப்புச் செயற்பாடுகள் ஈழத்தவரின் கலாசாரப் பெறுமதிகளை நிலைநாட்டுவதற்குப் பங்களிக்கும் என்பது உறுதி. அத்துடன் ஈழத்தவரின் இலக்கியப் பாரம்பரியத்தின் இருப்பை நிலைநாட்டவும் இத்தொகுப்பு முயற்சிகள் வழிவகுக்கும். திட்ட மிடப்பட்டு நிறுவனரீதியாக இத்தொகுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப் படல்வேண்டும்.

❍ ❍ ❍

பகுதி – 2

தால விலாசம் –
ஈழத்தவரின்
ஆங்கில மொழிபெயர்ப்பு
(கி.பி.1850)

TALA VILASAM.—ON THE PALMYRA TREE.

INVOCATION TO GANESA.

I invoke Genesa to help in my composition of the work on the Palmira-tree, in the species of poetry called Kali Venpa, and in presenting the same to the people on the sea-girt earth.

O thou lady, resembling Laksimy who is seated on the beautiful red lotus! thou of sweet expressions whose breasts are under stays, and whose person resembles a peacock! hear me tell you in brief an account of one out of the eight hundred items of things connected with the Palmira-tree, which is emphatically the Kalpa-tree* of the earth. The various productions of earth created by Brahma came short of men's wants; and there was wanting one substance, which had an entire power of assuaging hunger, removing disease, feeding the illiterate and enriching the house; and therefore the people of the earth were as unfixed (in all their worldly prospects) as the water on the leaf of a lotus, made Poojas and prayed to Sivan for assistance; Sivan heard their prayers and asked of Vishnu with displeasure the reason of his not having daily attended to his duty of preservation? To which Vishnu, in great obeisance, with one arm folded and the fingers of the other put upon his under-lip—replied, there is no fault in my course of duty, but the present amount of things created on the earth by Brahma is insufficient. Upon which, Sivan, in great displeasure and anger, looked at Brahma and asked of him the reason of his not having created things to satisfy all the wants of the people of the earth. Brahma

தமிழ் மின்னூல் - தேசிகவிநாயகம்பிள்ளை

trembled and perspired (through fear) and putting his fingers under his underlip (as a sign of great respect to a superior) and in faltering language, replied, My Lord, who is the operative cause and immaculate! What I have already created is all that I knew. Parvathi (Sivan's consort) then said to Sivan, there is fault neither in Vishnu nor in Brahma, and thus appeased his anger. Sivan, upon this, after meditating in his own mind, said to Brahma, hear me tell you something to supply the wants of the people of the Earth. Create the Kalpa tree upon the earth also. At the direction of the crescent-moon-adorned Sivan, Brahma created in abundance Palmira-trees in the three countries of Panathar, Panyoor, and Panangasdoor, and called Palmira-trees by the names of Pootpady, Ponthy, Panay, and Talam. Let me now tell you the various produce and use of the Palmira, much extolled by the people of the earth. If you carefully turn up the ground by hoeing, hedge it and bury Palmira-stones in rows at the distance of eight spans one stone from the other, they will return favour, and will never fail, just as the renown of the wise of spiritual blessing will not. When the stones sprout and become tender plants, if you take good care of them not to let the goat, sheep, cow and wild cow feed upon the plants, they will grow in strength, and with the swords of their stems, armed with indented jags on both their sides, they will destroy the iron age of poverty and protect the earth. When the Palmira tree grows to the height of two bones length, the roots of the stems that fastened the tree will get dry and fall off in season. A female child and a Palmira tree, if carefully nur-

* The Kalpa-tree is one of the five fabled trees of the world of Indra noted for its liberality; grants to any body who goes to it whatever he is in need of; is the tree of life in Paradise.

tured, will become fruitful in their tenth year. The principle of the blossom (of the Palmira-tree) developes itself during the months of November, and December; the blossom shoots forth as hoarded treasure for time of exigency in the months of January and February ; and then the tender fruits are formed ; and of these tender fruits, some do fall from the trees out of season. People collect and cut them to pieces, and give them to the cows to eat. Sins may thus be removed, and the cows will give plenty of milk. When the tender fruits of the trees have become larger, they are some of them separated from the trees, the integuments and the adjacent parts are pared off, and the pulpy kernel within is drunk by the people. The drink will remove various diseases, *simulque supprimet vires gonorrheæ*. Had the celestials and the anti-celestials ever tasted of the pulpy kernel, they would never have gone to churn the milky occean. When the fruits approach towards ripening, they are some of them separated out of the trees, laid in the sun for a while, the pulp is then pared and boiled in cocoanut-milk mixed with the husked seeds of pulse, and is then eaten. When the fruits have become well ripened, they fall from the trees, give an agreeable odour ; the integument is severed, the fruit is then roasted in fire, washed in pure water and the skin is peeled off; press the fruits with the hands and swallow the pulp of it ; even honey, milk, and sugar will not resemble the pulp in sweetness: the fruits may also be sprinkled with reserved Palmira-pulp-water and then be used. Also the pulp is expressed, mixed with rice flour, boiled in oil or ghee, and then used as sweet-cakes. The Pandal is made in a suitable place, and a certain spot near the Pandal is nicely daubed with cow-dung. Poojah is offered to Ganesa, his aid is implored, and then the ripe fruits are washed in water, broken by beating with a wooden mallet, and the skin is peeled off; the fruits are then put in Kadaca-baskets, reserved Palmira-pulp-water is poured in,

தமிழ் விவரம் - தேசிய பாலுச்சாற்றுத்தொழில்

well pressed with the hands; the stones are carefully expressed, and put in another Kadaca basket and undergo a similar process a second time; the stones are then thrown out in a heap, the fibres of the fruits that lie blended with the expressed pulp are carefully separated by a brush, made of the twigs of certain shrubs; the pulp is then poured upon a mat of about twelve cubits long which is spread on a Pandal; well spread over the surface of the mat, and left to dry in the sun during the day time; in the evening the mat is folded, in the following morning it is unfolded. The above mentioned prbcess is continued for about eight days, and when the pulp has become well dried and an inch deep, salt and pieces of Perandi-shrub are sprinkled over, lines are drawn with weed hook (or sickle), or a like instrument, at the distance of a span from one another, the dry pulp is pared off from the mat, and then left to dry for a day more in the sun; the square pieces of dried pulp are then folded, put in a Kooday-basket and laid over a Paran-shelf, to be smoked and to serve for future use.

Hear me, O Lady, the process of dried pulp which a rich man would use. In the pulp expressed from good edible Palmira-fruits, powder of Palmira-jaggry, and ghee are put, and the pulp is then as before spread over the mat, and when the dried pulp gets half an inch deep, it is as before pared off, and reserved for time of want. Another process of preserving dried Palmira-pulp is the following: the dried Palmira-pulp is cut into small pieces and steeped in Palmira molasses, mixed with roasted powder of pepper, sessamum seeds, rice, and cummin; preserved in an earthen pot, the mouth of the pot is well luted, and then these sweet cakes are used by the country people in their feasts. Hear me again: the pulp that is expressed out of the Palmira fruits that fall scantily in the latter part of the fruit season, is spread over the mat for two days and left to dry very well; the dried pulp is then peeled off into sheets. An offering of Cakes made of the flour of the

edible Palmira-roots and of dried Palmira pulp, together with other fruits, is made in Palmira plantations to Ganesa. The dried Palmira-pulp that was preserved is protected without contracting grubs that may spoil it, if the owners are devoted to Ganesa during the time. The dried Palmira pulp that is thus preserved may better serve the people as food during the rainy season. Griping of the bowels, diarrhæa and lodging of small fish bones in the esophagus may be removed by eating dried Palmira pulp. The stones of the Palmira fruits that are eaten, and of those that are expressed, are divided into four sorts, put in the ground into beds of 4, 5, 6, or 8 layers, covered with earth, watered twice during the months of August and September, and the edible Palmira-roots are dug out in the months of January and February. When there is no rain the skin of the root is peeled off, its head is pared away, the root is cloven into halves, its foot is nipped out, left to dry in the sun, the foot is nipped off in the second and third also, the halves are carefully stirred up to dry well, and then collected and preserved. Such dried edible Palmira roots are powdered and sifted, salt water is sprinkled upon the flour, fish, herbs, and other fruits are added to it and mixed together, the paste is then put into a conical Ola basket and steamed; the poor people eat much of it and get strength.

If the flour of the dried edible Palmira-root * be mixed with Cocoanut milk, salt water and fish, and if the paste be steamed, the cake when eaten, will daily add strength to any body. The middle pieces of the Odial are cleared of their outer fibrous skin, soaked in water, then dried and powdered; if the flour be mixed with the Cocoanut milk, salt water, fish and herbs, and if the paste be steamed and then ghee be added to it, the cake will indeed be very sweet; if certain fruits and pungent substances be added to the above, the cake will be of an agreeable taste. If the Odial flour be mixed with the scrapings of the kernel of the Cocoanut, and powdered rice, cummin, pepper, and

தமிழ் விஸ்வகர்மா - தேசிகம் பாலசுப்ரமணியம்

chilly ; if the paste be steamed and the cake be broken and dried, it can be preserved for two months No other cakes will resemble the above. Sweets are more agreeable to cakes of the above description. If curds, milk, ghee, and Cocoanut milk be added to the paste of the Odial flour, and be steamed, the cake, when used, has the power of *retinendi seminis virilis in corpore sine pollutione* ; *conferendique facultatem horas in thalamo jugali protrahere*, and increasing muscular strength ; the person will not be reduced by labour. I shall now tell you, Lady, of the different kinds of gruel made of the Odial flour: in the boiling water in which fish, chillies, lobsters, acid, grits of rice, have previously been put, in proportion, by little quantities, the Odial flour ; stir it, and when it gets boiled and reaches a proper consistency, take the vessel out of the hearth and use it ; if certain healthful (i. e, that contributes to the improvement of one's health) fruits be added to the above, any body may use it. If in water, salt and grits of rice and small fish be put first, and when they get boiled, if Odial flour, mixed with acid and powdered chillies, be poured in and properly stirred,—the gruel infused, will be a very healthful one; if herbs and certain fruits be added to the above, the gruel will be a very good one. The people, when they dig the edible Palmira roots, take some of them and roast in the fire, remove the outer covering and then eat the roots by mastication. * If the roasted roots be exposed to the dew and be eaten on the following morning, it will be very nice indeed. The edible Palmira roots are boiled by steam in water and eaten ; also such boiled roots are like the Odial mentioned before, dried in the sun and preserved for future use. The accompaniments that are to be taken with roasted and boiled edible Palmira roots, are, Cocoanut, salt, and pungent substances.

People may eat the sprout that just shoots forth out of the Palmira stone ; the stone, in a certain stage, may be roasted in the fire, then be broken and the kernel be

* Dried edible Palmira roots are called Odial.

eaten. There is no comparison to the curry or broth made of very tender edible Palmira roots and Cocoanut milk. The kernel that is formed in the Palmira stone in its advanced stage will be very sweet.

Hear me now tell you the use of the Palmira stone shell. It will ever serve as fuel for cooking ; if the shell be partially burned and the inner coat of the shell be removed, it will serve as coals to smiths ; it will also serve as a powder box, tinder box and a pill-vial.

When the Palmira tree puts forth blossom, it is rendered fit for yielding the juice by pressing it between two poles, and by beating it with the handle of a knife ; its end is properly incised, a vessel is adjusted to it, and toddy is collected ; if the toddy be presented in Poojah to Sacti, excellent boons may be obtained. Toddy if drunk, *excitabit amorem et cupidinem in illis, qui in rem uxoriam incumbent.* If taken daily, it will increase one's muscular strength and give a gloss to his person ; if used by children in small quantity it will remove itch and many other diseases. If powdered loadstone and scoria of iron and file be put into the pot that is attached to the incised blossom, and the toddy collected in such a pot be drunk for seven days in the morning,—asthmatic affections, bloated cheeks and the like, may, at once, be removed—If, in the morning and evening, the pot that should be attached to the blossom be baked in fire, *qui succum in hac olla collectum bibet, diutius in copulatione morabitur.* If shell-lime be put in the pot that should be attached to the blossom, and the toddy be used, hunger, thirst, languor, and laziness will be removed ; heat in the constitution will be destroyed and coolness be created. Toddy will be very sweet if powdered pepper be put in it and boiled. If toddy be boiled nicely, and if slices of ash-colored pumpkin be boiled in it,—the broth, when it is seasoned and used, will create a wonderful power to the stomach to digest any amount of food. If, when the south-wind blows, toddy be collected, strained and poured in a

தமிழ் மின்னூல் - சிவகாமி பாலசுப்ரமணியன்

pot, and be boiled until it gets the consistency and colour of Margosa-oil—then be poured either in a new pot or a vessel of Palmira leaf, the mouth well covered, and the vessel be then exposed to smoke or buried in the earth—the Palmira mollasses will be candied (i. e,) crystalized : these crystals, if taken into the mouth, will suppress asthma and phlegm.

If the boiled toddy in the above process be still boiled until it sticks a little to the bottom of the vessel and bubbles are formed, you can have Palmira sugar.

If toddy be so boiled that, if it be taken in a ladle, it will not be drawn into threads, but will break,—take it out of the fire, put a little quantity of rice flour and mix it well with the mollasses and pour the mollasses in pots and little Ola cases; you will have Palmira Jaggry:

If, in the above said stage of consistency, powdered cummin, pepper, and sessamum seeds all well roasted be put in the mollasses; and if you steadily continue mixing and agitating the mollasses, you will have a powder, which may be used to assuage thirst; such a powder, if it be of the toddy of a male Palmira tree, may be taken as medical accompaniments; may also be given to motherless babes. If the proper consistency be not pitched, it will get as hard as Sugar-Candy.

When Toddy ceases to be drawn by the close of March, there will be fruits during the following five months, and during the remaining months, there will be dried Palmira pulp. So, the produce of the Palmira tree is had in every month of the year, and the edible Palmira-root can be had in all the months of the year. The Palmira-tree is able to bestow bountifully, and one may eat of its produce in the three seasons of meal every day. The mind will ever love it more than any other thing. If a person only with gratitude to the tree eat of its produce twice or more a day, he will have all the benefits of those that spend the day in fasting and devotion, and eat only once a day.

Old Palmira branches are cut out of the tree every other year, left to dry in the sun a day, made flat by pressing them in a certain manner, and then used for covering and fencing. When the Olahs get mouldered, they are used for manuring rice fields &c. The inner fibrous bark of the Palmira stem is used in making cords and ropes, &c. but the outer bark is not so strong as the inner. The Palmira stem is used in making cots, hedging, and covering an ola book. The white tender Palmira leaves are used for making baskets of several kinds, as for storing Paddy, for keeping cloths, betels and arecanuts, sacred ashes and other things, for measuring grain, oil and the like, for making cases of several species, for drawing water, and for making mats of different kinds. The ribs of the Palmira Olas are used for making cords and ropes, winnowing baskets, and brooms &c. The tender Palmira leaves are used for making umbrellas, fans, dolls, vessels to eat from, and rolls for the perforated ears.

The Olahs are used in writing the Veds, Shasters, and Agamas, in making deeds, conveyances, dowries, and other presents, in writing interest bonds, in drawing magic diagrams, in writing letters to friends at a distance, in drawing accounts.

The names of Palmira trees are numberless, such as, the white, the tall, the short, the black-fruited, &c. The roots of Palmira branches that attach themselves to the tree, and the webs that lie interwoven between them, fall off in season, and may be used as fuel. If the several ingredients of the male Palmira tree be all collected, rubbed into a paste and mixed with cow-milk, *et si aliquis, qui vult cum fœmina rem habere, hoc bibet, ille tempus copulationis protrahere poterit.* The tender pith of the Palmira tree that lies in the top part of the tree is eaten by the people.

தமிழ் விஸ்வம் - தேடுதல் பாலம் தந்தது

The timber of the tree is used for building temples, palaces, houses, alms-houses and inns; also as wall-plates, beams, posts, door-frames, pegs, laths and the like. The stump of the tree may be made hollow and used for keeping salt. The produce of the tree may procure to some, fields, houses, and jewels. Peace of mind may be secured; one may live in prosperity and great renown. The Palmira stone, though boiled or roasted in fire, will still sprout; it is therefore of a superior quality.

The Pandava kings have regained their lost kingdom, because they have eaten Palmira fruits when in the wilderness. The Pandya King and others are said as having worn garlands of Palmira blossoms.

பகுதி – 3

தால விலாசமும்
தால புராணமும்
(தால பாரதமும்)

9 'தால புராணம்' (தால பாரதம்) ஓர் அறிமுகம்

தால விலாசம் பற்றிய இக்கட்டுரையிலே **தால புராணம்** நூல்பற்றிய விபரங்களைத் தருவது பொருத்தமில்லாதபோதும் பிற்காலத்து வரலாற்று ஆசிரியர்களால் ஏற்படுத்தப்பட்ட சில மயக்கங்களையும் குழப்பங்களையும் தெளிவுபடுத்துவதற்காக தால புராணம் பற்றிய குறிப்பை இங்கு எழுதவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

தால புராணம் :

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் வசித்த **காசிநாதப் புலவர்** பற்றிய தகவலை நாம் **ஆ. சதாசிவம்பிள்ளை**யின் **பாவலர் சரித்திர தீபகம்** *(1886)* நூலிலே காணமுடிகிறது. கி.பி. 1796இல் நீலகண்டர் என்பவருக்கு மகனாகப் பிறந்த காசிநாதர், கி.பி. 1854ஆம் ஆண்டு உயிர் நீத்ததாக சதாசிவம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். காசிநாதப் புலவர், **தால புராணம் (பனங்காய்ப் பாரதம்)** என்னும் நூலைப் பாடியுள்ளார் என்றும் அந்நூல் தமது கைகளுக்கு எட்டவில்லை என்றும் தமது பாவலர் சரித்திர தீபக நூலிலே, சதாசிவம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சிதைவடைந்த நிலையிலேயே காசிநாதப் புலவரின் சில பாடல்கள் சதாசிவம்பிள்ளைக்குக் கிடைத்துள்ளன என்பதையும் அறியமுடிகிறது. சிதைந்த நிலையின் காரணமாக நூலிலுள்ள பாடல்களில் ஒன்றையேனும் அவர் தமது நூலிலே தரவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

காசிநாதப்புலவர். — **Kasinatha Pulavar.**

இவர் யாழ்ப்பாணம் அச்சுவேலிக் கோயிற்பற்றில் வசித்த சோதிடசாஸ்திரிகளுள் ஒருவர். நீலகண்டர் என்னும் ஒருவர்க்கு அன்பான புதல்வர். கிறிஸ்தாப்தம் களகூசும் ஞூ பிறந்து கஅருசம் ஞூ இறந்தனர். சோதிடசாஸ்திரத் தேர்ந்து அதில் வல்லராம்இவர்,இலக்கிய ஆராய்ச்சியும் உடையராய் விளங்கினமை பூண்டு தலபுராணம் எனும் ஓர் பாடல் இயற்றினர். அதைப் பனங்காய்ப் பாரதம் என வழக்கத்திற் கூறுவர். யாம் அதனைக் கண்ணுற்றிராமையால் அதனது நயநட்டங் கூறுதல் கூடாதேனும்,கற்பக விருட்சம் எனப் பெயரிய தெய்வவிருட்சத்திற்கு இலக்காய் எம்மூரிலிருக்கும் பனை மரப்பெருமையும் அவற்றின் பிரயோசன நயங்களுமே அப்பாடற் பொருளாம் எனத்துணிகின்றோம். பனைப் பெருமை கூறினும், ஓர் போது ஒருவகைக் கேலிப் பாடலாகவும் இருக்கலாம். அப்புராணத்திற் சில விருத்தங்கள் கைகெட்டியும் கரலிகித எட்டுப்பிரதிகளில் நடபடியாய்ப் புகும் அபத்தங்களிலுலோ அன்றி வாய்ப்பாடத் தவறுலோ அசை சீர்கள் நேராய் ஓசை சிறப்பாயிராமை பற்றிப், பாடல் மாதிரிக்காகவேனும் அதனைத் தராதொழிந்தோம். இப்பாடல் அல்லாது பல தனிப் பாக்களையும் இவர்பாடினர் என்று கேள்வி.

– ஆ.சதாசிவம்பிள்ளை, 1886 பாவலர் சரித்திர தீபகம், 7ஆம் மீள்பதிப்பு – 2006 (பக். 95–96)

ஆ.சதாசிவம்பிள்ளை
(1820-1895)

1970ஆம் ஆண்டு **ஈழத்துத் தமிழ் நூல்வரலாறு** என்னும் நூலினை எழுதிய F. X. C நடராசா அவர்களும் காசிநாதப் புலவர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவர், காசிநாதப் புலவர் பாடிய நூலில், வாய்மொழிக் கேள்வியால் கிடைக்கப்பெற்ற நான்கு பாடல்களைத் தந்திருப்பது சிறந்த விடயமாகும்.

பாலதுண்டு தவிராது பசியகலப் பலவமிர்தம் பாலித் தோங்கும்
ஆலமுண்ட கண்டனென நின்னீழ மண்டலத்தே அன்பாய்க் காய்க்க
தாலமெனும் பாரதத்தைச் சாற்றினான் வையநிலை தாங்கு வேலி
நீலகண்ட னருள்பாலன் காசிநாதன் வானிநகர் வாக்கினானே.

அரிதனை பரப்பி மட்டை அம்மென நிரப்பி ஆடை
அரிதுகி லுடுத்து தாலம் அளவிலா துயிரைக் காக்க
அரியது கண்டு வெட்கித்து அளந்திடு படியை விட்டு
அரியுரு வடிவெடுத்து அவனியிற் புகுந்தா ரன்றே.

அவனியிற் புகும் போது அழித்திடும் தாழி பண்ணை
உவன மோடு அரவு தற்பை ஊறுந்துயில் பாலோ டாடை
அவமிலாப் பதியில் ஆயன் அங்கையில் வைத்த ஈங்கும்
தவமது பெற்ற நாரி தன்னையு மீந்தா ரன்றே.

அவ்வை யுறுகதை அவ்வளவி னிற்க
பவ்வமதிறுதல் பக்குவ மாக
கவ்வை யோடுற்ற கருப்பநீர் காய்ச்சி
செவ்வி தியாய்ப் பனங்கட்டிகள் சேர்த்தார்.

– F.X.C. நடராசா, 1970, ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு, குமரன் புத்தக இல்லம், மீளச்சு – 2012 (பக். 84–85)

தால புராணமா? அல்லது தால பாரதமா? :

காசிநாதப் புலவர் பாடிய நூலினை ஆ. சதாசிவம்பிள்ளை கண்டிருக்கவில்லை என்பதையும் அதில் சில விருத்தங்களே தமக்குக் கிடைத்துள்ளன என்பதையும் தெளிவாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆ. சதாசிவம்பிள்ளையின்

'தால புராணம் எனும் ஓர் பாடல் இயற்றினார்'

என்கின்ற கூற்றிலிருந்து காசிநாதப் புலவர் பாடியது தால புராணம் என்னும் முடிவை பலர் மேற்கொண்டுள்ளனர். அதே தருணம் சதாசிவம்பிள்ளையின் குறிப்பில்,

'அதைப் பனங்காய்ப் பாரதம் என வழக்கத்திற் கூறுவர்'

என்கின்ற கூற்றையும் நாம் ஆழ்ந்து நோக்கல்வேண்டும். இதன்படி **பனங்காய்ப் பாரதம்** என்னும் பெயரும் இதற்கு உரியது என்பது புலனாகிறது. 1970ஆம் ஆண்டு F. X. C நடராசா தந்த பாடல்களில் முதலாம் பாடலில் வருகின்ற கீழ்வரும் பகுதியை இவ்விடத்தில் நோக்கல் பொருத்தமானது.

'தாலமெனும் பாரதத்தைச் சாற்றினான்'

இதன்படி **தால பாரதம்** என்னும் பெயர் இந்நூலுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை **அகச் சான்றால்** அறியமுடிகின்றது. மேலும் ஆ. சதாசிவம்பிள்ளை குறிப்பிட்டுள்ள 'அதைப் பனங்காய்ப் பாரதம் என வழக்கத்திற் கூறுவர்' என்னும் கூற்றும் அகச்சான்றுடன் பொருந்திவருகின்றது.

ஆ. சதாசிவம்பிள்ளையவர்கள் காசிநாதப்புலவரின் நூலினைக் கண்டிருக்கவில்லை என்னும் அவரின் கூற்றுக்கமைய கிடைக்கப் பெறும் தகவல்களின் அடிப்படையில் காசிநாதப் புலவரின் நூலின் பெயர் **தால பாரதம்** என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

காசிநாதப் புலவர் பாடிய நூலின்பெயர் தால புராணம் என்றும், அது **புராணம்** என்னும் வகைமையின் பாடுபொருளை மாற்றியமைக்க முற்பட்ட ஒரு படைப்பு என்றும் குறிப்புகள் ஈழத்து இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. இதை மேலும் இவ்விடத்தில் விரிப்பது இக்கட்டுரையின் நோக்கமன்று.

ஈழத்துப் புலவரில் மூவர் புராணமென்னும் இலக்கிய வடிவத்தின் பொருளை மாற்றியமைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். புராணநெறியினைப் புதுவழியில் இட்டுச்செல்ல அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி காத்திரமானதாக அமையவில்லை என்று கருதியவிடத்தும் தமிழ் இலக்கிய சரிதத்தில் அவர்களுக்குக் குறிப்பிடத்தக்க இடமுண்டு என்பதனை மறுப்பதற்கில்லை. அவர்கள் அச்சுவேலி நீ. காசிநாதப் புலவர் (1796 - 1854), கோப்பாய் வே. இராமலிங்கம் , வண்ணார்பண்ணை சுப்பையர் என்பராவர்.

– பொ. பூலோகசிங்கம், 1970,
தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்
குமரன் புத்தக இல்லம் – இரண்டாம் பதிப்பு, 2002 (பக். 54)

❍ ❍ ❍

10 தால விலாசமும் தால புராணமும் (தால பாரதமும்) – சில பிரச்சினைகள்

தால விலாசமும், தால புராணமும் இருவேறு படைப்புகள் என்ற தெளிவுடன் இவைபற்றிய மேலும் சில தகவல்களை நாம் தற்பொழுது நுணுகி நோக்கலாம். அச்சுவேலியில் வசித்த **காசிநாதப் புலவர்** பற்றிய தகவலை நாம் **ஆ. சதாசிவம்பிள்ளையின்** பாவலர் சரித்திர தீபகம் (1886) நூலிலே காணமுடிகிறது. ஆ. சதாசிவம்பிள்ளையின் குறிப்பின் பின்னர் 1953ஆம் ஆண்டு **ந.சி. கந்தையாப்பிள்ளையின் தமிழ்ப் புலவர் அகராதி** என்னும் நூலிலே காசிநாதப் புலவர் பற்றிய குறிப்பைக் காணலாம். ஆ. சதாசிவம்பிள்ளை குறிப்பிட்ட **பனங்காய்ப் பாரதம் (தால பாரதம்)** என்னும் பெயரைக் குறிப்பிடாமல் **தால புராணம்** என்னும் பெயரை மாத்திரம் ந.சி. கந்தையாப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

ந.சி. கந்தையாப்பிள்ளை
(1893 - 1967)

காசிநாதப் புலவர்: (18ஆம் நூ.) இவர் கும்பகோணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பனையின் பயன்களைக் கூறுவதாகிய தாலபுராணம் செய்தனர். இது கலிவெண்பா யாப்பிலமைந்தது. நூறு ஆண்டுகளின் முன் தெனண்ட் என்பார் எழுதிய இலங்கை (Ceylon) என்னும் நூலின் இரண்டாம் பகுதியில் இந்நூலின் ஆங்கிலமொழி பெயர்ப்புக் காணப்படுகிறது.

– ந.சி.கந்தையாப்பிள்ளை, 1953, தமிழ்ப் புலவர் அகராதி, அமிழ்தம் பதிப்பகம் – 2003 (பக். 63)

*1886*ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஆ. சதாசிவம்பிள்ளையின் குறிப்புடன் *1953*ஆம் ஆண்டு எழுதப்பட்ட ந.சி.கந்தையாப்பிள்ளையின் குறிப்பினை ஒப்பிடும்போது எமக்கு முன்நிற்கின்ற சில சிக்கல்களை இவ்விடத்தில் ஆராயவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

01 – காசிநாதப் புலவரின் ஊர் – அச்சுவேலி
அருணாசலப் புலவரின் ஊர் – கும்பகோணம்

பாவலர் சரித்திர தீபக நூலின்படி நீ. காசிநாதப் புலவர் என்பவர் **அச்சுவேலி**யில் வசித்துள்ளார் என்று அறியமுடிகிறது. இருப்பினும் ந.சி.கந்தையாப்பிள்ளையின் கருத்துப்படி காசிநாதப்புலவர் என்பவர் **கும்பகோணத்தில்** பிறந்தவராகக் குறிப்பிட்டுள்ளார்.

*1970*ஆம் ஆண்டு **ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு** என்னும் *F.X.C* நடராசா அவர்களின் நூலில் வாய்மொழிக் கேள்வியால் கிடைக்கப்பெற்ற முதலாவது பாடலின்வாயிலாக நாம் பின்வரும் முடிவினைப் பெறமுடிகின்றது.

– **"..... வேலி நீலகண்டன் அருள்பாலன் காசிநாதன்" என்பதனால் காசிநாதர் இப்பாடலைப் பாடியுள்ளார் என்பதும். இவரின் தந்தையார் பெயர் நீலகண்டன் என்பதும். இவர்கள் "வேலி" என்னும் பதம்கொண்ட ஊருடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரியவருகின்றது. ஆ. சதாசிவம்பிள்ளையவர்கள் காசிநாதப்புலவர் அச்சுவேலியில் வசித்தவர் என்பதால் "வேலி" என்பது "அச்சுவேலி"யைக் குறிக்கின்றது என்பதை உய்த்தறியமுடிகின்றது.**

இது இவ்வாறு காணப்படும்போது ந.சி.கந்தையாப்பிள்ளை யவர்கள் காசிநாதப்புலவரை கும்பகோணத்தில் பிறந்தவராகக் குறிப்பிட்டமைக்கு *Sir James Emerson Tennent* அவர்கள் *1859*ஆம் ஆண்டு எழுதிய *Ceylon* என்னும் நூலே மூலமாய் அமைந்தது என்பது புலனாகிறது.

Ceylon என்னும் நூலின் இரண்டாம் பாகத்திலே *Tennent* அவர்கள் பனைமரத்தினைப் பற்றிய நூல் ஒன்று தமிழில் உள்ளதாகவும் அதனை *Ferguson* என்பவர் தமது நூலிலே மொழி பெயர்த்து உள்ளடக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

> So multifarious are the uses of the palmyra and its products to the natives of the countries favoured by its growth, that the Hindus have dedicated it to Ganesa, and celebrate it as the "Kalpa tree," or "tree of life," of their Paradise. A Tamil poem, of which a translation is given by Mr. FERGUSON[1], professes to describe the creation of the palmyra, and the "eight hundred and one" uses to which the tree is applied.
>
> [1] *Essay on the Palmyra, &c.* Appx. p. 1. The Tamil author was ARUNACHALAM, of Combaconum, in Tanjore. In his hands the 801 uses of the palm dwindles into a very small proportion of that number.

– Sir James Emerson Tennent, **1859**
Ceylon - Vol - II , **(பக். 520–521)**

ந.சி. கந்தையாப்பிள்ளையவர்கள், *Ceylon* நூலில் காணப் பட்ட குறிப்பினைப் பின்பற்றி சில தவறான முடிவுகளை மேற்கொண் டுள்ளதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

- **"பனைமரம் பற்றிய கவிதை" என்று Ceylon நூலில் குறிப்பிட்டதை ந.சி. கந்தையா அவர்கள் தாலபுராணத்தையே (தால பாரதத்தையே) Tennent குறிப்பிட்டுள்ளார் என்று தவறாக முடிவுசெய்துள்ளார். ஆனால் Tennent அவர்கள் தமது நூலில் பனைமரம் பற்றிய தமிழ் நூலின் பெயரையோ அல்லது தால புராணம் என்னும் பெயரையோ எவ்விடத்திலுமே குறிப்பிடவில்லை.**
- **ந. சி. கந்தையாப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோன்று Tennent அவர்களின் Ceylon நூலில் தமிழ்க் கவிதைக்கான ஆங்கில மொழிபெயர்ப்பு உள்ளடக்கப்படவில்லை என்பது Ceylon நூலினைப் பார்ப்பவர்களுக்குத் தெளிவாகும்.**
- **"Ferguson அவர்களின் பனைமரங்கள் சார்ந்த கட்டுரை அடங்கிய நூலின் Appendix 1 பகுதியில் தமிழ்க் கவிதையின் ஆங்கில மொழி**

பெயர்ப்பு காணப்படுகின்றது". என்று Tennent தமது Ceylon நூலில் குறிப்பிட்டதை. கந்தையாப்பிள்ளை அவர்கள் Ceylon நூலிலேயே மொழிபெயர்ப்பு காணப்படுவதாகத் தவறுதலாகப் பதிவுசெய்துள்ளார்.

- 1850ஆம் ஆண்டு Ferguson அவர்கள் எழுதிய Description Of the Palmyra Palm of Ceylon என்னும் இலங்கைக்கும் பனைமரங் களுக்குமான தொடர்பை விபரிக்கும் நூலின் Appendix-1 பகுதியில் தமிழ்க் கவிதையின் ஆங்கிலமொழிபெயர்ப்பை நாம் காணமுடிகிறது. இந்த ஆங்கில மொழிபெயர்ப்பைப் பார்த்தவர்களுக்கு Tennent மற்றும் Ferguson ஆகியோர் காசிநாதர் பாடிய தால புராணத்தைப் (தால பாரதம்) பற்றி அவர்கள் எழுதவில்லை என்பதும் தெளிவாகும்.

- பனைமரங்கள் சார்ந்த "தால விலாசம்" என்னும் நூல் பற்றியே Tennent மற்றும் Ferguson ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர் என்பதை மூலங்களைப் பார்த்து உறுதிசெய்யமுடிகின்றது.

- அச்சுவேலி காசிநாதர் எழுதிய தால புராணத்தை (தால பாரதத்தை) மனதில் நிறுத்திய கந்தையாப்பிள்ளை அவர்கள். அருணாசலப் புலவரின் விபரங்களை காசிநாதப் புலவரின் விபரங்களாக மயக்கம்கொண்டுள்ளார். அருணாசலப் புலவரின் தால விலாசத்தையும் காசிநாதப் புலவரின் தால புராணத்தையும் (தால பாரதத்தையும்) ஒன்றென மயங்கியுள்ளார்.

- இருப்பினும் அருணாசலத்தின் தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை ந.சி.கந்தையாப்பிள்ளை. பார்வையிட்டிருக்கவேண்டும் என்பதை உய்த்தறியமுடிகிறது. கலிவெண்பா என்னும் பாவினத்தில் இப்பாடல் அமைந்துள்ளதென ந.சி. கந்தையாப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பின் பாயிரப் பகுதியிலேயே கலிவெண்பா பற்றிய தகவலை நாம் காணமுடிகிறது.

- 'Tennent அவர்கள் அருணாசலம் என்பவரின் பெயரை காசிநாதப் புலவரின் பெயருக்குப் பதிலாக பிழையாகத் தந்துள்ளார்' என்று எண்ணிய ந.சி. கந்தையாப்பிள்ளையவர்கள் 1953இல் தமது நூலில் அருணாசலம் என்னும் பெயரையே குறிப்பிடாமல்விட்டுள்ளார். அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பில் தால புராணமானது (தால பாரதமானது) தாலவிலாசம் என்று தவறாகத் தரப்பட்டுள்ளது என்று எண்ணிய ந.சி. கந்தையாப்பிள்ளை. தாலவிலாசம் என்னும் பெயரைக் குறிப்பிடாமல் தால புராணம் என்ற பெயரை மாத்திரமே குறிப்பிட்டுள்ளார்.

நூற்றுக்கணக்கான தமிழ்ப் புலவர்களின் விபரங்களைத் 1953ஆம் ஆண்டு 'தமிழ்ப் புலவர் அகராதி' என்ற முன்னோடி முயற்சியாக தொகுத்தளித்த ந.சி. கந்தையாப்பிள்ளையவர்கள், அச்சுவேலி காசிநாதப் புலவரை கும்பகோணம் அருணாசலம் என்று மயங்கியமையை நாம் பெரியதொரு தவறாகக் கருதமுடியாது.

நூற்றுக்கணக்கான புலவர்களின் விபரங்களைத் தொகுக்கும் போது, அவற்றுக்குள் ஒரு தகவல் என்றளவிலான முக்கியத்துவமே காசிநாதப் புலவருக்கு வழங்கப்படும். அதேவேளை தால விலாசம் பற்றிய இக்கட்டுரையில் இவற்றை விரிவாக ஆராய்வது தேவையானதொன்று. நோக்கத்தின் அடிப்படையில் விபரங்கள் குவிமையப்படுத்தப்படுவதால் இவை எமக்கு துலக்கமாகின்றன. இக்கருத்தினை உள்வாங்கிப் புரிந்துகொண்டு தகவல்களை அவை எழுந்த பின்னணியில்வைத்து நாம் அளவிடல்வேண்டும்.

02 – காசிநாதப் புலவரின் காலம் – 19ஆம் நூற்றாண்டு
அருணாசலப் புலவரின் காலம் – 18ஆம் நூற்றாண்டு

கி.பி. 1796இல் **நீலகண்டர்** என்பவருக்கு மகனாகப் பிறந்த அச்சுவேலி காசிநாதர் கி.பி. 1854ஆம் ஆண்டு உயிர் நீத்ததாக ஆ. சதாசிவம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இவ்வடிப்படையில் தால புராணம் (தால பாரதம்) பாடிய காசிநாதரை 19ஆம் நூற் றாண்டுப் புலவராகவே நாம் கணித்தல்வேண்டும். ஆனால் ந.சி. கந்தையாப்பிள்ளையவர்கள் காசிநாதரை (அதாவது தாலவிலாசம் பாடிய அருணாசலத்தை) 18ஆம் நூற்றாண்டுப் புலவராகக் குறிப்பிட்டுள்ளார். இதற்குக் காரணம் தால விலாசம் பாடிய புலவரின் காலம் 19ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலமாகும்.

சைமன் காசிச்செட்டியவர்கள் தால விலாசம் நூல் பற்றி 1834ஆம் ஆண்டு தமது சிலோன் கசெற்றர் நூலிலே குறிப்பிட் டுள்ளமை, தால விலாசம் பாடிய அருணாசலத்தின் காலம் 18ஆம் நூற்றாண்டு என்பதற்கு ஒரு வலுவான சான்றாக அமைகின்றது.

1979ஆம் ஆண்டு ஆ. சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகத்துக்கு **ஆராய்ச்சிக் குறிப்புகள்** எழுதிய பேராசிரியர் **பொ. பூலோகசிங்கம்** அவர்கள், இக்காலவேறுபாட்டுப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளார் என்பதை குறிப்புகள் காட்டுகின்றன.



'தமிழ் புளூராக்' நூலில் இடம்பெறத் தவறியவர்களுள் காசிநாதப் புலவரும் ஒருவர். ந. சி. கந்தையாபிள்ளை பதினெட்டாம் நூற்றாண்டினரான குப்பகோணம் காசிநாதப்புலவர் என்பவர் கலிவெண்பாவில் இயற்றிய தால புராணத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு தெனண்ட் பிரபு (Sir Emerson Tennant) எழுதிய 'இலங்கை' எனும் ஆங்கில நூலின் இரண்டாம் பகுதியிற் காணப்படுவதாகக் கூறியுள்ளார்[1]. அச்சுவேலி காசிநாதப்புலவர் இயற்றியது விருத்தப் பாவாலானது போலுமே.

– பொ. பூலோகசிங்கம், 1979, பாவலர் சரித்திர தீபகம் – ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் பகுதி – 2, (பக். 92)

புலவர்களின் காலக்கணிப்புகளில் மிகவும் துல்லிய விபரங்களை தரும் பேராசிரியர் **பொ. பூலோகசிங்கமவர்கள்** இவ்விடத்திலே தாம் கண்டுகொண்ட கால இடைவெளியால் **இரு காசிநாதப் புலவர்கள் இருந்துள்ளார்கள் என்றும் அவர்கள் இருவருமே தால புராணம் என்னும் நூல்களை இயற்றியுள்ளனர் என்றும் தவறான முடிவுக்கு வந்துள்ளார்.**

ந.சி. கந்தையாப்பிள்ளையவர்களின் குறிப்பை வைத்துக் கொண்டு காசிநாதப் புலவர் பற்றிய தமது ஆராய்ச்சிக் குறிப்புகளை எழுதிய பொ. பூலோகசிங்கமவர்களின் குறிப்புகளில் தவறுகள் தொடருவதைக் காணலாம். பொ. பூலோகசிங்கமவர்களுக்கு Ceylon நூலினைப் பார்வையிடும் சந்தர்ப்பமோ அல்லது Ferguson அவர்கள் எழுதிய Description Of the Palmyra Palm of Ceylon என்னும் நூலினைப் பார்வையிடும் சந்தர்ப்பமோ கிடைத்திருக்கவில்லை என்று நாம் இவ்விடத்தில் கருதவேண்டியுள்ளது.

ஆனால் கிடைக்கும் ஆதாரங்களின் அடிப்படையில், கும்ப கோணத்தைச் சேர்ந்த 18ஆம் நூற்றாண்டுப் புலவரான அருணாசலம் என்பவர் தால விலாசம் பாடியுள்ளார் என்பதையும் அச்சுவேலியைச் சேர்ந்த 19ஆம் நூற்றாண்டுப் புலவரான காசிநாதர் என்பவர் தால பாரதம் (தால புராணம்) பாடியுள்ளார் என்பதையும் இவ்விடத்தில் மீண்டும் வலியுறுத்துவது பொருத்தமாகும்.

03 – காசிநாதப் புலவர் – தால பாரதம் – விருத்தப்பா
அருணாசலப் புலவர் – தால விலாசம் – கலிவெண்பா

அச்சுவேலி காசிநாதப் புலவரின் தால புராணம் (தால பாரதம்) பற்றி ஆ. சதாசிவம்பிள்ளை கூறுகையில், 'சில விருத்தங்கள் கைக்கெட்டியும்' என்று கூறியுள்ளதைக் கவனத்தில் நிறுத்தினால்

இந்நூல் விருத்தங்களால் ஆனது என்பது ஆதாரபூர்வமாக தெரிய வருகின்றது. 1970ஆம் ஆண்டு F.X.C நடராசா அவர்கள் தந்துள்ள நான்கு பாடல்களும் இதற்கு வலுச்சேர்க்கின்றது. இவ்விரு தகவல்களும் 1979ஆம் ஆண்டு பொ. பூலோகசிங்கமவர்கள்,

'அச்சுவேலி காசிநாதப் புலவர் இயற்றியது விருத்தப்பாவாலானது போலும்'

என்று குறிப்பிடுவதற்கு காரணமாகின எனலாம்.

ஆனால் 1850ஆம் ஆண்டு எழுதப்பெற்ற தால விலாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பின் வாயிலாக இது கலிவெண்பாவினால் பாடப்பெற்றது என்பது உறுதியாகின்றது.

பாடுபொருள் :

தால விலாசமும் தால புராணமும் (தால பாரதமும்) இருவேறு புலவர்களால் பாடப்பெற்றாலும் அவையிரண்டும் பனைமரங்களின் பயன்களையும் பெருமைகளையும் கூற எழுந்த இலக்கியங்கள் என்பது தெளிவாகின்றது. ஈழத்துக்கும் பனைமரங்களுக்கும் இடை யேயுள்ள மிக நெருங்கிய தொடர்பினால் இவையிரண்டு நூல்களும் மிகவும் போற்றப்பட்டுவந்துள்ளன.

தொகுப்பு :

	தால விலாசம்	**தால புராணம்**
மறுபெயர்		தால பாரதம் பனங்காய்ப் பாரதம்
ஆசிரியர்	அருணாசலம்	காசிநாதர்
ஆசிரியரின் ஊர்	கும்பகோணம்	அச்சுவேலி
ஆசிரியரின் காலம்	18ஆம் நூற்றாண்டு	19ஆம் நூற்றாண்டு
பாவகை	கலிவெண்பா	விருத்தப்பா
பாடுபொருள்	பனை பற்றியது	பனை பற்றியது

❍ ❍ ❍

பகுதி – 4

பனை இராசன் நாடகம் –

(கி.பி.1938)

க. சொக்கலிங்கத்தின்

குறிப்புகள்

ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி

க. சொக்கலிங்கம், எம். ஏ. (இலங்கை)
விரிவுரையாளர்,
கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை

ஆறும் இயல்

நாடகத்திலே புதிய பரிசோதனைகளும் 1973ஆம் ஆண்டிற்கு முன்னும் பின்னும் வெளியான சில நாடக நூல்களும்



க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

(அ) பனை இராசன் நாடகம் - சாம். டி. தம்பு 1938

அழகேசன் என்னும் பனை நாட்டரசனும் அவன் நாட்டுக் குடிகளும் பனையின் பயன்களைப் புறக்கணித்து நவீன நாகரிகத்திலே திளைத்தமை கண்டு சீற்றங் கொண்ட சந்நியாசி ஒருவரின் சாபத்தினாலே பனை நாட்டிலே பஞ்சமும் நோயும் பசியும் தலையெடுக்கின்றன. பனையரசன் இதனை உணர்ந்து சந்நியாசியை நாடிச் சென்று அவரிடம் மன்னிப்புக் கோரியபொழுது அவர், ''பனைப் பிரயோசனத்தை உணர்ந்து பனையைப் பேணினால் மட்டுமே நாட்டிற்கு உய்தி உண்டு'' என்று கூற அவ்வாறே அவன் நடவடிக்கைகளை மேற் கொண்டு நாடு மீண்டும் வசியும் வளனும் பெறுவதைக் கூறுவது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையின்போது பனையின் மகிமை எம் மக்களால் நன்கு உணரப்பட்டது. சீனியையே பயன்படுத்திவந்த பலரும் பனங்கட்டியை நாடிச் செல்லலாயினர். பனாட்டு, கருப்பு நீர், ஒடியல், புழுக்கொடியல், பனம் பழம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதாலே உணவுப் பஞ்சத்தினின்று ஓரளவு விடுபடலாம் என்ற உணர்ச்சி இன்று ஏற்பட்டுள்ளது. சிவநெறிக் காவலரான க. கனகராசா அவர்கள் பனைக்காவலராயும் மாறி யாழ்ப்பாணக் குடாநாடெங்கணும் பனைவிதை நட்டும் பனையைப் பேணியும் வருவதற்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து வரல் யாவரும் அறிந்ததே. பனைபற்றிப் பல்கலைச் செல்வர் க. சி. குலரத்தினத்தைக் கொண்டு நூல் எழுதுவித்து வெளியிட்டு இலவசமாக வழங்கி வருவதும், சோமசுந்தரப் புலவரின் 'தாலவிலாசம்' நூலை வெளியிட்டதும் அவரின் பணிகளிலே குறிப்பிடத்தக்கன.

இற்றைக்கு நாற்பதாண்டுகளின் முன்னரே யாழ்ப் பாணத்தின் கற்பகத் தருவான பனையின் சிறப்புக்களை உணர்ந்து, அதன் பயனை மக்கள் இழந்து வருவதற்காய் வருந்தி அவ்வருத்தத்திற்கு நாடகக்கலை வடிவு தந்ததோடு அந்நாடகத்தை நூல்வடிவிலும் வெளியிட்டுள்ள பிரபல அப்புக்காத்து சாம். டி. தம்பு பாராட்டிற்கு உரியவரே. இவரின் நாடகம் முற்றிலும் பிரசாரநோக்கிலேயே எழுதப் பட்டுள்ளது. ஈழத்திலே எழுதப்பட்ட முழுநீளப் பிரசார நாடகம் இஃது ஒன்றேயாகும்.

பிரசாரத்தின் அடிப்படையிலே எழுதப்பட்ட நாடக மாயினும் அழகசேனன், பூபதி, சந்நியாசி, தவமணி, தனபாக்யம் முதலாக இருபத்து நான்கு பாத்திரங்களைக் கொண்டு கதையமிசங் குன்றுத வகையிலே இந்நாடகம் ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. காட்சிகள் 1ம் சீன் 2ம் சீன் என்றே வகுக்கப்பட்டுள்ளன. தொடக்க வசனம்,

இந்திரேசு : Hello ! Hello !! what's your name ?[6]

. என்று ஆங்கிலத்திலே அமைந்திருத்தல் காணலாம். போலி நாகரிகத்தால் நாட்டின் பழைமையான மரபுகள், நடையுடை பாவனைகள் ஆகியன மாறுகின்ற வகையினைத் தொடக்கத்திலேயே நாடகாசிரியர் இவ்வாறு புலப்படுத்து கின்றார். இந்திரேசு (இங்கிலிஷ் என்ற சொல் மருவி இந்திரேசு ஆகி அஃது ஒருவரின் பெயரைக் குறிப்பதாய் அமைகின்றது. ஆசிரியரின் அங்கதச் சுவைக்கு இந்தப் பெயரமைப்பும் ஒரு சான்று.) இவ்வாறு கேட்கக் கூழுக்குப் பாடி கூறும் பதில் பின்வருமாறு :

கூழுக்குப்பாடி : என்ன ? உந்த இந்திரேசை என்னிலை விடாதை. தமிழிலை பேசுங்காணும். கோப்பியே குடிக்கிறார் ? (கேலிச் சிரிப்புச் சிரிக்கிறார்)[7]

இவ்வாறு ஆங்கிலமொழியைக் கையாள்வதைக் கேலி பண்ணும் நாடகாசிரியர் நூலின் முகப்பட்டையை ஆங்கி லத்திலே அமைத்துள்ளமை வியப்பைத் தருவதாய் உள்ளது.

கூழுக்குப்பாடி என்ற பெயர் நையாண்டியாகக் கையாளப் படாமையையும் இவ்விடத்திற் கருத்திற் கொள்ளல் வேண்டும். 'ஒடியற் கூழுக்குப் பாடுபவன்' என்று பனைப்பயனின் மகிமையைக் காட்டவே இப்பெயரை அவர் ஆக்கியுள்ளார். கிறிஸ்தவ, சைவப் பெயர்களோடு வடலி முதலி, வேட்டை நாயகம், ஊரபிமானி முதலான காரணப் பெயர்களும் வருகின்றன. நோனகாமி, பாறன் சிங்கோ போன்ற சிங்களப் பாத்திரங்களும் நாடகத்தில் உலாவு கின்றன. பாத்திரங்களின் மொழித்திறன், தகுதி என்ப வற்றிற்கேற்ப உரையாடல்களும் அவ்வவ்வகையிலே அமைந் துள்ளன.[8]

பதினைந்து சீன்கள் (காட்சிகள்) கொண்ட இந்நாடகத்தில் நாற்பத்தேழு பாடல்கள் உள்ளன. அவற்றுட் பெரும் பான்மை கீர்த்தனங்களாகவும் சிறுபான்மை விருத்தங்களாகவும் சிந்துகளாகவும் ஆக்கப்பட்டவை. பனைப்பயன்களின் சிறப்புக்களே பெரும்பாலான பாடல்களிலே பொருளாக அமைந்துள்ளன. பாடல்களை யாத்தோர் தமது காலத்திலே பிரசித்திபெற்றிருந்த திரைப்படப் பாடல்களின் மெட்டுக்களையும் ஆங்காங்கே கையாண்டு பாட்டியற்றியிருக்கின்றனர். 'பஜனை செய்வோம் கண்ணன் நாமம்', 'மாயப்பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை' என்ற சிந்தாமணிப் பாடல் மெட்டுகள் கையாளப்பட்டுள்ளன.[9]

நாடகத்தில் வந்துள்ள பாடல்களின் தரத்திற்கும், பிரசாரநோக்கிற்கும் உதாரணமாகப் பின்வரும் பாடலைக் காட்டலாம். (பாடல்களை இயற்றியோர் மூவர். அவர்களின் பெயர்களை முகப்பட்டையிற் காணலாம்)

பாட்டு (ஆலோலம் ... என்ற மெட்டு)

பாவை - 1 : பன்னவேலை பண்பாய்ச் செய்திடுவோம்
பாணிப் பனஞ்சுப் பண்பாகச் செய்வோம்
உண்ணக் கிழங்கொடிய லெடுப்போம்—எங்கள்
ஊருக்குள் விற்றுச் சீவித்திடுவோம்

,, 2 கங்கரிந்தே தும்பெடுத்து விற்போம்—மீதி
காய்ந்த பின்பேவிற காக விற்போம்
சங்கையுள நுங்கரிந்து உண்போம்—ஓலைச்
சார்பினிற் சாயங்கள் தோய்த்து விற்போம்.[10]

சந்தியாசி, அரசனுக்கு விதிக்கும் நிபந்தனைகளாய் வரும் உரைப்பகுதி, நாடகாசிரியரின் உரைச்சிறப்பையும் நோக்கையும் நன்கு புலப்படுத்தும்.

சந்நியாசி : ''முதலாவது,பஞ்சத்தை நீக்கும் இளம்பனைகளைத் தறிக்கக்கூடாது. இரண்டாவது, பனையிலிருந்து வரும் உணவுப் பொருட்களை விலக்காது உண்ண வேண்டும். மூன்றுவது, பனம்வித்து நட்டுப் பயிருண்டாக்க வேண்டும். நான்காவது, அந்நிய

தேசக் குடிவகைகளை ஒழிக்கவேண்டும். ஐந்தாவது, உள்ளூர்ப் பிரயாணத்திற்குக் கார், பஸ், லொறி இவைகளை நீக்கி மாட்டுவண்டியையே பாவிக்க வேண்டும். நெய் வகைகளில் எண்ணெய், தேங்காய் நெய், இலுப்பை நெய், ஆமணக்கு நெய்,பசுநெய் ஆகியவற்றைப் பாவிக்கவேண்டும். இவைகளை நீர் தவருது நடத்தி வைப்பீராஞல் நான் இத்தவத்தைவிட்டு உமது நகர்ப்புறம் வருவேன். இல்லையேல் இத்தவத்தை விட்டுப் பெயரேன்''.[11]

பணப்பிரசாரம் மட்டுமன்றி லஞ்ச ஊழல், பொய் வழக்குத் தயாரித்தல் முதலான தீமைகளையும் நாடகாசிரியர் ஆங்காங்கே சாடிச் செல்வதை அவதானிக்கலாம். மகாத்மா காந்தி சுதேசியத்தை வற்புறுத்தி அதன் மூலமே சுயராச்சியத்தை அடையலாம் என இந்திய நாட்டிலே பிரசாரம் செய்து வந்த காலத்திலே அப்பிரசாரத்தினுல் ஈர்க்கப்பட்ட ஆசிரியர் 'பண இராசன் நாடகத்'தை யாத்தார் என்பதற்கு அவர் இதன் மறு பெயராகச் 'சுவராஜ்' என்பதை வழங்கியுள்ளமையும் சான்றுகும்.

சமய, தத்துவ, அறப்போதனைக் கால நாடக காலப் பிரிவிலே எழுதப்பட்டதாயினும், புதிய நோக்கும் புரட்சி மனப்பாங்கும் அமைந்த இந்நாடகம் பலவகையிலுந் தனித் தன்மை பொருந்தி விளங்குவது குறிப்பிடத்தக்கது.

– க. சொக்கலிங்கம், 1977,
ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சி
(பக். 230–235)

பனை இராசன் நாடகம்

(1938)

க.சி. குலரத்தினத்தின் பனைவளம் நூலிலிருந்து எடுக்கப்பட்ட சில பாடல்கள்

Drama
Entitled
Panai Rajan Nadagam
(Swaraj)
Written
By
Sam D. Tampoe
(Advocate)
Composers
Messrs P. W. Thambirajah
P. Sabapathy
C. A. Dhas
Printed at
St. Joseph's Catholic Press
Jaffna
Copy Right Resrved Priee per Copy 25 cts.
May 1938, [5]

கடகமதிற் பினைந்துகளி காயப்பாய் மேற்
கவிழ்த்தூற்றிப் பரவியது காய்ந்தபின்னே
திடவிரும்புத் தட்டகப்பை தீட்டிக் கீறிச்
செய்யசிறு தட்டுகளாய்ச் செதுக்கியோலைத்
தடவுயரக் கூடையது தன்னிற் போட்டுத்
தாங்குபரண் மேலடுப்பின் சாரல்வைத்த
புடமதுரப் பனுட்டதனைப் புசிப்பையாயின்
புத்துடம்பு பூக்குமிது பொய்யாக் கூற்றே.

— பனை இராசன் நாடகம்

பனையின் பயன்

ஐயனே கேட்டருள்வீர் — எங்கள்
ஆதிப் பனையினரும் பலனைச் சொல்வேன்
மெய்யயர் வானவுடன் — ஓலை
விசிறி கொண்டே விசிறிக் களை தெளிவார்
வீடுகள் வேய்ந்திடுவார் — மற்றும்
வேலியடைக்க மட்டை வரிச்செடுப்பார்
மாடுகளுக் குணவாய் — நல்ல
மழை காலத்தினில் வெட்டிக் கிழித்துவைப்பார்
நுங்கரிந் துண்டிடுவார் — கோலை
நுண்ணிதாய்ச் சீவி யாடு மாட்டுக்கிடுவார்
சங்கையுடன் பனங்காய் — என்றும்
சலிக்காதுண்டு பனட்டு எதுவுஞ் செய்வார்
பன்னங்கள் செய்திடுவார் — நாரிற்
பரிந்து கயிறீர் வாணி பலவுஞ் செய்வார்
இன்னமு மெத்தனையோ — பனையால்
இருக்கு தெடுத்துரைக்கில் இன்றெழியாதே.

— பனை இராசன் நாடகம்

கிழங்குநன் மதுரமாகும் கெட்டியாய்
மலத்தைப் போக்கும்
கழங்கமில் பிட்டுமஃதே காமர்கூர்
கிருமி போக்கும்
பழந்திரள் மலங்குன்மம் போம்
பனங்கட்டி யுண்டாற் கண்டு
முழங்கிய சேடங் குன்ம முதிர்ந்திடா
தடக்கு மன்றே.

— பனை இராசன் நாடகம்

“பனையுணவுப் பண்டமெலாம் பரமாகாரம்
பானைதரும் நீர் குருட்டுப் பார்வை நீக்கும்
தினையளவும் ஐயமிலைச் செவிடும் போக்கும்
தீராத தேமல் சொறி சிரங்கை யோட்டும்
வினைதருமா சலக்கடுப்பை வெட்டை நோயை
வீக்கமழல் வாதமதை வெள்ளை யூற்றைத்
தனையுணவாய்க் கொள்ளுபவன் தனைச்சாராது
தற்காக்கு மதையுண்மின் தரணி யோரே”

— பனை இராசன் நாடகம்

ஓடியற் கூழ்

கொழுக்கியெனும் பூச்சிகளைக் கொலு மொடியற்
கூழினையுண் புழுக்கொடியல் கொறிநீமாலை
வழுக்கிவிழுங் காலைமல வாசலூடே
வைத்தியனுந் தேவையிலை வயிற்றின் கண்ணே
அழுக்கணுவுங் குடலகத்தி லணுகிடாது
ஆகாரம் பசிகடுப்ப வதிகஞ் செல்லும்
கொழுப்பொடியற் புட்டினையுண் கூடவேறும்
குறுமுனிவர் கூற்றிவைகைக் கொள்ளுவீரே.

கிண்டிப் பிடுங்கிக் கிழித்து உலர்த்தி
வாலொடித்ததன் பின்
துண்டப் படுத்தி இடித்து அரித்து
நற் கூழுமிட்டே
வண்டுக்கடி கிழங்காகிடாப்
பூரானதையு மிட்ட
சண்டக் குழம்புக்கு எதிர்வருமோ
சின்னப் பொடியனுமே.

குழம்பு - கூழ்
சின்னப்பொடியன் - குயினையின்

— பனை இராசன் நாடகம்

குறிப்புகள்



"அங்கோர் உலகப் பெருங்கோயில்"

திரு. ஞா. பாலச்சந்திரன் எழுதியுள்ள 'அங்கோர்' உலகப் பெருங் கோயில் என்ற பயண இலக்கிய நூல், சுற்றுலா இலக்கியத்துறையிலே தனித்துவமானது. தனித்துவமான ஒரு சுற்றுலா இலக்கியத்தைப் படிக்கும் அனுபவத்தோடு வாசிப்பு நகர்ந்து செல்வதை உணர முடிகிறது. இத்துறையில் ஒரு புதிய முகிழ்கோலம் (Fashion) தோற்றம் பெறுதலையே இந்நூலாக்கம் வெளிப்படுத்துகின்றது.

– பேராசிரியர் சபா. ஜெயராசா

இதுவரை தமிழில் வெளிவந்த அத்தனை பயண இலக்கியங்களிலும் வேறுபட்டதாக ஞா.பாலச்சந்திரனின் இப்பயணநூல் விளங்குகிறது. "ஆஹா! அற்புதம்!" என்ற சொற்களுக்கு அர்த்தம் கொடுப்பதாக 'அங்கோர்' உலகப் பெருங்கோயில் நூல் விளங்குகிறது. நூலாசிரியரின் ஆளுமைக்கும், திறமைக்கும் இது ஒரு தக்க சான்று.

– பேராசிரியர் துரை. மனோகரன்

"மணிவாசக அணியமுதம்"

திருவாசகப் பாடற்பரப்பில் பயின்றுள்ள உவமை மற்றும் உருவகம் ஆகியவற்றில் தமது உள்ளம் தொட்டவற்றைமட்டும் குவிமையப் படுத்தி, அவற்றின் பொருத்தப்பாட்டை விளக்கியுரைப்பதனூடாக மணிவாசகருக்கு அருகே வாசகரை இட்டுச்செல்லவே ஞா. பாலச்சந்திரன் முற்பட்டுள்ளார். அவ்வாறான முயற்சியிலே தமது பரந்த வாசிப்பு அநுபவத்தையும் கூழல் சார்ந்த அறிவியற் பார்வைகளையும் சிறந்த முறையில் அவர் பயன்படுத்தியுள்ளார்.

இந்நூலாக்கத்திலே முக்கியமாகக் குறிப்பிடத்தக்க அம்சம் அதன் எளிமையான எடுத்துரைப்பு முறையாகும்.

– பேராசிரியர் நா. சுப்பிரமணியன்

மணிவாசகரின் உவமான உவமேயச் சிறப்புகளை தற்காலத்துக்கு ஏற்ப எளிய முறையில் விளக்கவேண்டும் எனக் கருதி கற்பனையாக சிவராமன் என்றொரு பேராசிரியரையும் அவர் திருவாசகம் குறித்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடைமுறை வாழ்க்கைச் செயற்பாடுகளை வைத்து விளக்குவதாகவும் காட்டி மணிவாசகரின் அணியமுதச்சிறப்பைக் காட்ட முற்பட்டிருப்பது ஒரு புதுமையான முயற்சியாகும். ஓர் அரிய சமயக் கருவூலத்தை தற்காலத்துக்கு ஏற்ப எளிமை ததும்ப விளங்கவைக்க திரு. ஞா.பாலச்சந்திரன் மேற் கொண்ட பணி மிகவும் வரவேற்புக்குரியது. பாராட்டத்தக்கது.

– திருமதி அன்னலட்சுமி இராஜதுரை (25–08–15 வீரகேசரி)



"கிரகசார எண்ணல் (கி.பி.1506)"

ஞானம் பாலச்சந்திரன் ஈழத்துத் தமிழிலக்கிய உலகிற்கு தருகின்ற நூல்களைக் கண்டு பிரமித்து நிற்கின்றேன். தமிழ் ஆய்வு, தமிழியல் ஆய்வாக பரிணமித்துள்ள இக்காலகட்டத்திலே, ஞா. பாலச்சந்திரன் தருகின்ற நூல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவர் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்குப் 'புதிய ஒளி' பாய்ச்சும் பணியில் ஈடுபட்டுள்ளார். கி.பி. 1506 ஆம் ஆண்டு வெளியாகிய 'கிரகசார எண்ணல்' என்னும் வானசாஸ்திர நூல் இப்போதுதான் முதன்முறையாக எமது பார்வைக்குக் கிடைக்கின்றது.

– பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா



"சைமன் காசிச்செட்டியின் அகராதி முயற்சிகள்"

எந்த நிறுவனத்தினதும் ஆதரவின்றித் தன் அறிவாற்றலை வளர்த்துக்கொண்டு பெறுமானமிகு ஆய்வுகளில் ஈடுபட்ட காசிச்செட்டி, நிறுவனங்களால் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளைத் தன்சொந்த முயற்சியால் நிறைவேற்றியுள்ளார். ஆனால், அவரது பிரமிக்கவைக்கும் பங்களிப்புகள் உரிய அங்கீகாரம் பெறாது மறக்கப்பட்டும் ஓரோவழி மறைக்கப்பட்டும் கிடக்கின்றன.

ஞானம் பாலச்சந்திரனின் இவ்வெளியீடு காசிச்செட்டியின் அகராதி முயற்சிகளையும் அத்துறையில் அவர் முன்னோடித் தமிழராய்த் திகழ்ந்தவாற்றையும் குவிமையப்படுத்துவதாய் இருந்தாலும், அவரது பல்துறைப் பங்களிப்புக்களின்பாலும் வாசகர் கவனத்தைத் திசைமுகப்படுத்துவதாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

– பேராசிரியர் சி. தில்லைநாதன்

"யாழ்ப்பாண மன்னர் நிறுவிய தமிழ்ச்சங்கம்"

முச்சங்க காலத்திலிருந்து தமிழர் தோற்றுவித்த சங்கங்கள் பற்றிய ஒரு சுருக்கமான பார்வையை ஆசிரியர் இந்நூலில் செலுத்தியுள்ளார். இம்மூன்று சங்கங்களின் பின்னர் நாலாவதாக அமைந்த யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் பற்றிய ஆய்வே இந்நூலின் நோக்காயுள்ளது. யாழ்ப்பாண மன்னர்கள் 13ஆம் நூற்றாண்டிலே நிறுவிய தமிழ்ச் சங்கம் பற்றிக் கிடைக்கும் பெருந்தொகையான தகவல்களை ஆசிரியர் இந்நூலிலே தருகிறார். அளவு சிறியதாயிருப்பினும் காரம் பெரியதாயுள்ளது.

– பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பலரால் அறியப்படாதிருந்த தாலவிலாசம் நூல்பற்றிய முழுத் தகவல்களையும் சேகரித்தது மாத்திரம் அன்றி, அவற்றை அக்குவேறு ஆணிவேறாக ஆய்வுசெய்து, அந்தநூல் பற்றிய பூரணமான பதிவினை ஞானம் பாலச்சந்திரன் தந்துள்ளார். பனை பற்றி வெளிவந்த நூல்களையும், இலக்கியங்களையும், அவை பற்றிய விபரங்களையும் நூலில் தந்துள்ளதோடு, தாலவிலாசம் நூல்பற்றி ஆழமாகவும், அகலமாகவும் தமது நுண்மாண்நுழைபுலம் கொண்டு சிறப்பாக நோக்கியுள்ளார். தமக்குக் கிடைத்த ஆதாரங்களைக்கொண்டு, தமது திட்டவட்டமான முடிவுகளையும் நூலில் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் துரை மனோகரன்

ISBN 978-955-8354-61-2